# தினச்செய்தி

Registered as a Newspaper

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 | பெப். 07-13, 2016 | செய்தி - 19


# குடிகாரர்களுக்கு ஆப்பு

## பொலிஸார் தீவிர நடவடிக்கை



குடித்து விட்டு வாகனம் ஓட்டினால் இனி மறியல் நிச்சயம்! சாரதி அனுமதிப் பத்திரம் தடை செய்யப்படும் ! ஒரு கோப்பையில் குடியிருப்பல்ல. வருங்காலத்தில் மறியல் சாலைகளில் குடியிருப்பு நிச்சயம் உசார்! உசார்! குடித்து விட்டுப் போதையில் வரும் குடிகாரச் சாரதிகளை கைது செய்ய பொலிஸார் தயார் நிலையில். குடித்து விட்டு வாகனம் ஓட்டும் பெரும் குடி வாகனம் ஓட்டும் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் முன் வந்துள்ளனர். இனி வரும் காலங்களில் மதுபானம் விற்பனை செய்யும் மதுபானச்சாலைகள் முன்னால், பொலிஸார் காத்திருந்து, குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களைக் கைது செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 02 இல்

**பண்டாரவன்னியன் எழுச்சியும் வீழ்ச்சியும்** பக். 14

**சிறுநீரகக் கடத்தல் மையமாக இலங்கை** பக். 14

தினச்செய்தி என்றும் உங்களுடன்
T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# வடபகுதி ஆளுநர்

வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ்.பள்ளிகக்ஹார தனது பதவியை இராஜினாமச் செய்ய முன் வந்துள்ளார். இவர் சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இப்பதவியில் இருந்து வருகின்றார்.

2015 ஜனவரி 15 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன் பின், பள்ளிகக்ஹாரவை வடபகுதிக்கான புதிய ஆளுநராக நியமித்தார்.

பள்ளிகக்ஹார 1979 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சில் தனது இராஜதந்திர சேவையை ஆரம்பித்தார். அதையடுத்துப் பல நாடுகளில் அவர் இலங்கையின் ஸ்தானிகராகக் கடமை புரிந்துள்ளார்.

2001ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை, பள்ளிகக்ஹார இலங்கையின் தாய்லாந்து தேசத்திற்கான தூதுவராகப் பதவி வகித்தார். தாய்லாந்து நாட்டின் தூதுவராக மட்டுமன்றி, அவர் லாவோஸ், கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் ஏக காலத்தில் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

தாய்லாந்தில் இலங்கைத் தூதுவராக இருந்த காலத்தில், பள்ளிகக்ஹாரவுடனான தொடர்பு எங்களுக்கு இருந்து வந்தது.

அதையடுத்து 20 ஏப்ரல் 2004ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளராகப் பதவி ஏற்று, 31 டிசம்பர் 2006 இல் ஓய்வு பெற்றார்.

அவர் வெளிவிவகாரச் செயலாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன், இலங்கை அரசாங்கத்தின் சமாதானக் காரியாலயத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமை வகித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக ஒரு வருடம் சேவையாற்றினார். அதையடுத்து பாடங்கள் கற்றல் மற்றும் இன இணக்கம் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பள்ளிகக்ஹார மிகவும் பெருந்தன்மையுடைய அரசசேவகர். மக்களை அணைத்துச் செல்லும் பண்புடையவர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்து, தமிழ் தேசியக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு மதிப பளித்து, இராணுவ சேவையில் இல்லாத பள்ளிகக்ஹாரவை 27.ஜனவரி 2015 இல் வடபகுதியின் ஆளுநராக நியமித்தார்.

இந்தப் பதவியில் ஒரு வருட காலம் இதுவரை இருந்து விட்டார்.

அவர் யாழ்ப்பாணத்திலிருந்த காலங்களில், பொது மக்களின் தினமான புதன் கிழமைகளில் மக்களைச் சந்திப்பதற்காக ஆளுநர் காரியாலயத்தில் இருந்தார். பொது மக்களைச் சந்தித்தார்.

மேலும் முன்பிருந்த ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி இராணுவத்தைச் சேர்ந்தவர்.

அவர் காலத்தில் ஆளுநரின் காரியாலயத்திற்குள் நுழைவதாயின், பல கெடு பிடிகள் இருந்தன.

ஆனால், பள்ளிகக்ஹார ஆளுநராக வந்த பின்னர், எந்த விதமான தங்கு தடைகளுமின்றி, ஆளுநர் காரியாலயத்திற்குப் பொது மக்கள் சென்று வரக்கூடியதாக இருந்தது.

பள்ளிகக்ஹாரவைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான றெஜினோல்ட் கூரே புதிய ஆளுநராக நியமிக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டணியினர் இராணுவத்தைச் சேர்ந்த எவரையும் வடபகுதி ஆளுநராக வர விரும்பமாட்டார்கள். இந்த அரசாங்கமும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து, இராணுவ சேவையிலில்லாத ஒருவரை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், மேல் மாகாணத்தில் தமிழரான கே.சீ.லோகேஸ்வரனை ஆளுநராக நியமித்ததைப் போல , வடமாகாணத்திற்கும் பொருத்தமான ஒருவரை, அதுவும் குறிப்பாகத் தமிழரை, ஆளுநராக நியமிக்க முன்வராதது மனதுக்கு உறுத்தலாகத் தான் உள்ளது.

காலம் கனியும். வடபகுதிக்கு தமிழர் ஒருவர் ஆளுநராக வருவார் என எதிர்பார்ப்போம்.

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# குடிகாரர்களுக்கு ஆப்பு!...

இது சம்பந்தமாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர குறிப்பிடுகையில்,

"குடிபோதையில் வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும். இவ்வாறு குற்றம் செய்பவர்களைப் பார்த்துக் கொண்டு பொலிஸார் சும்மா இருக்க மாட்டார்கள். நடவடிக்கை எடுப்பார்கள்." எனத் தெரிவித்தார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும், பொலிஸ் பேச்சாளருமான ருவான் குணசேகர "தினச்செய்தி" க்குக் கருத்துத் தெரிவிக்கையில், "குடிபோதையில் மோட்டார் சைக்கிள் இன்றேல் கார் மற்றும் மூன்று சக்கர. வாகன ஓட்டுநர்கள் மீது வருங்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தீவிர நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

"இது சம்பந்தமாக, காங்கேசன் துறையிலுள்ள சிரேஸ்ட பொலிஸ் மா அதிபரிடம் கலந்தாலோசிக்கத் திட்டமிட்டுள்ளோம்."

அவர் மேலும் தெரிவிக்கையில், "மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் மதுபானச்சாலைகள் முன்னால் பொலிஸாரை நிறுத்தி, குடித்து விட்டுக் குடிபோதையில் வெளியே வாகனத்தில் வரும் போது, அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு காங்கேசன் துறையிலுள்ள வடபகுதிக்கான உதவிப் பொலிஸ் மாஅதிபருடன் கலந்துரையாடவுள்ளோம்."

"தற்சமயம், பொலிஸார் பல கடமைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இருந்த போதிலும் இனிவரும் காலங்களில் வாரத்தில் சில நாட்களில் குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள் சம்பந்தமாக விசேட நடவடிக்கை எடுக்கப்படும்."

"உதாரணமாக, வாரத்தின் சில நாட்களில் மாவட்டத்திலுள்ள மது விற்பனை நிலையத்திற்கும் மது விற்பனை சாலைகளிற்கு முன் பொலிஸாரை விசேட கடமையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்."

"இவ்வாறு கடமையிலீடுபடுத்தப்படும் பொலிஸார், மதுபானசாலைகளில் மது அருந்திவிட்டு போதையில் வெளியே வந்து, வாகனம் ஓட்டுநர்களை மடக்கிப் பிடித்து அவர்கள் குடித்திருக்கிறார்களா? என்பதை உறுதிப்படுத்தியவுடன் உடனடியாக அந்த வாகன ஓட்டுநரை பொலிஸ் வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்து, காரியாலய நேரமாயின், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தல் அல்லது குறிப்பிட்ட பகுதி பொலிஸ் மஜிஸ்ரேட் (நீதவான்) முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்."

"அது மாத்திரமன்றி நீதிமன்றத்தில் தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கும், நீதிமன்றத்தில் தண்டனை வழங்குவதற்கும் பொலிஸார் சிபாரிசு செய்வார்கள்."

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாகத் தடை செய்யுமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைப்போம், "என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்தார்.

"குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவதனால் வீதி விபத்துக்கள், யாழ்மாவட்டத்தில் சிறிது சிறிதாகப் பெருகி வருகின்றது. விபத்தினால் உயிர் இழப்புக்கள் நடைபெறுவது வேதனைக்குரியதாகும்.

அதைத் தடுத்து நிறுத்தி மக்களைப் பாதுகாப்பது பொலிஸாரான எமது கடமையாகும்."

"குடித்து விட்டு வாகனம் ஓட்டுவது, அதிவேகமாக வாகனம் ஓட்டுவது, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனம் ஓட்டுவது, வாகனக் காப்புறுதி இல்லாது வாகனம் ஓட்டுவது, மற்றும் ஒரு வாகனம் இன்னொரு வாகனத்துடன் போட்டி போட்டுக் கொண்டு தலை தெறித்த வேகத்தில் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.

இவ்வாறான குற்றங்களைப் புரிபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் "தினச்செய்தி" க்குத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ் மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி, மாணிக்க வாசகர் இளஞ்செழியன்,"மது போதையில் வாகனம் செலுத்திய குற்றம் தொடர்பாக வழக்குகள் அதிகரிப்பதாகச் சுட்டிக் காட்டி, அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் குடிபோதையில் வாகனம் ஓட்டும் சாரதிகளை, மதுபானச்சாலைகள் , மற்றும் மது விற்பனை செய்யும் நிலையங்களில் வைத்துக் கைது செய்யுமாறு கூறியுள்ளார்.

"குடித்துவிட்டு மதுபானச் சாலைகளில் இருந்து வெளியில் வந்து மது போதையில், மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களைச் செலுத்துவோரை மடக்கிப்பிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், அவர் முன்னிலையில் வந்த ஒரு வழக்கு விசாரணையின் போது குறிப்பிட்டார்.

"மது போதையில் வாகனம் ஓட்டும் இளைஞர்கள் மற்றும் ஏனைய சாரதிகளை மறித்து அவர்கள் தொடர்ந்தும் வாகனம் செலுத்தவிடாது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்ய வேண்டும்" என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

மது போதையில் குடித்துவிட்டு வரும் பெரும் குடிகாரர்களால் வீட்டில் மனைவி, பிள்ளைகள் மிகவும் கஸ்டப்படுகிறார்கள். என்று தெரியவருகின்றது.

"இன்று முதல் குடிக்கமாட்டேன் சத்தியமடி தங்கம்" என்று பெரும் குடிகாரர்கள் போதையில் உளறுகின்றனர்.

இதுவே அவர்களின் தினசரி ஒப்பாரி ஆகும். மறுநாள் தொட்ட குறை, விட்ட குறை, அதே குடி, அதே வெறி, வீட்டில் பொண்டாட்டி, பிள்ளைகள் எல்லோருக்கும் அடி, உதை. இந்நிலை மாறவேண்டும்.

பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்தால், குடும்பங்களில் நிம்மதி நிலவும் எனத் "தினச்செய்தி"யைத் தொடர்பு கொண்ட பல இல்லத்தரசிகள் தெரிவிக்கின்றனர். அவர்கள் பொதுவாக குடிகாரர்களால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்கள் ஆவார்.


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly Newspaper Advertisement Rate Card**

| PagesSizes | (col/cm) | Black & White | Color |
| --- | --- | --- | --- |
| Full page | 08x40 | 50000 . 00 | 60000 . 00 |
| Half page | 08x20 | 25000 . 00 | 30000 . 00 |
| Qatar page | 04x20 | 12500 . 00 | 15000 . 00 |
| Per col/cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front strip ad | 10x5 | | 10000 . 00 |
| Front height ad | 4x15 | | 12000 . 00 |
| Per col/cm | 8x8 | | 15000 . 00 |
| **Ear space** | | | |
| Front Page | 8x8 cm | | 25000 . 00 |
| Back page | 8x8 cm | | 20000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black & White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

**Per col/cm 1x1 Black & White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்
T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# பதவி விலகுகிறார் வடக்கின் ஆளுநர்



தாம் இணங்கிக் கொண்ட காலப்பகுதிக்கு மேலதிகமாகவே, பணியாற்றி விட்டதால் தான், வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து விலகிச் செல்ல தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார், எச்.எம்.ஜி.எஸ்.பாலிஹக்கார.

இது தொடர்பாக அவர் இந்திய ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடுகையில்,

“ஆளுனராக நியமனம் வழங்கப்பட்ட போது, ஆறு மாதங்கள் இந்தப் பணியில் இருப்பதற்கே இணக்கம் தெரிவித்திருந்தேன்.

நான் இணங்கிக் கொண்ட காலப்பகுதியை நிறைவு செய்துவிட்டேன், உண்மையில் நான் இப்போது மேலதிகமாகத் தான் தங்கியிருக்கிறேன்.

இந்தப் பதவியை விட்டுப் போவதன் பின்னால் வேறு எந்த விடயங்களும் இல்லை. எனது ஓய்வுக் காலத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுனராக இவர் கடந்த ஒரு ஆண்டாகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் யோசித கைது விவகாரம் ஆர்ர்வு

லெப்.யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டது தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யோசித ராஜபக்சவின் கைது பற்றிய தகவல்களை, தேசிய பாதுகாப்புச் சபைகூட்டத்துக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

அதற்கு, ஒரு ஆண்டாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னரே, யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டதாகவும், சிஎஸ்என் தொலைக்காட்சியின் தலைவராக அவர் செயற்பட்டதை உறுதிப்படுத்தும், 12,000 மின்னஞ்சல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

அப்போது, அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரைக் கைது செய்வதற்கு முன்னர், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியும், பிரதமரும் வலியுறுத்தியுள்ளனர்

# புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை கண்காணிப்பதற்கு பொறிமுறை

விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை கண்காணிப்பதற்கான பொறிமுறையை அரசாங்கம் வலுப்படுத்த வேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, எஞ்சிய விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை விடுதலை செய்வதற்கு முன்னர், இந்த கண்காணிப்பு பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

“இராணுவப் புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பு வலுப்படுத்தப்படாமல், விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்கள் விடுவிக்கப்படுவதால், நாட்டின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்.

2009 மே மாதம் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், 5000 விடுதலைப் புலிகள், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அவர்களின் பின்னணி குறித்தும், விடுதலைப் புலிகளுடனான தொடர்புகள் குறித்தும் நாம் விசாரணை நடத்தினோம்.

அவர்களில், குறைந்தளவு தொடர்புகளை வைத்திருந்தவர்கள், தெரிவு செய்யப்பட்டு, புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்பட்டனர்.

2015 ஜனவரியில் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது, விடுதலைப் புலிகளின் 273 தீவிர செயற்பாட்டாளர்கள் சிறைகளில் இருந்தனர். அவர்களில், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களும், கொழும்பில் பல்வேறு தாக்குதல்களுக்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்களும் அடங்குவர். இவர்களை விடுவிப்பது பாதுகாப்புக்கு மோசமான அச்சுறுத்தலாகும்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவர்கள் அரசியல் கைதிகள் அல்ல, தீவிரவாதிகள்.

இவர்களைக் கைது செய்வதற்கு சிறிலங்கா இராணுவம் மிகப் பெரிய தியாகங்களைச் செய்துள்ளது. இவர்களை எப்படிக் கைது செய்தோம் என்று தெரியாமல், இவர்களை விடுவிக்க வேண்டும் என்று சிலர் இலகுவாக கூறுகின்றனர்.

ஆனால் அரசாங்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். விடுவிக்கப்பட்ட பின்னர், இவர்களைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியம்.

இவர்கள் பற்றிய இராணுவப் புலனாய்வு அமைப்புகளின் சரியான தகவல்களை பெற்று, ஆபத்துக்களை அரசாங்கம் ஆராய வேண்டும்.

இல்லாவிட்டால், இது ஒரு ஆபத்தான முடிவாக இருக்கும். நாட்டின் பாதுகாப்பே அரசாங்கத்தின் மிக உயர்ந்த முன்னுரிமையான விடயமாக இருக்க வேண்டும்.

2009இல் நாம், விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக தோற்கடித்தோம். அந்த அமைப்பின் 12 ஆயிரம் போராளிகள், அமைதியான குடிமக்களாக இருக்கின்றனர்.

ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள், விடுதலைப் புலிகளின் கொள்கையை பரப்புகின்றனர். அதனை இன்னமும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு, சில புலம்பெயர் பிரிவுகள் விரும்புகின்றன. எனவே, விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சம்பளம் இன்றேல் போராட்டம் வெடிக்கும்

(கொழும்பு)

வாக்குறுதி அளிக்கப்பட்ட 2,500 ரூபா சம்பள உயர்வு இம்மாத சம்பளத்துடன் சேர்க்கப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் மாபெரும் தொழிற்சங்கப் போராட்ட மொன்றை முன்னெடுக்கப்போவதாக அரச சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்த அச் சம்மேளனத்தின் தலைவர் டபிள்யூ.எம்.பியதாச, அரசாங்கம் வாக்குறுதியளித்தவாறு தனியார்துறையினருக்கும் 2,500 ரூபா சம்பள உயர்வு இந்த மாதம் முதல் வழங்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் வசந்த ஹந்தபான்கொட உட்பட பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# லைலா சுருக்கு வலைகளின் தடைகள் நீக்கப்படமாட்டாது

(கொழும்பு)

லைலா மற்றும் சுருக்கு வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை எச்சந்தர்ப்பத்திலும் நீக்கப்படாது என மீன்பிடி வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மீனவப்பிரதிநிகளுக்கிடையில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.



சட்டவிரோத மீன்பிடி முறைமை தொடர்பிலான உத்தரவு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் மீனவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி வளத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பில் மீனவர்களுக்கிடையில் தெளிவின்மை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், குறித்த விடயம் தொடர்பில் மீனவப்பிரதிநிகளுக்கு தற்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

# ஸிக்கா வைரஸ் அச்சம் வேண்டாம்

ஸிக்கா வைரஸ் குறித்து அநாவசிய அச்சமடையத் தேவையில்லை என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பிரேஸில் உள்ளிட்ட ஸிக்கா வைரஸ் பரவியுள்ள நாடுகளுக்கு எவரேனும் பயணம் மேற்கொள்வதாயின், இந்த வைரஸ் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என அந்தப் பிரிவின் பணிப்பாளரான விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவடன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை உட்பட பிராந்திய நாடுகளில் ஸிக்கா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்கள் குறித்து இதுவரை தகவல்கள் பதிவாகவில்லை எனவும் டொக்டர் பபா பலிஹவடன கூறியுள்ளார்.

இலங்கையில் புகைத்தல் காரணமாகவும் பிறக்கின்ற குழந்தைகளின் தலை சிறியதாகவும், மூளையின் அளவு குறைந்தும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், டெங்கு நுளம்புகளாலேயே ஸிக்கா வைரஸ் காவிச செல்லப்படுவதால், பிரேஸில் போன்ற நாடுகளுக்கு செல்கின்றவர்கள் நுள்மபுக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்வது உகந்ததாகும் என்றும் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் மேலும் எச்சரித்துள்ளார்.

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

***தொடர்புகளுக்கு :***

**தில்லைகட்டி லேன்,**
**சுன்னாகம் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி : 021 7539300**
**தொலைநகல் : 021 7539300**
**இணையம் : thinacheithi@gmail.com**



# அரசகேசரியின் பதில்கள்

கேள்வி: *சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கு சிங்கள தேசியவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறித்து என்ன கூற விரும்புகிறீர்?*




பதில்: எதிர்ப்பது அவர்களின் வழக்கம்தானே?

**நிர்மலா, கொக்குவில்.**

கேள்வி: *சுதந்திரதினத்தன்று வடக்கு,கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனரே. இவர்களுக்கு தீர்வு கிடைக்கமாட்டாதா?*

பதில்: உறவுகள் காணாமற் போயிருந்தால் அரசு தீர்வு வழங்க வேண்டியது அவசியம்.

**றமணன், சம்மாந்துறை.**

கேள்வி:*ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயம் அரசுக்கான அழுத்தமாக அமையுமா? அல்லது இதுவும் ஒரு பயணத்துடன் நின்றுவிடுமா?*

பதில்: பொறுத்திருந்து பார்ப்போம்.

**சுபேதர்,வத்தளை.**

கேள்வி: *ஐ.நா.தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது இலங்கையின் நலன்கள் பாதுகாக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளாரே?*

பதில்: அதை நாங்களும் கேட்டோம்.

**றூபன், கொழும்பு.**

கேள்வி: *ஞானசார தேரர், யோசித ராஜபக்ஷ அடுத்தது யார்?*

பதில்: எல்லாமே யூகத்தில்தான் உள்ளன.

**சணத், கெட்டியாவத்த.**

கேள்வி: *கைதான யோசித குழந்தை என அவரது சித்தப்பாவான கோத்தாபய கூறியுள்ளாரே?*

பதில்: அப்படியா?

**பிரசாந், வவுனியா.**



கேள்வி: *தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வினை பெற்றுத் தருமென சுமந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளாரே?*

பதில்: சுமந்திரன் நாமம் வாழ்க!

**லூசியஸ், திருகோணமலை.**

கேள்வி: *அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபை தமிழ்மக்கள் பேரவை வெளியிட்டுள்ளது குறித்து?*

பதில்: நான்கு முட்டாள்கள் சேர்ந்து மண்குதிரையை தூக்கிக் கொண்டு போய் ஆற்றில்விட்ட கதையே இது.

**சாளினி, மட்டுவில்.**

கேள்வி: *சுதந்திரதின நிகழ்வில் மகிந்த கலந்து கொள்ளாதது மகன் கைதானதன் கவலையா?*

பதில்: இருக்கலாம்.

**கிரிஸாந், கட்டன்.**

கேள்வி: *யாழில் மீண்டும் அதிகரித்துள்ள கொள்ளைச் சம்பவங்கள் மக்களின் கவனக் குறைவா? பொலிஸாரின் அசண்டையீனமா?*

பதில்: இரண்டுமே.

**சக்தீனா, யாழ்ப்பாணம்.**



# சொன்னார்கள் சொன்னார்கள்...

சுதந்திர நாள் நிகழ்வில், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது ஆச்சரியப் படத்தக்க விடயமல்ல இது புதியதுமல்ல,

ஏனென்றால், தேசிய கீதம் ஏற்கனவே சுதந்திர நாள் நிகழ்வில் தமிழில் பாடப்பட்டு வந்ததே. ஏற்கனவே இருந்த ஒன்று மீள நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே இது பெரிய விடயமல்ல.

மீண்டும் அதனைப் பாடத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிதான். எனினும் இதனை மீள் நடைமுறைப்படுத்தியதால் அரசாங்கத்திற்கும் நன்மையாகும். அதேபோன்று மக்களுக்கும் நல்லதுதான்

எனினும் தமிழ் மக்கள் பிறரின் தயவில் வாழ வேணடியவர்களல்ல.

**இரா.சம்பந்தன்.**

இரண்டு மொழியில் தேசிய கீதம் பாடுவது இனங்களுக்கு இடையிலான பிணைப்பை ஏற்படுத்துவதனை விடவும், விரிசலையே அதிகரிக்கும்

தற்போதைய அரசாங்கத்திற்கு பல்வேறு முக்கிய கருமங்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பு காணப்படும் நிலையில் இவ்வாறான பணிகளில் நேரத்தை செலவிட்டு வருகிறது.

ஜாதிக ஹெல உறுமய கட்சி எந்தவொரு நேரத்திலும் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதனை அனுமதிக்காது

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது அரசியல் சாசனத்திற்கு முரணானது

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையின் காரணமாகவே, தேசிய சுதந்திர தின நிகழ்வுகளில் கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க பங்கேற்கவில்லை.

**நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க**

நல்லாட்சி அரசினால் காணாமல் போனோரின் உறவுகளின் கண்ணீருக்கு பதிலளிக்க முடியவில்லை

இலங்கையினுடைய சுதந்திர தினத்தன்று தங்களது சுதந்திரங்களையும் தங்களது பிள்ளைகளையும் இழந்த தாய்மார்கள் கணவன்மாரை ஒப்படைத்த மனைவிமார்கள் தங்களது நிலையை ஒரு அடையாளமாக அரசாங்கத்திற்கு காட்டுவதற்கு இறங்கியுள்ளார்கள்.



கடந்த ஒருவருட காலமாக இம்மக்களின் கண்ணீருக்கும் துயரத்திற்கும் இந் நல்லாட்சி அரசாங்கத்தால் பதிலளிக்க முடியவில்லை. கடந்த 7 வருடங்களாக தமது பிள்ளைகளை விடுதலை செய்யக் கோரி தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களுக்கும் செவி சாய்ப்பதாய் இல்லை.

சுதந்திர தினத்தை ஒரு கறுப்பு நாளாக அல்லது தமக்கு சுதந்திரமற்ற நாளாக கொண்டாடுவதில் எவ்வித பிழையும் இல்லை என எமக்குத் தோன்றுகிறது.

இலங்கை என்கிற நாடு கண்ணீர் விட்டு அழுத மக்களுக்கு உறவுகளை தேடிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும்.

**சிவஞானம் சிறிதரன்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்போது இலங்கையின் நலன்கள் பாதுகாக்கப்படும் 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் முக்கிய கரிசனைகளிற்கு தீர்வை காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் ஐக்கியநாடுகள் தீர்மானம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காது. எனினும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது நாட்டின் கௌரவத்தையும், படையினரையும் கௌரவத்தையும் அரசாங்கம் காப்பாற்றும்

எமது நாடு தீவாக இருக்கின்றது. எமது நாட்டைச் சூழ கடல்வளம் இருக்கின்றது. ஆகவே எம்மைச் சூழ உள்ள கடல்வளத்தை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன**

தமிழ் மொழியில் தேசியகீதம் பாடப்பட்டமையானது தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சியாக கருதப்படுகின்றது.

தாய் நாட்டை பிரித்துக் கொள்வதில் மட்டும் இதுவரையில் பிளவடைந்திருந்த இன சமூகங்கள், தற்போது தேசிய கீதம் தொடர்பிலும் பிளவடைந்துள்ளன. தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது அரசியல் அமைப்பின் 7ஆம் சரத்தினை மீறும்செயலாகும்.

எனவே, சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் இசைத்ததன் மூலம் ஜனாதிபதி தமக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வரக்கூடிய பாரிய குற்றமிழைத்துள்ளார். தேசிய கீதம் தேசிய கொடி என்பன தேசிய ஒற்றுமையின் குறியீடுகளாகும்.

இவ்வாறான ஓர் காரியத்தை செய்ய முன்னர் 1721 மொழிகள் காணப்படும் அண்டை நாடான இந்தியாவை முன்னுதாரணமாக கொண்டிருக்க வேண்டும். இதுமட்டுமல்லாமல், 1721 மொழி பேசும் இந்தியாவில் பெங்காலி மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்ற நிலையில், குறுகிய அரசியல் நோக்கில் தூரநோக்கின்றி எடுக்கப்பட்ட தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

**உதய கம்மன்பில**

# இழப்பு

அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய கணவன் சுதாகரிடம் காபியையும் பிஸ்கட் தட்டையும் நீட்டியபடியே மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள் வாணி.

“ஹரிணிக்கும் வினோத்துக்கும் நேத்தோட பரீட்சை முடிஞ்சாச்சு. ஊருக்குப் போறதுக்கு எப்ப டிக்கெட் எடுக்கப் போறீங்க?!”

“ஊருக்கா? எதுக்கு? பசங்களுக்குத்தான் லீவு. எனக்குமா லீவு விடுறாங்க?” சிடுசிடுப்பாய்க் கேட்டான் சுதாகர்.

“எங்களை ஊர்ல விட்டுட்டு வந்திடுங்க. நாங்க பத்து நாள் உங்க அம்மா வீட்ல இருப்போம். பத்து நாள் எங்க அம்மா வீட்ல இருப்போம். பசங்களுக்கு லீவுல போரடிக்குமே” என்றாள் வாணி.

“நோ சான்ஸ்! நான் வேற திட்டம் வெச்சிருக்கேன். நம்ம ஹரிணியையும் வினோத்தையும் கம்ப்யூட்டர் கிளாஸ்ல சேர்க்கலாம்னு நினைச்சிருக்கேன். மாலை நேரத்துல மியூசிக் கிளாஸ் போகட்டும். பக்கத்துலயே கராத்தே வகுப்பு இருக்கு. அதுக்கும் சேர்த்துவிடுவோம்.

இப்படி உபயோகமா ஏதாவது கத்துக்கிட்டா படிப்போட வேற திறமையும் வளரும். அதைவிட்டுட்டு கிடைக்குற நேரத்தை வீணாக்கினா எதிர்காலத்துல நமக்குத்தான் இழப்பு. அதைப் புரிஞ்சுக்கோ வாணி.” குரலை உயர்த்திப் பேசினான் சுதாகர்.

“அதையேதான் நானும் சொல்றேன். ஸ்கூல் போய்ட்டேகூட கம்ப்யூட்டர், மியூசிக் கத்துக்கிடலாம். ஊருக்குப் போய் பத்துநாள் இருந்துட்டு வர முடியுமா? சின்ன வயசுலயே தாத்தா, பாட்டி, மாமா, சித்தின்னு உறவுக்காரங்களோட நல்ல உறவை ஏற்படுத்திக்கணும்.

சொந்தக் காரங்களோட எந்தவித ஒட்டுதலும் இல்லாம இருந்துட்டு, படிப்பு வேலைன்னு ஓடி கடைசியில ஒரு உதவிக்குக்கூட ஆளில்லாம வாழ்றதாங்க வாழ்க்கை? சின்ன வயசுலயே குழந்தைகளை உறவுக்காரங்க வீட்டுக்கு அழைச்சுட்டு போய் உறவைக் கத்துக் கொடுக்கலைன்னா பின்னாடி சந்தோஷமான வாழ்க்கையை இழந்துடுவோம். அதுதாங்க பெரிய இழப்பு!” –வாணி சொன்னதில் சுதாகருக்கு ஏதோ புரிய ஆரம்பித்தது.

“ஓ.கே. நாளைக்கு எனக்கும் ஆபீஸ்ல லீவு சொல்லிட்டு டிக்கெட்டுக்கும் ஏற்பாடு செய்யறேன்” என்றான்.



# 14 நாடுகளின் உதவியுடன் அடக்கப்பட்ட போராட்டம்



**இராமலிங்கம் சந்திரசேகர்**
**மத்திய குழு உறுப்பினர்**
**மக்கள் விடுதலை முன்னணி.**

1971, ஏப்ரல் 05ஆம் திகதி அதிகாலையில் மொனறாகலை மாவட்டத்தில் உள்ள வெள்ளவாய பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. இலங்கையின் பெயரளவிலான சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட முதலாவது ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. அது இலங்கையின் முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய எழுச்சியாக வரலாற்றில் பதிந்துள்ளது. 71 ஆயுதப் போராட்டமானது பல பலவீனங்களைத் தன்னகத்தே கொண்டே ஆரம்பமானது. அதற்கு அன்று நிலவிய சில செயற்படுகளே காரணங்கள் ஆகும். அவற்றில் சில சம்பவங்கள் சதிகார கும்பலினால் உருவாக்கப்பட்டவைகளாகும். ஏப்ரல் 05ஆம் திகதி வெள்ளவாய பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதுடன், நாட்டில் ஏனைய பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. அதனால், 05ஆம் திகதி இரவு தாக்குதலுக்குச் சென்ற போராளிகள் பொலிசாரின் எதிர்த்தாக்குதலை சந்திக்க நேரிட்டது. இதனால், போராட்டத்தின் ஆரம்பமே பாரிய இன்னல்களைச் சந்திக்க நேரிட்டது.

1971 ஆயுதமேந்திய போராட்டம் பற்றியும் அந்த எழுச்சியின் மூலமாக இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகள் பற்றியும் அவ் எழுச்சியின்போது தனிநபர்களின் பங்களிப்புப் பற்றியும் பல்வேறு வகையான கதைகள் பரப்பப்பட்டுள்ளன. அவை பல தனி நபர்கள் தங்களது கண்ணோட்டத்திலிருந்து தமது தன்னல பாத்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கூறிய கதைகளாகும். தாம் அந்தப் பொறுப்பிலிருந்து மீள்வதற்காக கூறிய பொய்களும் அரை உண்மைகளும் இத்தகவல்களில் நிறைந்துள்ளன. அதற்குப் புறம்பாக அரச அதிகாரிகளும் எதிர்ப்பு அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொய்யான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்டதுமான, ஏப்ரல் போராட்டத்தைப் பற்றி வெளியான தகவல்களால் நிறைந்துள்ளது. அந்த திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை ஒதுக்கிவிட்டு போராட்டத்தின் பொதுவான விடயங்களை மார்க்சிச கண்ணோட்டத்தில் பார்ப்பது எமது கடமையாகும்.

1971 ஏப்ரல் ஆயுதப் போராட்டத்தில் தொடர்புடையவர்கள் முறையான ஆயுத பயிற்சியோ அல்லது நீண்டகால போராட்ட பயிற்சியோ பெற்றிருக்கவில்லை. அவ்வாறு முறையான பயிற்சி பெறுவதற்கான சந்தர்ப்பமும் அன்று அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. அதனால், தாக்குதலுக்குச் சென்றவர்கள் பலருக்கு ஆயுதத்தை கையாளுவதற்கு மட் டுமான எளிமையான அறிவே இருந்தது. அதேபோன்று போர் நெறிகள் பற்றியோ, போர்க் கலையைப் பற்றிய அறிவோ அவர்களுக்கு



இருக்கவில்லை. அதேபோன்று இதில் கலந்துகொண்ட இளைஞர்கள் தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஆயுதங்களும் ஆரம்ப வகையைக் கொண்டிருந்தன. சேகரிக்கப்பட்ட குண்டு துப்பாக்கிகள் தாங்களாலேயே தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளே அவர்களின் ஆயுதங்களாகும். அவைகளின் இயக்கச் செயற்பாடு மிகவும் பலவீனமாதென்பது போராட்டத்தின் சம்பவங்களில் நிதர்சனமானது.

அது எவ்வாறெனினும் அவர்களிடம் காணப்பட்ட உறுதி, இலட்சிய வேட்கை, போர்க்குணம் மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் உயர்வான நிலையில் காணப்பட்டன. குறுகிய நோக்கத்தை கொண்டிருந்த லொக்கு அத்துல போன்ற சிலரைத் தவிர மற்றய அனைவரும் பொதுவான குறிக்கோளை அடைவதற்காக அதாவது மனித குலத் திற்கு மிகவும் நல்லதோர் சமூகத்தை உருவாக்குவதற்காக உயிர்த்தியா கம் செய்வதற்கு முன்வந்த உண் மையான மனிதர்களாவர். சிறந்த ஆயுதப் பயிற்சியின்றி பின்தங்கிய ஆயுதங்களைத் தாங்கியிருந்தபோதிலும் முதலாவது தாக்குதலிலேயே வீரத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டினர். சரியாகவும் முறையாகவும் பயிற்சி பெற்று ஆயுதமேந்திருந்த அரச இயந்திரத்திற்கு எதிராக போராடி அவர்கள் தமது போர்க்குணத்தையும் தைரியத்தையும் வெளிக்காட்டினர். அது எதிரியை நிலைகுலையச் செய்யுமளவி லான போர்க்குணம், தியாகம், மற்றும் வீரமாகும்.

அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிக்கையின்படி 1971 ஏப்ரல் 05ஆம் திகதி தாக்குதலை ஆரம்பித்த இளைஞர்கள் நாடு முழுவதிலும் 92 பொலிஸ் நிலையங்களை தாக்கியுள்ளனர். அதில் 57 பொலிஸ் நிலையங்கள் சேதமடைந்ததுடன் 05 பொலிஸ் நிலையங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு போராளிகளால் முடியுமாயிருந்தது. அவை தெனியாய, ஊரகா, ராஜாங்கன, கதிர்காமம், மற்றும் வரக்காபொல ஆகிய பொலிஸ் நிலையங்களாகும். ஒரேநாளில் தாக்குதல் ஆரம் பிக்கப்பட்டதால் பொலிஸ் நிலையங்களைக் கைவிட்டு பொலிசார் பின்வாங்கினர். அதன்படி 43 பொலிஸ் நிலையங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

**35 பொலிஸ் நிலையங்களைத் தமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்த இளைஞர்கள்,**

**ஜே.வி.பியின் வரலாறு – 6**

நாடுமுழுவதிலும் 35 பொலிஸ் பிரிவுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இளைஞர்கள், விசேடமாக கதிர்காமம், தெனியாய, வரக்காபொல போன்ற பகுதிக ளைப் போராளிகள் பல நாட்களாக தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அதில் எல்பிட்டிய பொலிஸ் சிறப்பம்சத்தைக் கொண்டிருந்தது. எல்பிட்டிய பிரதேசம் ஒரு வாரமாக போராளிகளின் கட்டுப் பாட்டுக்குள் இருந்தது. மரங்களை வெட்டி தடையரண்களை அமைத்து கொண்டு சென்ற இந்த நிர்வாகத்தை அன்று "மரங்களின் ஆட்சி" (கொட்டங் ஆண்டுவ) என்று அழைத்தனர்.

பாரிய பலவீனங்களின் மத்தியிலும் ஏப்ரல் போராட்டத்தின் முதலாவது தாக்குதலால் அரசாங்கம் பாரிய சவாலை எதிர்கொண்டது. சில இடங்களில் தாக்குதல் தோல்வியடைந்த போதிலும், பல பொலிஸ் பிரதேசங்களை இளைஞர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையினால் பொலிஸார் தமது பொலிஸ் நிலையங்களைக் கைவிட்டு பொலிஸ் தலைமையகத்தில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலைமைகள் அரசாங்கத்தை சவாலுக்குட் படுத்தியது. நிலைமைகளின் பாதகத்தை உணர்ந்த அரசாங்கம் இந்த எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக உலகத்தில் பல்வேறு நாடுகளின் உதவியைக் கோரியது. பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன் னணி அரசாங்கம் வெளி நாட்டு உதவிகளுடன் போராட்டத்தைக் கட்டுப்படுத்தியது.

போராட்டம் ஆரம்பமானது டன், அரசாங்கம் உலகத்தில் பல நாடுகளின் உதவியை நாடியது. அந்த கோரிக்கைக்கு ஏற்ப 14 நாடுகள் யுத்த உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தன. அந்நாடுகள் அமெரிக்கா, சோவியத் தேசம், இந்தியா, பாகிஸ்தான், சீனா, யூகோஸ்லாவியா. சிசர் நாடு, பிரித்தானியா போன்ற நாடுகள் இவற்றில் முன்னணி வகித்தன. அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு "பெல்" ஹெலிகொப்டர்களை வழங்கியது. சோவியத் தேசம் "மிக்" தாக்குதல் விமானங்களை வழங்கியது. சீனா பல ஆயுதங்களை SWTDB எனும் எழுத்துக்களுடனான 5 யுத்தப் படகுகளை வழங்கியது. யூகோஸ்லாவியா "மவுன்டன் ஆட்டிலெறி" எனும் பீரங்கிகளை வழங்கியது. இந்தியா பல ஆயுத தளபாடங்களை வழங்கியதுடன் "குர்க்கா" படைகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் வைத்திருந்தது. இவ்வாறாக வெளிநாடுகளில் கிடைத்த யுத்த தளபாடங்கள், நிதி மற்றும் அரசியல் உதவிகளுடன் பலமடைந்த இலங்கை அரசாங் கம் 1971 போராட்டத்தை முற்றாக முடக்குவதில் வெற்றி கண்டது.

1971 ஏப்ரல் போராட்டம் ஒரு சில நாட்களில் தோல்வியடையும் போது பொலிஸாரும் இராணுவமும் இளைஞர் யுவதிகள் 10000 பேரை கொன்றொழித்தது. 20000 பேர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்ட வர்களில் போராட்டத்தின் போது இறந்தவர்கள் மிக சொற்பமானவர்களே. பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு கொடூர சித்திரவதைகளின் மூலமாகவே கொல்லப்பட்டனர். இவ்வாறு அரசாங்கம் கைது செயப்பட்டவர்களைக் கொலை செய்து, போர்ச் சட்டத்தையும் மீறி கொல்லப்பட்டவர்களின் சடலங்களை ஆறுகளில் மிதக்கவிட்டு, வீதிகளில் டயர் போட்டு எரித்து தனது காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தியது. ஒரு டயரும், பெட்ரோல் ஒரு கலனும், விறகையும் போட்டு கொல்லுவதை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கமாகும்.

கைது செய்யப்பட்டவர்களைக் கொடிய வதை செய்து கொன்று யுவதிகளைக் கற்பழித்து அரசாங்கம் தனது மிலேச்சத்தனத்தை வெளிப்படுத்தும்போது போராட்டத்தில் பங்கேற்ற ஜே.வி.பி இளம் தோழர்கள் தமது வீரத்தை வெளிபடுத்தினர். மரணத்தின் முன்னால் துவண்டுவிழாது அழுது புலம்பாது, மக்களுக்காக, தாம் நேசித்த அரசியல் கோட்பாட்டுக்காக மரணத்தைத் தழுவிக்கொண்ட மனிதர்கள் நிறைந்திருப்பது 71 போராட்டமாகும்.

1971 ஏப்ரல் 05 ஆரம்பமான போராட்டம் ஒரு சில நாட்களில் முடக்குவதில் அரசாங்கம் வெற்றி கண்டது. அவைகள் வெளிநாட்டு பிற்போக்குவாதிகள், சந்தர்ப்பவாதிகளின் உதவியுடனாகும். இந்த போராட்டம் மக்களுக்கு பல சிறந்த பாடங்களைக் கற்பித்துள்ளது. 71 ஏப்ரல் கிளர்ச்சியை நசுக்குவதில் அப்போது எதிர்க் கட்சியிலிருந்த ஐ.தே.க ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு தமது உயர்ந்த பட்ச ஆதரவை நல்கியது. விசேடமாக அப்போது எதிர்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர் ஜயவர்தனா அதில் முன்னிலை வகித்தவராவார்.

(தொடர்ச்சி 21 இல் .....)

# தர்மயுத்தம்

உள்துறைமுக வீதி நிலத்தைத்தான் கைப்பற்றிக் கொள்ள திட்டமிட்ட கிறிஷ்ணதாசன், த.ப.க.இயக்கத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் ஏனைய உறுப்பினர்கள் இருவரையும் தனக்கு ஆதரவாக்கிக் கொள்வதற்காக, உப்புவெளி நிலப்பரப்பில் ஒரு பகுதியை விற்பனை செய்து, அந்தப் பணத்தை பயன்படுத்தி உள்துறைமுக வீதி நிலத்தில் இளைஞர்களுக்கு கைத்தொழில் உட்பட பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்க ஏற்புடையதான இளைஞர் நகர்(Boystown) ஒன்றை அமைக்க முடியும் எனக்கூறி அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டார். த.ப.க.இயக்கத்துக்கு சொந்தமான நிலங்களை விற்பனை செய்வதை தடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த சந்திரகுமார் தரப்பு பல்வேறு தடைகளை ஏற்படுத்தியது. எனவே உள்துறைமுக நிலத்தில் இருந்து சந்திரகுமாரை வெளியேற்ற திட்டமிட்ட கிறிஸ்ணதாசன், சொலமன் அருளானந்தம் டேவிட் மூலமாக த.ப.க. இயக்கத்துக்கு சொந்தமான உள்துறைமுக வீதி நிலத்தில் பூ.சந்திரகுமார் அத்துமீறிப்பிரவேசித்ததாக திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தார்.இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தமது முன்னாள் பதவி செல்வாக்கைப் பயன்படுத்தி பொலிஸார் மூலமாக சந்திரகுமாரை உள்துறைமுக நிலத்தில் இருந்து வெளியேற்றிட கிறிஷ்ணதாசன் திட்டமிட்டு செயலற்றினார் இந்தவிடயத்தில் கிறிஸ்ணதாசன் அறியாததும் எஸ்.ஏ. டேவிட் மறந்து போனதுமான ஆவணம் ஒன்று சந்திரகுமார் தரப்பிடம் இருந்தது. எஸ்.ஏ.டேவிட் த.ப.க.இயக்கத்தின் நெடுங்கேணி நாவலர் தோட்டத்தை பொறுப்பேற்றிருந்த சந்தர்ப்பத்தில் “உழவன்” என்ற பெயரில் விவசாயம் தொடர்பான

**பி.எஸ். குமரன்**

நான்குபக்க சஞ்சிகை ஒன்றை வெளியிட்டிருந்தார் மூன்று இதழ்கள் மட்டுமே வெளிவந்த இந்த இதழின் இரண்டாவது இதழில் த.ப.க.இயக்கத்துக்கு சொந்தமானதும் த.ப.க.கழகத்துக்கு கல்நாட்டப்பட்டதும் நீண்டகாலமாக த.ப.க.இயக்கத்தினரால் கைவிடப்பட்டிருந்ததுமான திருகோணமலை உள்துறைமுக வீதி நிலத்தை பூ.சந்திரகுமாரன் பெரும் போராட்டங்களுக்கு பின்பதாக த.ப.க. இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் அந்நிலத்தில் வெற்றிகரமாக மரவள்ளிச் செய்கையில் ஈடுபட்டுள்ளார் என சந்திரகுமாரை பாராட்டி கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். எஸ்.ஏ.டேவிட்டின் முறைப்பாடு பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு எடுத்தசமயத்தில்




சந்திரகுமார் தரப்பு உழவன் பிரதியை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்ததும் எஸ்.ஏ.டேவிட் தரப்பு முறைப்பாடு பொய் என்பது நிரூபணமாகியது. இதையடுத்து கிறிஸ்ணதாசனின் ஆலோசனையை ஏற்று தர்மகர்த்தா சபை உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசருமான விமாணிக்கவாசகர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சந்திரகுமாரனுக்கு எதிராக பொலிஸார் மூலம் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். வழக்கு இல எம்.சி. 12512 மேற்படி வழக்கில் பூ.சந்திரகுமாரனுக்கு எதிரான முக்கிய சாட்சியாக த.ப.க. இயக்கத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினரால் அழைக்கப்பட்டிருந்தவர்களில் த.ப.க.இயக்கத்தின் முன்னாள் தலைவர் மா.கனகரெத்தினமும் ஒருவராவார். அவர் நீதிமன்றில் வைத்து பூ.சந்திரகுமாரிடம் விபரங்களைக் கேட்டறிந்த பின் தர்மகர்த்தா சபையினரின் நன்றிகெட்டதனமான நடவடிக்கையில் அதிருப்தியுற்று எம்.சி.12512 வழக்கில் பூ.சந்திரகுமார் சார்பான சட்டத்தரணியாக ஆஜரானார். சந்திரகுமாருக்கு எதிராக தர்மகர்த்தாக்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி தமது சாட்சியாக அழைக்கப்பட்ட சட்டத்தரணி மா.கனகரெத்தினம் எதிரிசார்பான சட்டத்தரணியாக ஆஜராக முடியாது என தர்மகர்த்தாக்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவித்து சட்டவாதம் புரிந்தபோதும் சட்டத்தரணி மா.கனகரெத்தினத்தின் பதில் சட்டவாதத்தின் முன் அது செல்லாக்காசாகியது. தொடர்ந்து சந்திரகுமார் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி மா.கனகரெத்தினம் வழக்கில் வெற்றிபெற்றார்.

இதனையடுத்து கிறிஸ்ணதாசனின் தூண்டுதலில் சந்திரகுமாருக்கு எதிராக தர்மகர்த்தாக்கள் சபை சிவில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர். சிவில் வழக்கில் த.ப.க. இயக்கத்தின் ஆரம்பகால ஆவணங்கள், த.ப.க.இயக்கத்தின் யாப்பு விதிகள், பொதுக் கூட்ட அறிக்கைகள். தீர்மானங்கள் மற்றும் கணக்கு வழக்குகள் போன்ற சட்டபூர்வ ஆவணங்களை நீதிமன்றில் முன்வைக்கும்படி கோரத்திட்டமிட்டனர். இவ்விவகாரங்கள் நீதிமன்றில் விவாதிக்கப்படுமேயாயின் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும். அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய நெருக்கடியான சூழல் 1977களுக்குப் பின் தோற்றம் பெற்றதனால் சமரசம் செய்து கொள்ளும்படி தமிழ் ஆயுதக்குழு ஒன்று பூ.சந்திரகுமாரனை வற்

## திருமலையில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம்மறைக்கப்பட்ட உண்மைகள் -6

புறுத்தியது இந்த வற்புறுத்தலின் பின்னணியில் கிருஷ்ணதாசனுடன் நெருங்கிய தொடர்புடைய இந்துமதம் சார்ந்த அமைப்பொன்றின் முக்கியஸ்தரான, சிவபாத சுந்தரம் மறைந்த கரமாக செயற்பட்டார் த.ப.க. இயக்கத்தின் சொத்துக்களை ஏப்பம் விடுவதில் முனைப்புக் கொண்டிருந்த கும்பல்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதே வேளை ஆயுதக் குழு சார்பாக ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும், த.ப.க.இயக்கத்தின் நோக்கம் நிறைவேற்றி வைக்கப்படும் ஆகிய உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன.

தவிர்க்க முடியாத சூழலில் சமரசம் செய்து கொள்ளப்பட்டதன் பின்பதாக, பயிற்சி நிலைய ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் த.ப.க. இயக்கத்தின் இலக்கை வென்றெடுத்தல் ஆகிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படாது உதாசீனம் செய்யப்பட்டது. இவ்விடயத்தில் சமரசம் செய்து வைப்பதில் முனைப்புக்காட்டியவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். எனவே மீண்டும் முரண்பாடுகள் தோற்றம் பெற்ற போதும் சமரசம் சட்டபூர்வமானதால் சூழ்ச்சிகரமான முறையில் பூ.சந்திரகுமாரன் பலவந்தமாக. அந்நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன், பூ.சந்திரகுமாரனுக்கு த.ப.க.இயக்கத்திற்கு சொந்தமான உப்புவெளி நிலத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை வழங்க த.ப.க. இயக்கம் முன்வந்தது. த.ப.க.இயக்கத்தை செவ்வனே இயங்கச்செய்து தமிழ் சமூகத்திற்கு உண்மையாக உழைக்கும் நிறுவனமாக மாற்றியமைப்பதற்காகவே தாம் போராடியதாக தெரிவித்து பொதுச்சொத்தை கையூட்டாக பெறும் யோசனை சந்திரகுமார் தரப்பால் நிராகரிக்கப்பட்டது.

பூ.சந்திரகுமாரனை வெளியேற்றிய சூடு ஆறுமுன்பதாகவே உள்துறைமுக வீதி நிலங்களை கொள்வனவு செய்வதற்காக உயர் பதவிகளில் இருந்தவர்களும் உயர் அதிகாரிகள் உள்துறைமுக வீதி நிலத்தை பார்வையிடத் தொடங்கினர். கிறிஷ்ணதாசன் தலைமையிலான கும்பல் பேரம்பேசுவதில் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கியது. மறுபுறமாக த.ப.க.இயக்கத்தின் உப்புவெளியில் அமைந்துள்ள 86 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருபகுதி நிலங்களை சிலனீஸ் பிரதர்ஸ் செனியோசப் சங்கத்திற்கு 350,000 இற்கு விற்பனை செய்வதற்கான அனுமதியை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் கிறிஷ்ணதாஸன் 31-05-83ஆம் திகதி




பெற்றுக்கொண்டுள்ளதை அறிந்த க.தங்கமயில், பூ.சந்திரகுமாரன் ஆகியோர் த.ப.க.இயக்கத்தின் நிலங்களை விற்பனை செய்வதை தடுப்பதில் தீவிரமாக செயலில் இறங்கினர். த.ப.க.இயக்கத்தின் பயிற்சி நிலைய காணிகளை விற்பனை செய்வதில் கிறிஷ்ணதாஸன் நீதிமன்ற அனுமதியை பெற்றுள்ளதை தடுத்து நிறுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக த.ப.க.இயக்கத்தை மறுமலர்ச்சி பாதைக்கு இட்டுச்சென்ற முன்னாள் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமானகனகரெத்தினம் அவர்களுடன் ஆலோசனை செய்தனர். மா.கனகரெத்தினத்தின் ஆலோசனைக்கிணங்க த.ப.க. இயக்கத்துக்கு நிலங்களை விற்பனை செய்தவர்களில் ஒருவரும் கிறிஷ்ணதாஸன் விற்பனை செய்வதற்கான நீதிமன்ற அனுமதியை பெற்றிருந்த நிலப்பரப்பின் முன்னைய உரிமையாளர் மூலம் நில விற்பனை நீதிமன்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும்படி ஆலோசனை தெரிவித்தார். இதையடுத்து க.தங்கமயில், பூ.சந்திரகுமாரன் ஆகியோர் திரு.பெனான்டோவை சந்தித்து நிலைமையை விளக்கி த.ப.க. இயக்கத்தின் நிலங்களை விற்றுச் சுருட்டும் கிருஷ்ணதாஸன் கும்பலின் முயற்சியை தடுத்து நிறுத்த உதவும்படி கேட்டுக்கொண்டனர். தமிழ்ப் பிள்ளைகளின் நீண்ட கால நலன் கருதி தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காக தனக்கு சொந்தமான 15 ஏக்கர் காணியை வெறும் 15 ஆயிரம் ரூபாய்களுக்கு கொடுத்த நிலையில் த.ப.க.இயக்கத்தின் பெயரால் கிறிஷ்ணதாஸன் கும்பல் றியல்எஸ்ரேட் வியாபாரமாக்கிக் கொள்வதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்து தனது ஆட்சேபனையை தெரிவிக்க உடன்பட்டார். 03.10.83ஆம் திகதி வழங்கப்பட்ட அனுமதிக்கு திரு. பெனான்டோ சட்டத்தரணி மாகனகரெத்தினம் ஊடாக தனது ஆட்சேபனையை நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து 31-05-83ஆம் திகதி த.ப.க.இயக்கத்தின் நிலத்தை விற்பனை செய்வதற்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய அனுமதியை 03-10-83ஆம் திகதி ரத்துச்செய்தது இதன் மூலம் த.ப.க. இயக்கத்தின் நிலங்களைவிற்று சுருட்டும் கிருஷ்ணதாஸன் கும்பலின் றியல் எஸ்ரேட் வியாபாரம் தடுக்கப்பட்டது. ஆனாலும் எஸ்.ஏ.டேவிட்டின் அனுசரணையுடன் பிரதர்ஸ் செனியோசப் சங்கத்தினருக்கும் கிறிஷ்ணதாஸனுக்கும் இடையில் புரிந்துணர்வின் அடிப்படையில் 99வருட குத்தகை அடிப்படையில் பெனாண்டோவிடம் கொள்வனவு செய்த நிலப்பரப்பைத்தவிர்த்து ஏனைய நிலப் பரப்பில்பிரதர்ஸ் செனியோசப் சங்கத்துக்கு வழங்கப்பட்டு பணம் பெறப்பட்டது.

(தொடரும்)

# பிரபாகரன் கைதும் மதுரை வாழ்க்கையும்

இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பிரபாகரனின் கைது விடயத்தில் தலையிட்டதை அடுத்து அவரையும், உமாமகேஸ்வரனையும் மற்றும் அவர்களது இரண்டு சகாக்களையும் நாடு கடத்துவது தடுக்கப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் தான் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் ருத்ரா இராஜசிங்கம் கைது செய்யப்பட்ட பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் அவர்களது சகாக்கள் இருவரையும் இலங்கைக்கு அழைத்துச் செல்ல சென்னைக்கு வந்தார்.

அவர் சென்னை பொலிஸாரிடம் தொடர்பு கொண்ட போது, கைதான இருவரையும், அவர்களது இரண்டு சகாக்களையும் நாடு கடத்த வேண்டும் என்ற மத்திய அரசின் உத்தரவினை அவருக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இந்திய மத்திய அரசின் உத்தரவு இலங்கை அரசுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதையடுத்து இலங்கை பொலிஸ்மா அதிபர் வெறுங்கையோடு நாடு திரும்பினார்.

அதே நேரத்தில் சென்னையில் உள்ள ஒரு நீதிமன்றம், பிரபாகரனையும், உமாமகேஸ்வரனையும் அவர்களது இரு சகாக்களையும் நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்தது.

அந்த இருவரையும் தனித் தனி வேறு ஊர்களில் தங்குமாறும், அவர்கள் எங்கே தங்குகிறார்கள் என்ற விடயத்தைப் பொலிஸிற்கு அறிவிக்குமாறும் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

அதையடுத்து பிரபாகரன் மதுரையிலும், உமாமகேஸ்வரன் சென்னையிலும் தங்க முடிவெடுத்தனர். அந்த இருவரையும் அந்தந்த இடங்களில் தங்க வைப்பதற்கு நிறைய ஆதரவாளர்கள் இருந்தார்கள்.

பிரபாகரன் பழ. நெடுமாறனோடு அவரது வீட்டில் மதுரையில் தங்க முடிவெடுத்தார். அவருக்கு ஒரு உதவி இன்ஸ்பெக்ரரும், இரண்டு பொலிஸாரும் கொண்ட ஒரு பொலிஸ் கோஷ்டி பாதுகாப்புக்கு வழங்கப்பட்டது.

பழ. நெடுமாறனின் வீட்டை விட்டு அவர்கள் வெளியே போவதற்கு அனுமதி இல்லாதிருந்த போதிலும், அவர் வெளியே எங்கும் செல்வதையும் பொலிஸார் கண்டும் காணாமலும் இருந்தனர்.

1981ஆம் ஆண்டு பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளை விட்டுவிட்டு ரெலோ இயக்கத்தில் சேர்ந்து இயங்கிய போது, மதுரையில் வைத்து இருபத்து ஐந்து ரெலோ உறுப்பினர்களுக்கு அவர் இராணுவப் பயிற்சி வழங்கினார்.



அவ்வாறு இவர் பயிற்சி வழங்கிய ரெலோ உறுப்பினர்கள் எல்லோரும் பிரபாகரன் மதுரையில் தங்க வந்ததையடுத்து, அவருக்கு ஆதரவு வழங்க முன்வந்தார்கள்.

பிரபாகரன் மதுரையில் தங்க வந்த சமயம் அவருக்கு வயது இருபத்து ஏழு. பயங்கரவாத இயக்கத்தில் சேர்ந்து பத்து வருடகாலம் நிறைவேறி இருந்தது.

முன்பு மதுரையில் இருந்த காலத்தில் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சினையை அங்குள்ள ஒரு ஓவியர் மூலம் தயாரித்தார்.

பிரபாகரன் மதுரையில் இருந்த காலத்தில் அவர் தன்னுடைய எதிர காலத்தைப் பற்றிச் சிந்திக்கவும், நடவடிக்கை எடுக்கவும் நிறையக் கால அவகாசம் இருந்தது.

அந்தக் க்ாலத்தில் சென்னையிலுள்ள சட்டமன்ற தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் ஹொஸ்டலில் தான் செல்லக்கிளி, பேபிசுப்பிரமணியம் போன்றோர்கள் தங்கி இருந்தார்கள். அவர்கள் மதுரையில் இருந்த பிரபாகரனோடு தொடர்பில் இருந்தார்கள்.

நெடுமாறனது வீட்டில் தங்கியிருந்த பிரபாகரனுக்கு எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

நெடுமாறனது பாரியார் செய்து கொடுத்த மரக்கறி வகைகள் மற்றும் சுவையான உணவு வகைகளைப் பிரபாகரன் விரும்பிச் சாப்பிட்டார்.

நெடுமாறனது மனைவி தயாரித்த கோழிக்கறி பிரபாகரனால் விரும்பி உண்ணப்பட்டது.

மதுரையில் நெடுமாறனது அரசியற் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது

பிரபாகரன் தினசரி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒப்பமிட வேண்டும். ஆனால், நெடுமாறனது அரசியற் செல்வாக்குக் காரணமாகப் பொலிஸார் பிரபாகரனை நுணுக்கமாக அவதானிக்காமல் விட்டு விட்டனர்.

அதையடுத்து பிரபாகரன் மதுரையில் அனைத்து இடங்களுக்கும் கட்டுப்பாடு இன்றிச் சென்று வந்தார்.

பின்னர் தமிழ்நாட்டின் அனைத்து இடங்களுக்கும் தங்கு தடைகளின்றிச் சென்று வந்தார். பழ. நெடுமாறனின் மதுரையில் உள்ள வீட்டில் தங்கியிருந்தபோது, அவரது பிள்ளைகளின் மீது மிகவும் பாசமாக பிரபாகரன் இருந்தார்.

நெடுமாறனின் ஆறு வயது மகளுடன் கரம் விளையாடிப் பொழுதைக் கழிப்பார்.

மேலும் பிள்ளைகளுக்கு வீர, சாகசக் கதைகளையெல்லாம் கூறிவது அவரது வழக்கமாகும்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தக் கதைகளையும் அவர்களுக்குச் சொல்ல அவர் தவறில்லை.

பிரபாகரனின் வீர, தீரச் செயல்களைச் செவிமடுத்த நெடுமாறனின் பிள்ளைகளில் ஒன்று, தானும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர விரும்புவதாகக் கூறிற்று.

அதைக்கேட்ட பிரபாகரன் சிரித்துக் கொண்டே, “இப்போது நீங்கள் ஆயுதப் போராட்டக் குழுக்களில் சேர வேண்டாம். முதலில் நன்றாகப் படியுங்கள். நாங்கள் போராட்ட விடயங்களைக் கவனிக்கின்றோம்” எனக் கூறினார்.

அந்தக் காலத்தில் பிரபாகரன் கடவுள் மீது மிகுந்த நம்பிக்கை உரியவர் எனக் கூற முடியாது. இருந்த போதிலும் அவ்வப்போது மதுரை மாநகரின் மையப்பகுதியில் அமைந்திருந்த மீனாட்சியம்மனைச் சென்று வணங்கி வந்தார்.

நெடுமாறன் வீட்டில் தங்கியிருந்த போது பிரபாகரனை யாரும் பார்த்தால் ஒரு அகதி என்றோ, குற்றவாளி என்றோ கூறமுடியாது. நல்ல முறையில் உடையணிந்து துப்பரவாகக் காணப்படுவார்.

மடிப்புக் கலையாத ஆடை அணிவது அவரின் தனித்துவம் ஆகும். அது மாத்திரமன்றி போராளிகளும் நல்லமுறையில் உடையணிந்து வாழ வேண்டும் என அக்கறை காட்டினார்.

நெடுமாறனோடு சம்பாசிக்கும் போதெல்லாம் இயக்கம் பற்றியே பேசி வந்தார். போராளிகளின் உடை வகைகள், தொப்பி, பட்டிகள், புலிக கொடிகள் என்பன பற்றி நெடுமாறனோடு பேசி முடிவெடுப்பார்.

அந்தக் காலத்தில் அவருக்கு நிறைய அவகாசம் இருந்ததால் தமிழ் இலக்கியங்களை நிறையப் படித்தார்.

சில காவியங்களைத் திரும்பத் திரும்பப் படித்தார். இந்திய வரலாற்று நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்து வந்தார்.

இந்தியப் போராட்ட வீரர்களில் சுபாஸ் சந்திரபோசின் வீரம், திறமை வெகுவாகக் கவர்ந்தது. லத்தீன் அமெரிக்காவில் வாழ்ந்த போராட்ட வீரர் சே குவேராவைப் பற்றிப் படித்தார்.

இந்த சே குவேரா தான் பிடேல் காஸ்ரோவுடன் சேர்ந்து கியூப நாட்டு விடுதலைக்காகப் போராடினார்.

போராட்டத்தில் கெரில்லா யுத்த முறையை அறிமுகப்படுத்தினார்.

சே குவேராவைப் பற்றித் தமிழில் வெளிவந்த வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தின் 2000 பிரதிகளை வாங்கி இயக்கத்தில் இருந்த சகல போராளிகளையும் படிக்குமாறு பணித்தார்.

ஒருமுறை மதுரையில் இருந்த சுபாஸ் சந்திரபோஸின் ஆதரவாளர்கள் ஓர் கலந்துரையாடலுக்கு நெடுமாறனை அழைத்திருந்தார்கள். பிரபாகரனும் அவருடன் கூடவே சென்றார்.

அந்தக் கூட்டத்தில் சுபாஸ் சந்திரபோஸினைப் பற்றிய புகழாரம் செய்யும் பேச்சுக்களைக் கேட்ட பிரபாகரன் ஆச்சர்யமடைந்தார்.

பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்துக்கு எதிராக சந்திரபோஸ் இந்திய இராணுவத்தை உருவாக்கி, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது பிரபாகரன் மூளையில் பொறி தட்டியது.

கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் கூட்டத்தில் பங்குபற்றிய அனைவரும் எழுந்து நின்று இந்திய இராணுவத் தேசிய கீதம் பாடிய போது, பிரபாகரனும் எழுந்து நின்று தனது பங்கிற்கு வீர வணக்கம் செலுத்தினார்.

முன்னாள் இந்திய இராணுவ வீரர்கள் அணிவகுத்து நின்று வீர வணக்கம் செலுத்தியது பிரபாகரனின் கற்பனைக் குதிரையை தட்டிவிட்டது.

கூட்டம் முடிந்து வீடு வந்த பிரபாகரன், தானும் ஒரு காலத்தில் ஆகக் குறைந்தது நூறு தமிழ் விடுதலைப் புலிகளையாவது அணிவகுத்து புலிக்கொடிக்கு வீர வணக்கம் செய்ய வைக்க வேண்டும் என்ற தனது அவாவை வெளியிட்டார்.

அப்போது அவரது குரலில் உறுதியும், இறுக்கமும் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மதுரையில் இருக்கும் போது போராளிகளுடன் தொடர்பு கொள்ள முதன் முதலில் ஒரு சங்கேத மொழியை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொண்டார்.

காலப் போக்கில் அவரின் முயற்சி இலங்கை இராணுவத்தினரையே கதிகலங்க வைத்தது.

மதுரையில் நெடுமாறன் வீட்டில் இருக்கும் போது பிரபாகரன் ஏதாவது செய்து கொண்டு இருப்பார்.

ஒருநாள் கிணற்றடியில் வைத்துத் துணிகளைத் தோய்த்துக் கொண்டே இருந்தார். அது அவரது துணிகளும் அல்ல.

“என்ன செய்கின்றீர்?” என நெடுமாறன் கேட்ட போது, “எனக்குப் பொழுது போகவில்லை அதனால் துணி துவைக்கின்றேன்”. என்றார்.

தினசரி மிகவும் சுத்தமாக சேவ் எடுப்பது அவரது வழக்கம். அதே போல அவர் மிகவும் குறைவாகவே பேசுவார். மற்றவர்கள் பேசுவதையே அதிகம் கேட்கும் வழக்கம் இருந்தது.

(தொடர்ச்சி 17 இல்......)

# லங்கா ராணி

(கடந்தவார தொடர்ச்சி.....)

குமாரைச்சுற்றி வேறு பலரும் கூடி நின்றனர். சரவணன் அந்த ஆங்கில உரையாடலுடன் பங்கு கொள்ளமுடியாமல் வெள்ளைச் சாமியுடன் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். டாக்கடர் திரு முருகன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளைப் பற்றிய கேள்விகளைக் கேட்டார். உலகநாடுகள் ஆதரவு தருமா..? ஐக்கிய நாடுகள் சபையில் ஏன் இந்தப் பிரச்சினையை எழுப்பக் கூடாது.? என்றும் கேட்டார். ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சினையை எவ்வாறு அணுகக் கூடும் என்று கூறி இன ஒடுக்கல் வெறும் காலணி ஆதிக்க நாடுகளில் மட்டுமல்ல சுதந்திரம் அடைந்த நாடுகளில், மனித உரிமைகள்மறுக்கப்பட்ட நிலை யிலும் இனங்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும் மக்கள் வாழ்கிறார்கள் என்று குமார் குறிப்பிட்டான். உதாரணமாக பங்களாதேஷ் மக்கள் பாகிஸ்தானி டமிருந்து பிரிந்து தமது அடிப்படை உரிமைகளை நிலை நாட்டியுள்ளனர் என்றும் குறிப்பிட்டான்.

1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மனித உரிமை சாசனத்தின்படி எல்லா மக்களும் சுதந்திரமானவர்களாகவும் சமமான உரிமைகளுடனும் பிறக்கின்றார்கள் என்றும் இனம், நிறம், பால், மொழி, அரசியல் கருத்துக்கள், சமூக உறவுகள் ஆகிய வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் உரிமைகள் வழங்கப்படவேண்டு மென்று குறிபபிடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னான். அதேபோல் 1960ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலணி நாடுகளுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய சாசனத்திலும் மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்களாக இருக்கிறார்களென்றும் இந்த உரிமையால் அவர்கள் தங் கள் பொருளாதார சமூக கலாசார உறவுகளைச் சுதந்திரமாக அமைத்துக் கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினான். இத்தோடு குமார் இவையெல்லாம் எல்லோரும் ஏற்று நடக்கவேண்டுமென்ற தீர்மானமேயன்றி இவற்றை ஒரு நாட்டில் நிலை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடம் எவ்வித அதிகாரமுமில்லை என் றும் குறிப்பிட்டான். குமாரைச்சுற்றி பலர் கேட்டுக்கொண்டு நின்றனர்.

இச்சமயத்தில் அங்கு இந்திய வானொலியின் செய்திகளைக் கேட்டுக் கொண்டு நின்றசிலர் கைகளை உயர்த்தி ஆரவாரம் செய்தனர். அது ஒரு சிறிய ரேடியோ. சத்தம் அதிகமில்லாததால் ஒருவர் காது கொடுத்துக்கேட்டு எல்லோருக்கும் சத்தமாகக் கூறிக்கொண்டிருந்தார். அவரைச்சுற்றி பலர் கேட்டுக் கொண்டு நின்றனர். முதலில் மாநிலச்செய்திகள் படிக்கப்பட்டன. இதில் தமிழ்நாட்டு சட்டசபையில் இயற்றப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானம் அங்கு நடந்த விவாதங்கள் பற்றிக் கூறப்பட்டது. பின்பு அகில இந்தியச் செய்தியில் கொழும்பில் இருந்து அகதிகள் கப்பலில் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி எல்லோருக்கும் ஆரவாரத்தை கொடுத்திருந்தது. எல்லோரும் உற்சாகம் அடைந்தனர். கைகளை உயர்த்தி சத்தம் போட்டனர். இச்செய்தி கீழத்தளத்திற்கும் சென்றது.

இச்செய்தி பற்றி விபரங்களை குமாரும் டாக்டரும் கேட்டறிந்தனர். அவர்கள் பேச்சு தமிழகத்துடன் உள்ள தொடர்புபற்றித் திரும்பியது.

“தி.மு.க அரசு இருந்தால் எங்கள் கோரிக்கைக்கு தமிழகத்தில் நல்ல ஆதரவு இருக்கும்” எனக் கூறினான் குமார். அதற்கு டாக்டர்

“இந்தியாவைப் பொறுத்தவரையில் மாநில அரசின் கொள்கை பெரிய விடயமல்ல மத்திய அரசு என்ன நோக்கம் கொண்டிருக்கிறதோ அதுதான் பிரதானம்”என்று கூறினார். அங்கு தி.மு.க. பிரிவினையை ஆதரிக்கும் கட்சியாதலால் இங்கு தனிநாடு உருவாகுமானால் இந்தியாவில் தமிழ்நாடு பிரியும் என்ற நோக்கம் மத்திய அரசுக்கு இருக்கும் என்றும் கூறினார்.

அதனால் எல்லாக் கட்சிகளினதும் ஆதரவையும் திரட்ட வேண்டும் என்றும் தமிழ்நாட்டு உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதால் தமிழ் மக்கள் மத்திய அரசின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்றும் டாக்டர் கூறினார். வல்லரசுகள் இலங்கை அரசியலில் கொண்டிருக்கும் அக்கறையையும் சுட்டிக் காட்டினார். இதனால் பேச்சு மீண்டும் உலக அரங்கில் தனிநாட்டுக்கு ஆதரவு தேடுவது பற்றி எழுந்தது. ஆபிரிக்காவில் நடக்கும் விடுதலைப்போர்கள் பற்றி குமார் குறிப்பிட்டான். அவர்கள் பெறும் உதவிகள் பற்றியும் அவற்றைப்போல நாங்களும் பெறுவதற்கு முயற்சிப்பது தவறில்லையென்றும் குறிப்பிட்டான்.

வல்லரசுகள் எங்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடும் என்று டாக்டர் கூறினார். அதற்கு சமதர்ம நாடுகளின் உதவி ஒரு கடமையாகக் கருதப்பட்டு உபகாரங்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாமலே அளிக்கப்பட்டு வருகின்றன என்றும் பல நாடுகளை மேற்கோள் காட்டி குமார் கூறினான். அதை டாக்டர் முற்றாக ஏற்றுக் கொள்ளத் தயங்கவே

“பிணங்களைத்தான் கழுகுகள் வந்து கொத்தும் நாங்கள் விழிப்பாக இருந்தால் யாரும் எவரும் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் பலவீனர்களாக இருந்தால் வல்லரசுகளாக இருந்தாலென்ன யாராக இருந்தாலும் எங்களுக்கு உத விக்கு வருபவர்கள் எங்கள் தோள்மீது இருந்து சவாரி விடத்தான் பார்ப்பார்கள். நாங்கள் பலமான சமுதாயமாக ஒற்றுமையோடு விளங்கினால் எவரும் எங்களை ஒன்றும் செய்து விடமுடியாது” என்று குமார் குறிப்பிட்டான்.

குமார் சற்று மன்னிக்கும்படி கூறிவிட்டுச் சமையலறையில் எப்படி எல்லாம் இருக்கிறது என்று பார்க்க உள்ளே போனான். அங்கு போய் எல்லாவற்றையும் பார்வையிட்டுமாணவத் தொண்டர்களை உணவைப் பரிமாறும்படி கூறிவிட்டு வந்தான்.

குமாரும், சரவணனும், டாக்டர் நற்குணமும் மீண்டும் கப்டனைப் பார்க்கப் போனார்கள் அங்கு கப்டனுடன் வேறு அதிகாரியும் உடனிருந்தார். முதலில் குமாரிடம் அங்கு நடந்த விடயங்களைக் கேட்டறிந்தார்.

“கப்பல் எந்த துறை முகத்திற்கு போகும்.? குமார் வினவினான்.” கப்பல் காங்கேசன் துறை முகத்துக்குப் போகும். அங்கு வத்தைகளில் அகதிகள் கரைக்கு கொண்டு போகப்படுவார்கள். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன’ என்று கப்டன் கூறினான்.

“கப்பலில் உள்ள இருநூறு பேருக்கும் அதிகமானவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் இல்லை. இவர்கள் அங்கு தங்குவதற்கு வசதிகள் வேண்டும். இது பற்றி யாழ்ப்பாணம் எம்.பிக்கு அல்லது அரசாங்கத் தொடர்பு அதிகாரிக்கு அறிவிக்கவேண்டும்” என்று குமார் கேட்டுக்கொண்டான்.

சந்திப்பு நல்ல சூழ்நிலையிலேயே நடந்து கொண்டிருந்தது. சரவணன் மாத்திரம் சுற்றிலும் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். நாளை இறங்கும்போது செய்யவேண்டிய ஒழுங்கு பற்றி கேள்வி எழுந்தது. இந்தப் பொறுப்பை குமார் ஏற்றுக் கொண்டான். நாளை கப்பல் மேல் தளத்திற்கு எவரையும் வரவேண்டாமென்றும் எல்லோரையும் உள்ளே இருக்கச் செய்யும் படியும் கப்டன் கூறினார். இதற்கு குமார் அப்படியாக எல்லோரையும் உள்ளே வைத்திருப்பது கடினம் என்றும் எல்லோரும் மேல்தளத்தில் நிற்கத்தான் விரும்புவார்கள் என்றும் கூறினான்.” இது என்ன உல்லாசக் கப்பலா?” என்று கப்டன் வினவினார்.’ நாங்கள் தெண்டிக்கிறோம்;” என்று குமார் பதிலிறுத்தான்.

கப்பல் மதியம் பன்னிரண்டு மணிக்கு காங்கேசன் துறையை அடையுமென்று கப்டன் கூறினார்.

‘திருகோணமலையால் எந்த நேரம் கப்பல் போய்க்கொண்டிருக்கும்?” என்று சரவணன் கேட்டான்.




“கூடிய சீக்கிரத்தில் இன்னும் இரண்டொரு மணித்தியாலங்களில். நாளை காலை முல்லைத் தீவில் இருந்து எங்களை இட்டுச் செல்வதற்குக் கடற்படையினரையும் விமானப்படையினரையும் எதிர்பார்க்கின்றோம். எங்களுக்கு இந்தக் கடலைப்பற்றி அதிகம் தெரியாது. அவர்களின் உதவி தேவை” என்றும் கப்டன் கூறினார். சரவணன் குமாரின் முகத்தைப் பார்த்தான். குமாரும் சரவணனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அங்குள்ள நோயாளர்களைப் பற்றி டாக்டர் நற்குணம் கூறினார். இரண்டு கர்ப்பிணிகளைத்தவிர வேறு யாருக்கும் அவசர உதவிகள் தேவையில்லை. என்றும் இவர்கள் இருவரையும் ஏற்றுக் கொள்ள வைத்தியப் பகுதியினர் தயாராய் இருக்க வேண்டும் என்றும் கூறினார். இவற்றையெல்லாம் தாம் யாழ்ப்பாணத் தொடர்பு அதிகாரிக்கு தெரியப்படுத்துவதாக கப்டன் கூறினார்.

“நாட்டின் நிலமைகளைப் பற்றி ஏதாவது தெரியுமா?” என்று குமார் கேட்டான். அதற்கு திருகோணமலையில் இன்று ஊரடங்குச் சட்டம் மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறு மணிவரை அமுல் செய்யப்பட்டிருக்கின்றதென்றும் மற்ற மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிற தென்றும் கப்டன் கூறினார். எல்லோரும் எழுந்தனர். விடைபெற்றுக்கொண்டனர்.

அருளர்

பின் தளத்தில் உணவுப்பரிமாற்றம் முடிந்து முன் தளத்தில் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கு தேவன் நின்று சகல வேலைகளையும் மேற்பார்வை செய்து கொண்டிருந்தான். உணவுப் பொருட்கள் மிகுதியாக இருந்ததால் எல்லாவற்றையும் முத்தையாவின் பொறுப்பில் குமார் விட்டிருந்தான். முத்தையா எல்லாவற்றையும் பிரமாதமாகவே தயார் செய்திருந்தார். அகதிகள் முகாம்களில் எல்லோரும் வரிசையாக வருவார்கள். தொண்டர்கள் நின்று உணவைப் பரிமாறுவா ர்கள். இங்கு தொண்டர்கள் நின்று உணவைப் பரிமாறினார்கள். மற்றவர்கள் அதே இடத்தில் இருந்தார்கள்.

அகதிகள் முகாம் கட்டு பெத்தை மாணவர்களின் பாதுகாப்புக்காக தொடங்கப்பட்டது. கலவரத்தை புதிய அரசாங்கம் கட்டுப்படுத்திவிடும் என்று கருதினார்கள். தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை விபரித்துக் கூறினார். இந்தச் சமயத்தில் கலவரம் அநுராதபுரத்தில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பல தமிழர்கள் இறந்திருந்தார்கள். நாடெங்கும் பதட்ட நிலை உருவாகி இருந்தது. இந்தச் சமயத்தில்தான் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழர் கூட்டணித் தலைவரைப் பார்த்துக் கூறுகின்றார். உங்களுக்கு போர் வேண்டுமானால்போர். சமாதானம் வேண்டுமானால் சமாதானம்.” இவருக்கு பக்கபலமாக ஒரு அரசுக்கட்சி முக்கிய உறுப்பினர் “துட்டகைமுனு இன்று எல்லாச் சிங்கள இளைஞர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்” என்று கூறினார். துட்டகைமுனு ஒரு சிங்கள அரசன். அவன் எல்லாளன் எனும் தமிழ் அரசனைக் கொன்றவன். இந்தப் பேச்சுக்கள் வானொலியிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுகின்றன. கலவரம் பயங்கரமாகப் பரவுகின்றது. தமிழ்மக்கள் சிங்கள அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கை தவிடு பொடியாகின்றது.

இலங்கையில் சிங்களவர் வரலாறு கி.மு543ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. விஜயன் என்பவன் வட இந்தியாவிலிருந்து அவனுடைய சகாக்களுடன் நாடு கடத்தப்படுகின்றான். இவ்வாறு அகதிகளாக வந்த விஜயனையும் சகாக்களையும் இங்குள்ள மக்கள் உபசரிக்கின்றனர். விஜயன் குவேனி என்ற உள்ளூர்ப் பெண்ணை மணந்து கொள்கின்றான். குவேனிக்கு மூன்று குழந்தைகள் பிறக்கின்றன. இந்த வாழ்க்கை விஜயனுக்கு ஒத்துவரவில்லை. குவேனியின் உதவியுடன் அங்குள்ள அரசனைக்கொன்று தானே முடிசூட்டிக் கொள்கிறான். தனது சகாக்களை சிற்றரசர்களாக நியமித்துக் கொள்கிறான்.

(தொடர்ச்சி 19 இல்......)

*(கடந்த வாரத்தொடர்ச்சி...)*

நீங்கள் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள். நாட்டைப் பிரிக்கும் எமது முயற்சியில் இணைந்து கொள்ளுங்கள் என்று அவர் எம்மிடம் வேண்டினார். நாம் அதற்கு சம்மதிக்கவில்லை. அதனால்தான் காத்தான்குடியில் பள்ளிவாசல்களில் முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதற்காகத்தான் அக்கரைப்பற்றுவில் படுகொலை செய்தார்கள். இதனால்தான் ஒரு இலட்சம் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். எமது முஸ்லிம் சமூகம் ஒருபோதும் நாட்டைப் பிரிக்கும் செயற்பாட்டிற்கு, நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்ததில்லை, செயற்பட்டதுமில்லை, இருக்கப்போவதுமில்லை. தெற்கில் சிங்கள சகோதரர்கள் ஆயுதம் ஏந்திய போதும் எமது முஸ்லிம் சமூகம் அவர்களோடு இணைந்து கொள்ளவில்லை. தமிழ் சகோதரர்கள் ஆயுதம் ஏந்திய போதும் எமது முஸ்லிம் சமூகம் அவர்களது நாட்டைப் பிரிக்கும் செயற்பாட்டிற்கு இடமளிக்கவில்லை. எனவே இவை முற்று முழுதாக இனவாத சிந்தனையோடுடனான சதி. வில்பத்து, வில்பத்து என்று முன்னெடுக்கப்படுவது பொய். நான் கூறுவது தேரர்கள் கூறுவதால் மாத்திரம் இவைகளை நம்ப வேண்டாம். புத்தியுடன் மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்கள் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

**ஹிரு தொலைக்காட்சி** – மதிப்புக்குரிய தேரர் அவர்களே இனி உங்களுக்குரிய சந்தர்ப்பம்.

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – நல்லது. இவர் கூறுகிறார் இது எங்கள் நிஜ பூமியாகும் என்று. இங்கு கூற வேண்டிய முக்கியமான விடயம் இவர்களுக்கு இது நிஜபூமி என்று கூறுவதற்கு எந்த வித உரிமையும் இல்லை. அர்த்தமில்லாத நிஜபூமி பற்றிப் பேசப் போனால் அது ஈழத்திற்கும் அப்பாலான பாரிய தவறு இடம் பெறலாம்.

அடுத்து வர்த்தமானி தொடர்பில் நீதிமன்றம் செல்லும் விடயம். விஷேடமாக இவர் கூறினார், இந்த வர்த்தமானியின் பிரகாரம் ஒரு ஹெக்டேயார் காணியில் அவசரத் தேவைக்காக அறிக்கை தேவையில்லை என்று. அவசரத் தேவை...? இவரின் அவசரத் தேவைதான் குடியேற்றுவது. ·அவசரத் தேவை என்பது பற்றி இதில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மண்சரிவு போன்ற சந்தர்ப்பங்களே இதில் அவசரத் தேவை எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான எதுவும் இடம்பெற்றதா? இல்லை.

அடுத்து அமைச்சர் ஒருவருக்கு இவ்வாறு விரும்பிவாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட முடியும் என்ற விடயம். அமைச்சர் ஒருவருக்கு விரும்பிய விதத்தில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பிரசுரிக்க முடியுமாயின் சுதேவ, இவ்வாறான அமைச்சர்கள் வெளியிடும் வர்த்தமானி அறிவித்தல்களினால் எம்மால் இந்நாட்டில் இருக்க முடியாது போயிருக்கும். இவ்வாறு வர்த்தமானி வெளியிட கொள்கை ஒன்றிருக்கின்றது. வழிமுறைகள் இருக்கின்றது. நிபந்தனைகள் இருக்கின்றன. ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. தவறான முறையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டால் அதற்குரிய அதிகாரிகள் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அமைச்சர் மாத்திரமல்ல.

**ஹிரு தொலைக்காட்சி**–குறித்த அமைச்சருக்கு காணியை சுவீகரிப்பதற்கும், விடுவிப்பதற்கும் அதிகாரம்....

**பகியங்கள ஆனந்த சாகல சேரர்** – இவர் குறிப்பிட்டது அமைச்சருக்கு காணியை சுவீகரிக்கவும் முடியும் விடுவிக்கவும் முடியும் என்று. அவ்வாறில்லை. இங்கிருக்கும் நிலமைகளைப் பார்க்க வேண்டும். இங்கிருக்கும் விஷேட தன்மையினைப் பார்க்க வேண்டும். இங்கிருக்கும் தொல்பொருள் பெறுமதியினைப் பார்க்க வேண்டும். இங்குள்ள வில்லுவைப் பார்க்க வேண்டும். இங்குள்ள மரங்களின் பெறுமதியைப் பார்க்க வேண்டும். இதன் பின்னர் அறிக்கை பெறப்படும். இவ்வாறு முறைப்பிரகாரமே இவை இடம்பெறும்.

# மன்னாரில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சர்ச்சைகள் தோன்றக் காரணம் என்ன?




அடுத்து அமைச்சர் அவர்களே! நீங்கள் குறிப்பிட்ட ஜாசிம் சிட்டியில் ஒரு சிங்கள குடும்பமேனும் குடியேற்றப்படவில்லை. ஜாசிம சிட்டி என்று சொல்லப்படுவது ஒரு வகையிலான கொலனி, விரிவாக்கக் கோட்பாடொன்றே உருவாக்கப்படுகின்றது. அதனை நான் தெளிவாகக் கூறுகின்றேன். பொறுப்புடனேயே இதனை நான் கூறுகின்றேன். இதற்காக எனக்கு எதிராக நீங்கள் வழக்குத் தொடர முடியும். ஜாசிம் சிட்டி என்பது ஒரு கொலனி. ஒரு வகையில்...ஒரு வகையில்... என்னிடம் இதற்கு வாக்கியம் இருக்கின்றது. அதைக் கூறினால் இது இங்கு பிரச்சினையாக ஆகும். எனவே இவ்வாறான கொலனியை உருவாக்க வேண்டாம் அமைச்சர் அவர்களே. நீங்கள் குடியேற்றும் கூட்டத்தினருள் சிங்களமா, தமிழா, முஸ்லிமா என்று பார்க்காமல் அனைவரையும் குடியேற்றுங்கள்.

இந்த கலந்துரையாடலில் சில ஆபத்துக்கள் இருக்கின்றது. முதலாவது ஆபத்து வில்பத்து தேசிய வனாந்தரத்திற்கு ஏற்படும் அழிவு. இரண்டாவது ஆபத்து முஸ்லிம் உலகில் இவர் ஒரு வீரராக ஆகுகின்றார். இதில் இருக்கும் பாதிப்பு இவரின் ஊடாக முஸ்லிம்கள் என்று அறியப்படுவது.

இதுதான் ரிசாத் பதியுதீன் என்ற அமைச்சருக்கு இருக்கும் 3000 ஏக்கர் காணியின் விபரங்கள். இவருக்கு இந்தளவு மக்களைக் குடியேற்றுவதற்கு நெஞ்சு துடிக்கிறதாக இருந்தால் இந்தளவுக்கு இந்த முஸ்லிம் மக்களுக்காக இவர் துடிக்கிறார் என்றால், இந்த சுன்னி முஸ்லிம் மக்களை குடியேற்றுவது குவைட் அரசாங்கத்தின் உதவியைப் பெற்று. இவர் இனவாத, முஸ்லிம்வாத முறை ஒன்றை இந்நாட்டில் உருவாக்க முயலுகின்றார். யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் அது பயங்கர நிலைமையை உருவாக்கும்.

விஷேடமாக இந்த அறிக்கையில் உள்ளது, மெகா கன்ஸ்ட்ரக்சன் என்று நிறுவனத்தின் உரிமையானது ரிசாத் பதியுதீன் அமைச்சர் அவர்களின் அன்புக்குரிய சகோதரருக்கே இருக்கின்றது. (சில பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவர் கூறும் முஸ்லிம் பெயர்களை அவர் சரியாக உச்சரிக்காததால் அப்பெயர்கள் தெளிவில்லை)

**ஹிரு தொலைக்காட்சி** – இவர்களை ஏன் குறிப்பிடுகின்றீர்கள்? குற்றச்சாட்டு என்ன என்பதைக் குறிப்பிடுங்களேன்.

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – இவர்கள் இவரது மெகா கன்ஸ்ட்ரக்சன் சப்ளைஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர்கள்.

**ஹிரு தொலைக்காட்சி** – அவருக்கு வர்த்தம் ஒன்றைச் செய்வதற்கு உரிமை இல்லையா?

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – அவருக்கு உரிமை இருக்கின்றது. இந்த ஜாசிம் சிட்டி வேலைத்திட்டங்களுக்கு வரும் அனைத்து நிதியும் இந்த மெகா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கே செல்கின்றது. இது ஒரு பிஸ்னஸ்.

**ஹிரு தொலைக்காட்சி** – இதற்கும் இந்தப் பிரச்சினைக்கு உள்ள தொடர்பு என்ன எங்கள் தேரர் அவர்களே?

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – தொடர்பானது என்னவென்றால் இந்த மக்களைக் கொண்டு போய் வனாந்தரங்களில் சிறை வைத்து அதனைப் படம் எடுத்து அந்தப் படங்களை இணையத்தளத்தில் போட்டு குவைட் நாட்டுக்குச் சென்று காட்டி நிதிகளைப் பெற்று பொய்யான வேலைதானே செய்யப்படுகின்றது. இவைகளை இலங்கை முஸ்லிம்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவருக்கு முஸ்லிம் மக்கள் தொடர்பில் இந்தளவுக்கு அக்கறை இருக்குமாயின் இதுதான் ரிசாத் பதியுதீன் என்ற அமைச்சருக்கு இருக்கும் 3000 ஏக்கர் காணிகளின் விபரம். பெயர்களோடு விரிவாக கூறுகின்றேன். (பெயர் ஒன்றைக் குறிப்பிடுகின்றார்) என்பருக்கு 1517 என்ற உறுதி இலக்கமுடைய ஒரு கோடி பெறுமதியான காணி இருக்கின்றது. (இன்னொருவரின் பெயர் குறிப்பிட்டு) அவருக்கு 55 இலட்சம் பெறுமதியான காணி இருக்கின்றது.

**ஹிரு தொலைக்காட்சி** – எங்கள் தேரர் அவர்களே... மன்னிக்க வேண்டும்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இவ்விடத்தில் தனிப்பட்ட விடயங்கள் பேசப்படுமாயின் மதிப்பிற்குரிய தேரருடன் என்னால் இவ்விடத்தில் விவாதம் செய்ய முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வருவாராயின் இதற்கு நான் நன்றாக பதில் வழங்குவேன். தனிப்பட்ட விடயங்கள் பேசப்படுவதை நான் விருப்பவில்லை. பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால் எனது தாய் தந்தையின் பெயர்களைப் போட்டு எவராவது எழுதிக் கொடுத்திருப்பார்கள். அதனை இவ்விடத்தில் வந்து கூறுகின்றார்.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே எனக்கு ஒரு நிமிடம் தாருங்கள். அதனால்தான் நாம் மதிப்புக்குரிய தேரரிடம் கேட்பது அமைச்சரின் குடும்ப உறுப்பினர்களுக்கு காணிகளை வைத்திருப்பதற்கு உரிமை இல்லையா என்று.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இங்கு தனிப்பட்ட விடயங்கள் பேசப்படுமானால் ஒரு அரசியல்வாதியை அழைத்து வாருங்கள் நான் பேசுகின்றேன். என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு.... நான் ஒரு அரசியல் தலைவன் எனக்கு எதிராக எவராவது பொய்யாக பெயர்களை எழுதிக் கொடுத்திருப்பார்கள். அரசாங்க காணி ஒரு ஏக்கராவது எனது பெயரில் உள்ளது எனக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். அப்படி எனக்கு உள்ளது என்று நிறூபிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே சற்று பொறுங்கள்....

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – அமைச்சர் அவர்களே அப்படி நான் நிரூபித்தால் என்ன செய்வீர்கள்?

**எம்.எஸ். முஸப்பிர்**

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இப்போது நிரூபியுங்கள். அரசாங்க காணி ரிசாத் அமைச்சர் எடுத்தார் என்று பிரதேச செயலாளர் கூற வேண்டும் அல்லது அரசாங்க அதிபர் கூற வேண்டும். அப்படிக் காட்டுங்களேன் பார்க்கலாம். நான் இன்றே இராஜினாமச் செய்கிறேன். அரசியலிலிருந்தே இன்று நான் ஒதுங்குகின்றேன்.

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – நான் இந்த 3000 ஏக்கர் காணி விபரங்களை வெளியிட்டது, அமைச்சர் அவர்கள் கூறினார் சொப்பின் பேக் ஒன்றுடன்தான்

*(தொடர்ச்சி 17 இல்......)*

## தமிழ் தலைவர்கள் வரிசையில்

# வீரமிக்க தமிழ்த் தலைவன் குமாரசுவாமி முதலியார்

பொன்னம்பலம் முதலியாரின் மூன்று பிள்ளைகளில் மூத்த மகன் பொன்னம்பலம் குமாரசாமி முதலியார். மற்ற இருவரும் சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாச்சலம் ஆவர். இந்த மூன்று பிள்ளைகளுமே இலங்கை சட்ட நிர்வாகத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர். பொன்.இராமநாதன் 1879 ஆம் ஆண்டில், முதன் முதலில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக சட்ட நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டார்.

அதை அடுத்து 1892ஆம் ஆண்டு அவர் சொலிசிற்றர் ஜெனரல் பதவியை ஏற்றுக் கொண்டார். அவ்வாறு அவர் பதவி ஏற்றதை அடுத்து சட்ட நிர்வாக சபையில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவம் காலியாகிற்று. காலியான பதவிக்கு தமிழ் மக்களின் பிரதிநிதியாக பொன்னம்பலம் குமாரசாமி முதலியார் நியமிக்கப்பட்டார்.

பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார் 1849ஆம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக் கல்வியை குயின்ஸ் அக்கடமி என அழைக்கப்பட்ட இன்றைய றோயல் கல்லூரியில் படித்தார்.

அதையடுத்து 1864ஆம் ஆண்டு இவருடைய தந்தையாராகிய பொன்னம்பலம் முதலியார் இவரையும் இவரது தம்பியான சேர்.பொன்னம்பலம் இராமநாதனையும் சென்னையிலுள்ள பிறஷிடென்சி கல்லூரியில் உயர் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.

அங்கு கற்றல் முடிந்த பிற்பாடு, கொழும்பு திரும்பிய பொன்னம்பலம் குமாரசாமி முதலியார் சட்டப் படிப்பை மேற்கொண்டு பிரக்குராசி (proctor) ஆனார்.

இவருடைய ஆற்றலும், சட்ட நுணுக்க அறிவும் இவரை அறியாமலேயே இவரைப் பொது வாழ்க்கைக்கு இழுத்துவிட்டது.

பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார் இருபது வருடகாலம் தொடர்ந்து கொழும்பு மாநகர சபை உறுப்பினராக இருந்தார்.

இவர் இறப்பதற்கு முன்பே நோயின் காரணமாக மாநகர சபை பதவியிலிருந்து விலகினார். 1883 ஆம் ஆண்டு சட்ட நிர்வாக சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே 1835ஆம் ஆண்டு தொடக்கம் 1893ஆம் ஆண்டு வரை சட்ட நிர்வாக சபையில் தமிழ் உறுப்பினர்களாகப் பதவி வகித்து வந்தனர்.

சட்ட நிர்வாக சபை உறுப்பினராக நியமனம் பெற்ற பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார் சட்ட நிர்வாக சபையில் நடைபெற்ற முக்கியமான விடயங்களில் தொடர்ந்தும் தனது கருத்துக்களை அச்சமின்றித் தெரிவித்து வந்தார்.

இவர் சிறந்த பேச்சாளராகவும், நல்லமுறையில் விவாதங்கள் செய்யக் கூடியவராகவும் இருந்தார். இவருடைய காலத்தில் விவாகப் பதிவு சம்பந்தப்பட்ட சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது மற்றும் தரிசு நிலங்கள் சம்பந்தமான சட்டங்கள் விவாதங்களுக்கு எடுக்கப்பட்ட போது தனது கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறினார்.

விவாக சம்பந்தப்பட்ட சட்டம் முகமதியர்களைத் தவிர மற்றைய ஏனைய அனைவரும் விவாகத்தைப் பதிவு செய்ய வேண்டும்



எனக் கட்டாயமாக்கப்பட்டது.

அந்தச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில், "பிரித்தானியாவில் எங்காவது திருமணப் பதிவு கட்டாயமாக உள்ளதா?" எனக் கேள்வி கேட்டு சவால் விடுத்தார்.

"பிரித்தானியாவில் கட்டாயம் இல்லாத விடயத்தை காலனித்துவ நாட்டில் ஏன் கட்டாயப்படுத்த முன்வருகிறீர்கள்?' எனக் கேட்டார். இப்படியான ஒரு சட்டத் திருத்தத்திற்கு எந்தவிதமான தேவையும் இல்லை என அடித்துக் கூறினார்.

"இவ்வாறான ஒரு சட்டம் இல்லாமலேயே நாங்கள் திருமணங்களை நடாத்தி வருகின்றோம். இது சம்பந்தமாக யாரும் உங்களுக்கு முறைப்பாடு செய்தார்களா?'

மேலும் அவர் இது சம்பந்தமாகப் பேசுகையில், "இது இந்துக்களுடைய உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய ஒரு சட்டமாக உருவாகின்றது."

"மேலும் நீங்கள் இங்கே அறிமுகப்படுத்த இருக்கும் சட்டம் இங்கிலாந்து நாட்டுச் சட்டம் அல்ல. ஸ்கொட்லாந்து நாட்டுச் சட்டம் அல்ல. இந்திய நாட்டுச் சட்டம் அல்ல."

இவ்வளவு எதிரப்பின் மத்தியிலும், உத்தியோகத்தரின் உதவியோடும் சட்ட நிர்வாக சபையில் அந்தச் சட்டத் திருத்தம் நிறைவேறிற்று.

அதையடுத்து இங்கிலாந்து காலணிச் செயலாளருடன் குமாரசுவாமி முதலியார் தொடர்பு கொண்டு, தனது எதிர்ப்பையும் அதற்கான காரணத்தையும் விளக்கிக் கூறினார்.

"பதிவு செய்தல் என்பது, திருமணம் செய்ததற்கான சாட்சியமே அன்றி வேறல்ல" என்று பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார் அடித்துக் கூறினார்

குமாரசுவாமி முதலியார் சட்ட நிர்வாக சபை உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் அவர் பிரிட்டிஸ் அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்திற்கு தனது கருத்துக்களைக் கூறியதை அடுத்து, தேசாதிபதி அவரை இரண்டாவது முறை நியமிக்க முன்வரவில்லை.

மேலும் தரிசு நிலச்சட்டம் தொடர்பாக குமாரசுவாமி முதலியார் சட்ட நிர்வாக சபையில் பேசுகின்ற போது, "மக்களின் பாதுகாவலனாக இருப்பதற்குப் பதிலாக அரசாங்கம் பகல் கொள்ளைக்காரர் போல் இயங்க முற்படுகின்றது. நிலம் முழுவதும் எங்களுக்கு உரிமையாக உள்ளது"

அந்த வார்த்தைகளைக் கேட்ட தேசாதிபதி சேர் வெஸ்ற் றிஜ்வே ஆத்திரத்துடன்,"கௌரவ உறுப்பினர் என்ன கூறினார் என விளங்கவில்லை. திரும்பக் கூறுவாரா?" எனக் கேட்டார்.

குமாரசுவாமி முதலியார் அவர் கூறியதை மீண்டும் கூற முன்வந்த போது, "நான் சொன்னேன்..." அவர் கூறி முடிப்பதற்கு முன்பே, தேசாதிபதி தலையிட்டுக், "கௌரவ உறுப்பினர் திருப்பிக்கூற வேண்டாம். கௌரவ உறுப்பினர் தொடர்ந்தும் பேசலாம்."

இந்தக் கூற்று அன்றைய தேசாதிபதி சேர். வெஸ்ட் றிஜ்வேயிற்கு ஆத்திரத்தை ஊட்டுவதாக இருந்தது.

அன்றைய காலத்தில் சட்ட நிர்வாக சபையில் நியமனத்தை பெற வேண்டுமாயின், பொது மக்களின் ஆதரவு இருந்தால் மட்டும் போதாது. நியமனம் பெறுவதற்கு தேசாதிபதியின் ஆதரவு இருக்க வேண்டும்.

அன்றைய தேசாதிபதியான சேர். வெஸ்ட் றிஜ்வே குமாரசுவாமி முதலியாருக்கு இரண்டு தடவை நியமனம் வழங்க முன்வரவில்லை.

அரசாங்கத்தையும், தேசாதிபதியையும் சட்ட நிர்வாக சபையையும் பகிரங்கமாகக் கண்டித்த குமாரசுவாமி முதலியாரை எப்பொழுது சட்ட நிர்வாக சபையிலிருந்து நீக்குவேன் எனக் காத்துக் கொண்டிருந்த தேசாதிபதி, அவருக்கு நியமனம் வழங்க முன்வரவில்லை.

அவருக்குப் பதிலாக டாக்டர் றொக்வூட் எனும் பிறிதொரு தமிழரை நியமித்தார்.

இது சம்பந்தமாக சேர் .பொன்னம்பலம் இராமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

"முதலியார் குமாரசுவாமி எனது மூத்த சகோதரர் இவர் தமிழரை சட்ட நிர்வாக சபையில் பிரதிநிதித்துவம் செய்தவர், அவர் தமிழ் மக்களின் நலனுக்காகவும், நாட்டு மக்களின் நலனுக்காகவும் பாடுபட்டவர், உழைத்தவர், அவருடைய முதலாவது தவணை பூர்த்தி அடைந்த பின்னர், மீண்டும் அவரை நியமிக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் விரும்பினார்கள். வேண்டுகோள் விடுத்தனர்..கொழும்பு நகர சபை மண்டபத்தில் குமாரசுவாமி முதலியாரையே இரண்டாவது முறை நியமிக்க வேண்டும் என்று பிரமாண்டமான ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

குமாரசுவாமி முதலியாருக்கு ஆதரவாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் டாக்டர் ரக்வூட்டே தலைமை தாங்கினார்.

ஆனால் இவர் இலங்கையிலிருந்த ஐரோப்பிய இனத்தவர்களுக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்தார். அதேசமயம் தேசாதிபதி சேர் வெஸ் றிஜ்வே மிகவும் சாதுர்யமாக காய் நகர்த்தத் தொடங்கினார்.

"உங்களுக்குத் தமிழர்களுக்கான சட்ட நிர்வாக சபை நியமனத்தை வழங்கினால், நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா,?" என டாக்டர் ரக்வூட்டிற்கு தேசாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அந்தக் கடிதத்தைப் பெற்ற டாக்டர் ரக்வூட், குமாரசுவாமி முதலியாருடனோ வேறு எவருடனோ தொடர்பு கொள்ளவில்லை. தான்தோன்றித்தனமாகத் தனது சம்மதத்தைத் தெரிவித்து தேசாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்தார்.

இருந்தபோதிலும் முத்துக் குமாரசுவாமி முதலியார் பதவி விலகிய பிற்பாடு அவரது சேவையைப் பாராட்டி தேசாதிபதி சேர் வெஸ்ட் றிஜ்வே கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

குமாரசுவாமி முதலியார் சிறந்த தேசியவாதியாக இருந்தார். தென்னிலங்கையிலேயே இந்து மதம் அருகி வரும் சந்தர்ப்பத்திலே, அதனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டார்.

அவருடைய சமூகப் பணிகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய பணிகளுடன் ஒப்பிடக்கூடியதாக இருந்தது.

குமாரசுவாமி முதலியார் ஒரு சிறந்த தமிழ்க் கல்விமான் ஆவார்.

அவரை "மகா வித்துவான்" என்றே பொதுவாக அழைப்பார்கள். அவருடைய தமிழ், சமஸ்கிருதப் பாண்டித்தியம் பல சங்க நூல்களை ஏட்டுச் சுவடுகளிலிருந்து எடுத்து அதனைத் திருத்தி வெளியிட வைத்தது.

பல நூற்றாண்டு காலமாகக் கிடப்பிலிருந்த சிலப்பதிகாரத்தை அவர் மீண்டும் ஏட்டிலிருந்து எடுத்துத் திருத்தி வெளியிட்டார்.

அவருடைய தந்தையான பொன்னம்பலம் முதலியார் கட்டிய கொச்சிக்கடையிலுள்ள சிவன் கோயிலை நிர்ணயிக்கும் பொறுப்பு இவரிடம் விடப்பட்டது.

அந்தக் கோவில் வளவுகளுக்குள்ளேயே பிராமணர்களுக்கு கோவில் பூஜை புனஸ்காரங்களைப் பற்றிய விடயத்தைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு பள்ளியை உருவாக்கினார்.

குமாரசுவாமி முதலியார் நீண்ட காலமாக யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு சைவபரிபாலன சபையின் தலைவராக இருந்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மக்களின் அழைப்பை ஏற்று, 1895 ஆம் ஆண்டு இந்துக் கல்லூரியைத் திறந்து வைத்தார்.

அந்தக் கல்லூரிக்கு புலமைக் கல்விக்குத் தேவையான பணத்தை அவர் ஒதுக்கினார்.

குமாரசுவாமி முதலியார் அவர்கள் 07.06.1906 ஆம் ஆண்டு காலமானார். நாடு சிறந்த ஒரு தலைவரை இழந்தது.

வாழ்ந்த காலத்தில் குமாரசுவாமி முதலியார் தமிழ் மக்களின் உந்து சக்தியாகத் திகழ்ந்தார்.

அவர் இருந்த காலத்தில் தமிழர்கள் சுதந்திரமாக இயங்கினார்கள்.

**கே.ரி.இராஜசிங்கம்**



## வீரசிவாஜி

## விஜயுடன் வைரமுத்து

தெறி படத்துக்குப் பிறகு விஜயின் படத்தை பரதன் இயக்குகிறார். கில்லி, வீரம் போன்ற படங்களின் வசனகர்த்தாவாக பணியாற்றிய பரதன், விஜய் நடித்த அழகிய தமிழ்மகன் படத்தை இயக்கியுள்ளார். சந்தோஷ் நாராயணன் இசையமைத்த இந்தப் படத்தின் அனைத்து பாடல்களையும் வைரமுத்து எழுதியுள்ளார். புலி படத்தின் பாடல்களை எழுதிய வைரமுத்து மீண்டும் விஜய் - பரதன் கூட்டணியில் உருவாகும் படத்தின் பாடல்களையும் எழுதுகிறார். கார்த்தி நடிக்கும் காஷ்மோரா படத்துக்குப் பிறகு மீண்டும் சந்தோஷ் நாராயணனுடன் வைரமுத்து இணைவதாலும் இந்தப் படத்தின் பாடல்களுக்கு இப்போதே எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



## நினைத்ததை அ
## விரும்பும் காஜல்

## மறைந்தது அவமானம்

'இறுதிச்சுற்று படத்தில் நடித்தபோது பல தடங்கல்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு தடவை படப்பிடிப்புக்கு சென்றபோதும் பிரச்சினைகளை சந்தித்தோம். கஷ்டங்களும் அவமானங்களும் ஏற்பட்டன. ஒரு கட்டத்தில் இந்த படத்தை கைவிட்டு விட்டு வேறு படத்துக்கு போய்விடலாம் என்றும் யோசித்தோம். ஆனால் எனக்கு நெருக்கமான நண்பர் ஒருவர் இந்த படத்தின் கதாபாத்திரம் அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும் என்று கூறி தடுத்தார். அதன்பிறகு படப்பிடிப்பை தொடர்ந்து நடத்தி ஒரு வழியாக முடித்தோம். படம் வெளியான பிறகு நல்ல வரவேற்பை பெற்றது. பாராட்டுகளும் கிடைத்தன. ஏற்கனவே பட்ட அவமானங்கள் மறைந்து விட்டன. பணத்துக்காக நடிக்க கூடாது. பாராட்டு கிடைப்பது மாதிரியான நல்ல கதைகளில் நடிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த படம் மூலம் எனக்கு ஏற்பட்டுள்ளது. நான் எங்கேயும் போக மாட்டேன். தமிழ் சினிமா தான் எனக்கு உயிர் என்கிறார் மாதவன்.



## கணிதன்



## கத்தியின் வழியில் மிருதன்

இளையதளபதி விஜய், சமந்தா நடிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கிய "கத்தி" திரைப்படம் கடந்த ஆண்டு வெளியாகி சூப்பர் ஹிட் ஆகியது. பொழுதுபோக்கு அம்சங்கள் மட்டுமன்றி சமூகத்திற்கு தேவையான கருத்தையும் இந்தப் படத்தில் அழுத்தமாக கூறியிருந்ததால் இந்தப் படம் விஜய் ரசிகர்களை மட்டுமன்றி அனைத்து தரப்பினர்களையும் கவர்ந்தது.மேலும் இந்தப் படத்தில் ஒரு காட்சியில் கூட புகைபிடிக்கும் அல்லது மது அருந்தும் காட்சிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் "கத்தி" படத்திற்கு அடுத்து புகை பிடிக்கும், மது அருந்தும் காட்சிகள் இல்லாத அடுத்த படம் ஜெயம் ரவியின் "மிருதன்" என்பது தற்போது தெரிய வந்துள்ளது. மிருதன்" படத்திலும் "கத்தி" போல சமூக கருத்துக்கள் ஏதும் இருக்குமா? என்பது படம் வெளிவந்த பின்னர்தான் தெரியவரும்.



# ரஜினிக்கு உதவியாக எமி

"எந்திரன்" படத்தின் இரண்டாம் பாகமான "2.0" படத்தில் ரஜினிக்கு உதவி யாளராக எமிஜாக்சன் நடித்து வருவதாக கூறப்படுகிறது. எமிஜாக்சனும் அவரது நண்பர்களும் ரஜினிக்கு உதவியாளர்களாக சேருவதாகவும், நாளடைவில் ரஜினி மீது எமிஜாக்சனுக்கு காதல் வருவது போன்ற காட்சி இந்த படத்தில் இருப்பதாகவும் இந்த படத்திற்காக சென்னை அருகே உள்ள தீம் பார்க் ஒன்றில் பிரமாண்டமான செட் தயாராகி வருவதாகவும், தற்போது மலேசியாவில் "கபாலி" படப்பிடிப்பில் உள்ள ரஜினிகாந்த், அந்த படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டு இந்தியா திரும்பியவுடன் "2.0" படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

லைகா நிறுவனத்தின் பிரமாண்ட தயாரிப்பில் ஷங்கர் இயக்கத்தில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் உருவாகி வரும் இந்த படம் இந்தியாவின் மிகப்பெரிய பட்ஜெட் படம் என்பது குறிப்பிடத்தக்கது.






# தொல்லைக்காட்சி

# விரைவில் மாரி 2



தனுஷ், காஜல் அகர்வால், ரோபோ சங்கர், விஜய்ஜேசுதாஸ் நடிப்பில் பாலாஜி மோகன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளிவந்த "மாரி" படம், சூப்பர் ஹிட் ஆகி நல்ல வசூலை கொடுத்தது. அனிருத்தின் இசையில் உருவான இந்த படம் அனைத்து தரப்பினர்களையும் கவர்ந்த நிலையில் இந்த படத்தின் இரண்டாவது பாகம் விரைவில் தயாராகும் என கடந்த சில நாட்களாக செய்திகள் வெளிவந்தவண்ணம் இருந்தது. இந்நிலையில் "மாரி 2" திரைப்படம் வரும் அக்டோபர் முதல் தொடங்கவிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. தற்போது தனுஷ் நடித்து வரும் "கொடி" படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததும் "மாரி 2" படத்திற்காக தனுஷ் அந்த படத்தின் டிரேட்மார்க் மீசை மற்றும் தாடியை வளர்க்கவுள்ளதாக கூறப்படுகிறது.. இரண்டாவது பாகத்தில் தனுஷின் கேரக்டருக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும் என தெரிகிறது.



# ...அடைய

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் சவுகரியமாக இருக்கவே விருப்பப்படுவார்கள். தன்னைப்பற்றியே சிந்திக்கவும் செய்வார்கள். ஆனால், நான் அதில் மாறுபட்டு இருக்கிறேன். எப்போதும் என்னைச் சுற்றி இருக்கும் விஷயங்களைப் பற்றியே சிந்திக்கிறேன். மற்றவர்களைப் பற்றியே யோசிக்கிறேன். தேவையில்லாதவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன். நான் ஏதேனும் ஒன்றை அடைய நினைத்தால், அது நிறை வேறும் வரை விடமாட்டேன். ஆசைப்பட்டதை முடித்த பிறகுதான், அடுத்தது பற்றி சிந்திப்பேன். இப்படிப்பட்ட ஒரு பிடிவாத குணம் எனக்குள் இருக்கிறது. இந்த பிடிவாதம் தான் என்னை உயரத்தில் வைத்திருக்கிறது. இதை என்னுடைய பெரிய பலமாக கருதுகிறேன். நான் சினிமாவில் அறிமுகம் ஆனபோது நிறைய நல்ல கதைகள் வந்தன. ஆனால், மொழி தெரியாது இருந்தாலும் அவற்றில் நடிக்க ஒப்புக் கொண்டேன். மொழி தெரியாவிட்டாலும் நிச்சயமாக இந்தப் படங்களில் என்னால் சிறப்பாக நடிக்க முடியும் என்ற பிடிவாதம் இருந்தது. அப்போது நடிக்க யோசித்திருந்தால் சினிமாவில் பின் தங்கியிருப்பேன். பிடிவாதம் காரணமாகவே அவற்றில் நடித்து முன்னுக்கு வந்துள்ளேன். ஒவ்வொரு படமும் எனக்கு புதிய அனுபவத்தை கொடுக்கிறது.

# டைசனை கவர்ந்த இறுதிச்சுற்று



உலகின் புகழ்வாய்ந்த குத்துச்சண்டை வீரரான 'மைக் டைசன்' இறுதிச்சுற்று படத்தை பார்க்க விருப்பம் தெரிவித் துள்ளார். இதுகுறித்து, அவரது அதிகாரபூர்வ பேஸ்புக் வலைத்தளத்தில், பிரபல ஆங்கில இணையதளத்தில் வெளிவந்த 'இறுதிச்சுற்று' படத்தின் விமர்சனத்தை பதிவு செய்து, இந்த பொக்சிங் படத்தை பார்க்க ஆசைப்படுகிறேன் என்று பதிவிட்டுள்ளார். உலகின் மிகச்சிறந்த குத்துச்சண்டை வீரர்களில் ஒருவரான மைக் டைசனையே ஈர்க்கும் அளவுக்கு 'இறுதிச்சுற்று' படம் அமைந்ததில் படக் குழுவினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



# கேது பூ

# பண்டாரவன்னியன் எழுச்சியும் வீழ்ச்சியும்

அடிமைத்தளையை அறுத்தெறிந்து தரணி எங்கும் தமிழர் நிலை பெற அந்நியர் ஆட்சிக்கு எதிராக வீரப்போர் புரிந்து அந்நிய ஆட்சியை நிலைகுலையச் செய்து தமிழர் மானம் காத்த வீர மறவர் வரிசையில் தன்னிகரற்ற தலைவனாக தமிழர் நெஞ்சங்களில் வாழ்ந்து தகைமை பெற்றோரில் பண்டார வன்னியனிற்கு என்றும் தனி இடம் உண்டு.

அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கள் வெகுவேகமாக தமிழ் தாயகம் எங்கும் பரவும் வேளைகளில் எல்லாம் தமிழர் தாயகத்தில் தம் இன்னுயிரை ஆகுதியாக்கி தமிழர் பெருமையை நிலைநாட்ட காலத்திற்கு வீர மறவர்கள் தமிழர் சமுதாயத்தில் தோன்றுவது தமிழ் அன்னையின் தவப்பேறே.

அவ்வகையில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் அந்நிய ஆதிக்கம் மேலோங்கிய வேளைகளில் வன்னி மண் காப்பதற்காக தன் இன்னுயிரை ஆகுதியாக்கிய வீர மறவன் பண்டார வன்னியனின் வரலாறு நலிந்த தமிழர் நெஞ்சங் களை மீண்டு உயிர்பெறவைப்பது திண்ணம். அவ்வகையில் வன்னி மண்ணின் காவிய நாயகன் பண்டார வன்னியன் பற்றி நோக்குவது காலத்தின் தேவையே.

பண்டார வன்னியன் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் முழுமையாக கிடைக்காத போதிலும் கூட கிடைக்கும் தகவல்களின் அடிப்படையிலும் மரபுரீதியான கர்ண பரம்பரைக் கதைகளின் அடிப்படையிலும் பண்டார வன்னியன் பற்றிய ஓர் கருத்துக் குவிப்பு இவ் ஆய்வு மேலும் தொடர வழி எற்படலாம் என்ற வகையில் பண்டாரவன்னியன் பற்றி நோக்குவோம்.

வன்னி நாட்டின் இறுதி மன்னனாகத் திகழ்ந்த குலசேகரம் வைர முத்து பண்டாரவன்னியன் பற்றி மிகக் குறைந்த தகவல்களே கிடைத் துள்ளன.

பண்டாரவன்னியனின் இளமைக்காலம், பெற்றோர், வம்சம் பற்றிய முழுமைத்தகவல்கள் இல்லாத போதும் கூட வண.சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் "நல்ல மாப்பாணரும் ஒரு முதலியார் பதவி வழங்கலும்" என்ற கட்டுரையின் அடிப்படையிலும் பணங்காம வன்னியர் பரம்பரையில் பிரசித்தி பெற்ற பெருமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படயிலும் பணங்காமம் தொன்பிலிப் மாப்பாணனின் மகள் குழந்தை நாச்சியின் மகனே பண்டார வன்னியன் என்று குறிப்பிடப்படுகின்றது. வைரமுத்து வன்னியா இவரின் தந்தை எனவும் கொள்ளப்படுகிறது.

பண்டாரவன்னியனின் வாழ்க்கைக்காலம் 1765 வரையில் ஆரம்பித்திருக்க வேண்டும். என்றும் 1783ஆம் ஆண்டு காலப்பகுதியில் வன்னிமை பதவி பெற்றிருக்க வேண்டும் என்றும் ஆய்வு நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்த காலப்பகுதியில் பண்டார வன்னியன் முள்ளியவளை, மேற்பற்று வன்னிமைகளுக்கு பொறுப்பான வன்னித் தலைவனாக கடமையாற்றியிருக்கின்றான்.

ஒல்லாந்தர் காலப்பகுதியில் யாழ்ப்பாண பிரதேசத்தில் துணிகளுக்கு சாயமூட்டும் தொழில் பிரபல்யமடைந்திருந்தது. சாயத் தயாரிப்புக்கு பல வகையான பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. றுயினாஸ் என்னும் தாவரத்தின் விதை அன்றைய பேர்சியா என அழைக்கப்படும் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளில் பயிரிடப்பட்டது. சாயவேர் கிண்டி எடுக்கும் வேலைக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. இதனால் பலர் இத்தொழிலிருந்து



விலகத்தலைப்பட்டனர். இவ்வாறு விலகியவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள். இதனால் யாழ்ப்பாண மக்கள் பலர் வன்னிக்குச் சென்று பண்டாரவன்னியனிடம் அடைக்கலம் புகுந்தனர்.

இவ்வேளையில் ஒல்லாந்தர் சாயவேர் தருமாறு பண்டாரவன்னியனை பணித்தனர். ஆனால் பண்டார வன்னியன் ஒல்லாந்தரின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தான். இவ்வேளையில் ஒல்லாந்த படை பலமற்றிருந்ததுடன் படையெடுப்பிற்குத் தேவையான செலவீனத்தை தாங்கும் சக்தியை பெற்றிருக்கவில்லை

இச்சந்தர்ப்பத்தில் பண்டாரவன்னியன் நுவரகலாவாவியைச் சேர்ந்த சிங்கள வன்னியரின் உதவியுடன் முல்லைத்தீவிலிருந்து ஒல்லாந்தரின கோட்டையைத் தாக்கினான்.

இவ்வேளையில் 1782 இல் வன்னிக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்ட கப்டன் தோமஸ் நாகெல் சிறிய படைப்பிரிவொன்றுடன் வன்னிக்கு வந்து சேர்ந்தான். முல்லைத்தீவில் நகரம் ஒன்றை அமைத்து அதில் தனது தலைமையகத்தை நிறுவினான். இச்சமயத்தில் 1783 இல் கோட்டையை தாக்கிய பண்டாரவன்னியன் பதவி இழக்க நேரிட்டது.

**பிரித்தானியர் காலம்**

இவ்வேளையில் 1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றிய வேளையில் வன்னிப் பெரு நிலப்பரப்பின் ஆட்சியையும் ஏற்றுக் கொண்டனர். இவ்வேளையில் வன்னித் தலைவர்கள் எவரும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கவில்லை. வன்னியில் அமைதியற்ற கொந்தளிப்பான நிலையே காணப்பட்டது. எனினும் வன்னியர் ஆட்சிக்கு பழக்கப்பட்ட மக்கள் அந்நிய ஆட்சியை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இதனால் வன்னியின் ஆட்சிப் பிரிவுக்கு பொறுப்பான ஆற்றல் உள்ள வன்னியன் ஒருவனை நியமிக்க வேண்டிய தேவை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. இதனால் பிரித்தானிய அரசு பண்டார வன்னியனை நுவரகலாவியாவின் எல்லைப்புறத்தில் உள்ள எல்லைப் பிரதேசத்தில் வன்னிப் பிரதேச வன்னியமாக நியமித்தது. (ஜே.பி. லூயிஸ் வன்னி மாவட்ட கைநூல்)

1803ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அன்றைய ஆளுநர் பிரட்ரிக் நோர்த்தின் பரப்புரைக்கமைய மலையகம் மீது படையெடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பண்டார வன்னியன் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்தான். ஆங்கிலேயரை தனது பிரதேசத்திலிருந்து விரட்டப்போவதாக சபதம் செய்தான். அவன் படையெடுத்து வன்னிப் பிரதேசம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். கொட்டாயாத்தை கைப்பற்றி சில தமிழ் வீரர்களை அங்கு நிலைகொள்ளச் செய்தான்.

மலையக அரசன் ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன் படை உதவியுடன் ஆனையிறவூடாகவும் ஊடுருவி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தாக்குதல் நடாத்தினான். ஆனையிறவுப் பகுதியிலிருந்து மூன்று கோட்டைகளையும் பண்டாரவன்னியன் தனதாக்கிக்கொண்டான். (முதலியார் செ.இராசநாயகம் யாழ்ப்பாண சரித்திரம் பிரிட்டிஷ் காலம்)

இக்காலப்பகுதியில் 1803 ஆகஸ்ட் 25ஆம் திகதி நுவரகலாவிய திசாவை குமாரசிங்க தலைமையில் வந்த படை உதவியுடன் முல்லைத்தீவிலிருந்த அரசாங்க இல்லத்தையும், கோட்டையையும் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டான். பலமற்ற படையுடன் கப்டன் டிறி பேக் பின்வாங்க நேரிட்டது. இவர் களை ஏற்றிச் செல்ல முல்லைத்தீ வுக்கு வந்த வள்ளங்களில் தனது படையுடன் கப்டன் டிறிபேக் தப்பி ஓடினான். (முல்லைத்தீவு கோட்டைக்கு பொறுப்பாக இருந்த கப்பித்தானும் சிப்பாய்களும் மீன் வள்ளங்களில் ஏறி யாழ்ப்பாணத்திற்கு தப்பி ஓடினார்கள் என முதலியார் இராசநாயகம் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.)

முல்லைத்தீவைப் பிடித்த பண்டாரவன்னியன் தனது மைத்துனனான திசாவை குமாரசிங்காவை பொறுப்பாக நியமித்தான். ஆனால் "ஆங்கிலேயருக்கு சார்பான முதலியார்கள் பலர் அங்கிருந்தமையால் குமாரசிங்க வன்னியன் அங்கு நீடித்திருக்க முடியவில்லை. முதலியார்கள் கொடுத்த பிரச்சினையின் காரணமாக திசாவை அங்கிருந்து வெளியேறிவிட்டார். மீண்டும் சென்று அங்குள்ள மக்களுடன் சேர்ந்து கோட்டையை கைப்பற்றுவேன்" என பண்டாரவன்னியன் கூறியதாக ஜே.பி.லூயிஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து பண்டாரவன்னியனும் படையும் வெளியேறும் போது அங்கிருந்த சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டிருந்த மூன்று பீரங்கிகளை தம்முடன் எடுத்துச் சென்றனர். மேலும் ஐந்து பீரங்கிகள் முல்லைத்திவில் எஞ்சியிருந்தன.

**ஆங்கிலேயரின் மும்முனைத் தாக்குதல்**

பணடாரவன்னியனின் தாக்குதல் மீண்டும் ஏற்பட்டு வரும் என்ற அச்சத்தில் வன்னி மீது மும்முனைத் தாக்குதலிற்கு பிரித்தானியர் ஏற்பாடு செய்தனர்.

திருகோணமலையில் இருந்த கப்டன் எட்வேட் மெட்சின் தலைமையில் சென்ற படையணி முல்லைத்தீவைக் கைப்பற்றியது. குமாரசேகர முதலியாரும் மற்றும் சிலரும் பண்டாரவன்னியனிற்கு உதவி செய்ததற்காக தூக்கில் இடப்பட்டனர்.

முல்லைத்தீவிலிருந்து வட்டுவாகலிற்கு செல்லும் வீதியில் உள்ள பொது வேலை திணைக்களம் அமைந்திருந்த வளவில் காணப்பட்ட மரத்திலேயே அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அம்மரம் தற்போது இல்லாவிடினும் அவ்விடம் தூக்குமரத்தடி என இன்றும் அழைக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (குமாரசேகரா முதலியாரின் பூட்டனாரே வன்னி மாவட்ட கைநூல் எழுதப்பட்ட காலத்தில் முதலியாராக கடமையாற்றினார்)

இவ் வேளையில் இரண்டாவது படையணி யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து லெப்ரினன்ட் ஜோன் ஜாவெல் தலைமையில் 19 ஆவது ரெஜிமென்ட் பிரிவு முல்லைத்தீவுக்குச் சென்றது. இச்சந்தர்ப்பத்தில் கிளர்ச்சியாளரின் பலத்த எதிர்ப்புக் களை சமாளிக்க வேண்டி ஏற்பட்டது. இப்படையினர் வீடுகளை எரித்தனர். கால்நடைகளைக் கொன்றனர்.

இவ் வேளையில் பண்டாரவன்னியன் ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில் உள்ள கிராமம் ஒன்றில் (கற்சிலைமடு) தங்கியிருந்தான். அங்கு தனது படைகளை பலப்படுத்தினான். கற்சிலைமடுவில் இவனிற்கு சொந்தமாக 46 வீடுகள் காணப்பட்டதாகவும் அவ் வீடுகளில் இவனுடைய ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

1803ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் அதிகாலை 5 மணியளவில் கப்டன் டிறிபேக்கின் தலைமையில் மன்னாரிலிருந்து சென்ற படைப்பிரிவு கற்சிலைமடுவிற்கு சென்று எதிர்பாராத விதமாக தாக்குதலை மேற்கொண்டது.

பண்டாரவன்னியன் வசம் பல பீரங்கிகள் காணப்பட்ட போதிலும் அப் பீரங்கிகளை இயக்க முடியாது போனமையாலும் மழைக்காலமாகையாலும் வாளும் வேலும் கொண்டே போரிட வேண்டி ஏற்பட்டது. தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாத நிலையில் பண்டாரவன்னியன் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது.

(யுத்தம் இடம்பெற்ற இடத்தை கிராமவாசி ஒருவன் காட்டியதாகவும் சில புளிய மரங்களின் மத்தியில் அவ்விடம் காணப்பட்டதாகவும் வன்னி மாவட்ட கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

(தொடர்ச்சி 17 இல்......)

தமிழ் அகராதி

# தமிழ் அகராதிகள் ஆக்கத்தில் அறிஞர் கந்தையாவின் பங்களிப்பு

அகராதிமுறை தமிழிற்கு ஒன்றும் புதியதில்லை. இதுவே பன்னெடுங்காலமாக நிகண்டு என்னும் பெயரிலே இருந்து வந்த நூலாகும். மேலைத் தேசத்தவரின் வருகையால் இது அகராதி என்னும் புதிய வடிவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நிகண்டும் அகராதியும் பிற நூல்களைக் கற்பதற்கு உதவிடும் நூல்களாகும். நிகண்டு பாடல்கள் மூலம் விளக்குவது. அகராதி வசன நடையில் விளக்குவதாகும். இதனையே 1820இல் 'ரியட் வின்ஸிலோ என்னும் அம்மையார் "நிகண்டை" இங்குள்ளவர்கள் சொற்களின் கருத்தினை அறிவதற்கு இராகத்துடன் மனப்பாடம் செய்கிறார்கள்! என்று குறிப்பிடுகிறார்.

நிகண்டினதும் அகராதியினதும் தொழிற்பாடு ஒன்றே. வசன நடை தமிழில் வராத காலத்தில் பாநடையில் உருவாக்கம் பெற்றதே நிகண்டு.

மேலைத்தேச ஆக்கங்கள் பெரும்பாலும் உரை நடையில் ஆக்கம் பெற்றமையால் அகராதியும் உரை நடையில் உருவானது.

இனி நாம் தமிழில் அகராதி முறை வளர்ந்த முறையைச் சிறிது ஆய்ந்தாற்றான் நான் எடுத்துக் கொண்ட தமிழ் அகராதிகள் ஆக்கத்தில் கந்தரோடைத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாவின் பங்களிப்பினை அறிய இலகுவாயிருக்கும்.

### சதுர அகராதி

இத்தாலி தேசத்திலிருந்து இந்தியாவிற்கு வருகை தந்தவர் பாதிரியார் பெஸ்கி. (வீரமாமுனிவர்) இவர் தமிழ் நூல்களை கற்றுத் தேர்ந்தார். நிகண்டு கற்காது பண்டைத் தமிழ் நூல்களை அறிவது புரிவது கடினம் என்பதை உணர்ந்தார். பாநடையில் இருந்த சொற்களின் பொருட்களை உரை நடையில் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டார் வீரமாமுனிவர் பெஸ்கி பாதிரியார். இவர் சதுர எனும் நூலினை அகராதி என்ற பெயரில் 1732இல் படைத்தார். இந்த அகராதியே முழுமையாக 1824ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதுவே தமிழில் வந்த முதல் அகராதியாகும்.

### யாழ்ப்பாண அகராதி (மானிப்பாய் அகராதி)

இதனை மிசனறி அகராதி என்றும் கூறுவர். இலங்கையிலே ஆங்கிலேயர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் குறிப்பாக உடுவில், மானிப்பாய், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் கல்வி வளர்ச்சியும் சமய வளர்ச்சியும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இதற்கெல்லாம் அமெரிக்க மிசனறிமார் துணை நின்றனர்.

1818இல் இலங்கை வந்திறங்கிய யோசப் நைற் பாரிய தமிழ் அகராதி அமைப்பிற்கு வித்திட்டார். உடுவிலைச் சேர்ந்த சந்திரசேகரப் பண்டிதர், இருபாலைச் சேனாதிராசா முதலியார் முத்துத் தம்பிப்பிள்ளை போன்றோரைக் கொண்டு அகராதியைத் தொகுப்பித்தார். தொகுப்புப் பணி முடிய முன்னரே நைற் காலமானார். இவரைத் தொடர்ந்து சாமுவேல் 'றிசின்ஸ் என்ற மிசனரி மூலமாக 1842இல் மானிப்பாய் அகராதி என்றழைக்கப்படும் யாழ்ப்பாண அகராதி வெளியிடப்பட்டது. இதில் 58500 சொற்கள் உள்ளன. இதுவே முழுமையான தமிழ் அகராதி என்று கருதப்பட்டது.

### சொல்லகராதி

இந்த அகராதி ஆக்கத்தினைப் பார்ப்போம். இலங்கை யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த கு.கதிர் வேற்பிள்ளை தமிழ் ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலமை பெற்றவர். இந்தியாவில் நீதிபதியாக இருந்தவர். இவரால் தொகுக்கப்பட்டதே சொல்லகராதியாகும்.

இவர் 1829 தொடக்கம் 1904 வரையான காலப் பகுதியில் வாழ்ந்தவர்.

உடுப்பிட்டி நீதிபதி கு.கதிர் வேற்பிள்ளைக்குப் பின் தோன்றியவர் மேலைப்புலோலியைச் சேர்ந்த நா.கதிர்வேற்பிள்ளை. இவர் தமிழ்க் கல்விமான். இவர் தொகுத்து வெளியிட்டது தமிழ் அகராதியாகும். இதுவே தமிழில் வெளியான நான்காவது அகராதியாகும். நா.கதிர் வேற்பிள்ளை 1871 தொடக்கம் 1907 வரை வாழ்ந்தவர்.

### இக்கியச் சொல்லகராதி

முன்னவரின் காலத்தில் வாழ்ந்தவர் தான் சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவராவர். இவர் அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் நூல்களைத் தந்தவர். இவர் இலக்கியச் சொல்லகராதி என்னும் நூலினைத் தந்துள்ளார். இவரின் பிற்காலத்தவர்தான் கந்தரோடை ந.சி.கந்தையா அவர்கள்.

### தமிழ் அறிஞர் ந.சி.க.வின் அகராதிகள் ஒரு நோக்கு

கந்தரோடை ந.சி.கந்தையா அவர்களின் அகராதி முயற்சியினை ஆராய்வதற்கு முன் இவரின் வாழ்க்கையைச் சிறிது பார்ப்பது ஆய்விற்கு உதவியாக இருக்கும்.

கந்தரோடை தமிழ்ப் புலமையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட ஊராகும். இங்கு நன்னித்தம்பி சின்னத்தம்பி அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர்தான் கந்தையா. இவர் 1893இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கந்தரோடையில் கற்றார். தொடர்ந்து உயர் கல்வியையும் கற்றார். இவர் பல ஊர்த்தமிழ் பண்டிதர்களிடமும் ஆங்கில ஆசான்களிடமும் உயர் புலமை பெற்றுக் கொண்டார். இவரைப் பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஒரு நூலின் முன்னுரையில் பண்டிதரென்றே குறிப்பிடுகிறார். கந்தரோடையில் உள்ள பாடசாலையிலே ஆசிரியராகச் சில காலம் பணியாற்றினார். இவ்வேளை நவாலியில் இரத்தினம்மா என்னும் பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

ஆசியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெற்ற காலம். ந.சி.க.ஆசிரியத் தொழிலை விட்டு மலேசியாவிற்குச் சென்றார். அக்காலத்தில் இலங்கையைச் சேர்ந்த பலர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு வேலைக்குச் சென்றார்கள். ந.சி.கந்தையா அவர்கள் மலேசியாவில் அதுவும் புகையிரதப் பகுதியில் உயர் பதவியில் சேர்ந்தார். மலேசியாவில் நூல்களின் அறிவும், அனுபவ அறிவும் குறிப்பாக ஆங்கில அறிவும் பெற்றார். அங்குதான் தமிழ் நூல்களை எழுதத் தொடங்கினார். 1937ஆம் ஆண்டு தொடக்கம் 1940ஆம் ஆண்டு வரை ஐந்து பண்டைத் தமிழ் நூல்களுக்கு உரைகளும் உரைநடைகளும் எழுதியுள்ளார்.

பின்னர் மலேசியாவில் செய்த வேலையையும் விட்டு தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கே வாழவும் தொடங்கிவிட்டார். பாவேந்தர் போன்றோரின் தொடர்பு கிடைக்கிறது. அங்கு 66 நூல்களை ஆக்கி வெளியிடும் ஆற்றல் பெற்றுவிட்டார். இவைகளில் ஐந்து அகராதிகளை 1950 தொடக்கம் 1961 வரை எழுதிமுடித்தார். அந்த ஐந்து அகராதிகளைத் தொடுவதே எனது நோக்கமாகும்.

தமிழ் அறிஞர் ந.சி.கந்தையா அவர்கள் முன்பு குறிப்பிட்டது போல் செந்தமிழ் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப் புலவர் அகராதி, காலக் குறிப்பு அகராதி, திருக்குறள் அகராதி என ஐந்து அகராதிகளை எழுதினார்.

தமிழ் அறிஞர் ந.சி.க அகராதிகள் எழுதுவதற்கு ஏன் முற்பட்டார்? ஏற்கனவே இருந்த அகராதிகள் திருப்தி தரவில்லையா? அதுவும் இந்த காலகட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்? இந்தக் காலகட்டத்தில் இருந்த சமூக அரசியல் பின்னணிகள் என்ன? மக்களின் கல்வி அறிவு நிலைகள் என்ன? அவர் அகராதி ஆக்கும் எத்தனத்தில் பட்ட அனுபவங்கள் என்ன? இடர்கள் மகிழ்ச்சி நிலைகள் என்பவற்றிற்கு விடை காண்பதன் மூலம் அவர் அடைந்த அல்லது நாங்கள் அடையும் நன்மைகள் யாவை என்பதை அறியலாம் என நினைக்கிறேன்.

முதலில் தமிழ் அறிஞர் ந.சி.க ஏன் அகராதி முயற்சியில் ஈடுபட நேர்ந்தது என்பதைப் பார்த்தால். இவர் எழுதிய எல்லாத் தமிழ் நூல்களுக்கும் கூறுவது போல் பின்வருமாறு காரணம் குறிப்பிடுகிறார்.

பண்டிதர்களும் புலவர்களும் ஏன் பல்கலைக்கழக மாணவர்களும் புரியும் வண்ணந்தான் கடும் மொழி நடைகளில் அகராதிகள் இருந்தன. வழக்கொழிந்து போன சொற்களை எல்லாம் முன்பு வந்த அகராதிகளில் கண்டதாலும் இன்றைய அரசியல் பொருளாதார சமூக வழக்கங்களுக்கு உரிய சொற்களைச் சேர்க்க வேண்டியிருந்ததாலும் சாதாரண கல்வியறிவுள்ளோரும் பாமரரும் புரியக் கூடியதாக ஒவ்வொரு அகராதிகளையும் ஆக்க முற்பட்டேன் என்று கூறுகிறார்.

இக்காலகட்டத்தில் புதிய சொற்கள் உருவாக்கப்பட்டன. அவை கலை இலக்கியம் சார்ந்ததாகவும் விஞ்ஞானம், வானியல் மற்றும் சரித்திர அரசியல் சார்ந்தவைகளாகவும் வந்தன. அவைகளை உள்வாங்கியே ஒவ்வொரு துறையினருக்கும் பொருத்தமான சொற்களைச் சேர்த்தேன் என்று ந.சி.கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார்.

முன்பு உரையெழுதியவர்களும் அகராதிகள் செய்தவர்களும் தங்களது வித்துவத் திறமையைக் காட்டுவதற்காகக் கடும் சொற்பதங்களைப் புகுத்தியதாக அறிஞர்கள் கூறுவர். உதாரணத்துக்கு திருக்குறள் நூலிற்குப் பரிமேலழகரின் உரை அத்தகையது ஒன்றென்று கூறுகிறார்கள். அதனாற்றான் ந.சி.க. அகராதி நூல்களின் ஆக்கத்திலும் உரைகள் ஆக்கத்திலும் இலகு போக்கைக் கையாண்டார் போலும்.

அகராதிகள் முயற்சியில் நான் இறங்கியதற்குக் காரணம் இவற்றினை எல்லா அகராதி நூல்களிலும் குறிப்பிடத் தயங்கவில்லை.

அதாவது மொழிநடை வலுவுடையன, விலையும் அதிகம். பெரிய நூல்கள், இவைகள் அகராதிகள் கற்போருக்குப் பெரும் சுமையாக இருக்கின்றன. இதே போன்று யாழ்ப்பாண அகராதி பெரும் சுமையாக இருக்கின்றது என்று குறிப்பிடுகிறார்.

### செந்தமிழ் அகராதி

இனி நாம் நன்னித்தம்பி சின்னத்தம்பி கந்தையாபிள்ளை முதலில் ஆக்கிய செந்தமிழ் அகராதியைப் பார்ப்போம். இது 1950இல் வெளிவந்தது. மொத்தமாக 672 பக்கங்களைக் கொண்டது. இதில் 642 பக்கங்களில் அ சொல் தொடக்கம் வெளவுதல் வரையான சொற்கள் வருகின்றன.

இவற்றினை விட மரங்கள், பறவைகள், புல்வகைகள், கிரகங்க்ள போன்றவற்றின் விளக்கங்களும் வருகின்றன. இது பலரும் பயன்பெறும் வண்ணம் அமைந்தது. காலத்தின் தேவையே எனலாம்.

இந்திய அறிஞர்களால் பெரிதும் மதிக்கப்படும் தமிழ் அறிஞர் ந.சி. கந்தையா அகராதிகள் ஆக்கத்தின் போது தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலைய எழுத்துப்பிரதிகளும் சென்னை அரசினர் நுல்நிலைய எழுத்துப்பிரதிகளும் பிற ஆங்கில நாட்டு அகராதிகளும் வழிகாட்டின என்பதைக் கூறுகிறார்.

கந்தரோடை ந.சி.கந்தையா தமிழ் பற்றாளர் பல ஆங்கில நூல்களைக் கற்றாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் பல காலம் தங்கியிருந்து இவ்வளவு நூல்களையும் ஆக்கியுள்ளார். இவருக்கும் பாவேந்தர் பாரதிதாசனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளன என்பதைப் பின்வரும் நான்கு வரிகளாலும் அறிய முடிகிறது.

கந்தையாவின் சிந்தையும் செயலும்
செந்தமிழ்க்கு சேர்த்தநூல் ஒன்றா
இரண்டா
ஈட்டிய அறிவெலாம் ஊட்டினான்
காட்டுவோம் அவர்க்கு நன்றிக் கடனே.

### தமிழ் இலக்கிய அகராதி

அகராதி வரிசையில் தனது இரண்டாவது நூலாக ந.சி.க இதனை ஆக்கினார். 1953ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூல் இவரின் 58ஆவது நூலாகும். இது இந்தியாவின் தமிழ் மண் பதிப்பகத்தாரின் வெளியீடாகும். 50துகளில் ந.சி.கவின் நூல்கள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள புத்தகசாலைகளில் இருந்ததாகவும் பேராசிரியர் தில்லைநாதன் சிலவற்றைத் தான் வாங்கியதாகவும் ஓரிடத்தில் குறிப்பிட்டார். அன்று யாழ்ப்பாணத்தவர் பலரும் இவரைப் பற்றி அறிந்திலர் போலும்.

ந.சி.க எழுதிய தமிழ் இலக்கிய அகராதி 184 பக்கங்களைக் கொண்டது. இந்த அகராதியில் அகர வரிசையில் தமிழ் இலக்கிய நூல்களை வரிசைப்படுத்தியுள்ளார். இதில் நூல்களின் பெயர் ஆக்கியோர் பெயர் ஆண்டு என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

ந.சி.க. தமிழ் இலக்கிய அகராதியை ஆக்குவதற்குத் தூண்டுகோலாக, முன்னோடியாக இருந்தவற்றைக் குறிப்பிடுகையில் மேலை நாட்டவரான பார்சிவல் பாதிரியாரின் ஆறாயிரம் பழமொழி நூல், லண்டன் அருங்காட்சியகத்தில் இருந்த தமிழ் நூல்களின் பட்டியல், சென்னை நூலக தமிழ் நூல்களின் அகவரிசை வெளியீடு தஞ்சாவூர் சரஸ்வதிமகால் கையெழுத்துப் பிரதிகள் என்பன தனக்குத்தூண்டுகோலாகவும் துணையாகவும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இச் செய்தியை ந.சி.க தனது முன்னுரையில் குறிப்பிடத் தவறவில்லை.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ளவர்கள் தமிழ் இலக்கியத்தில் இத்தனை நூல்கள் வெளிவந்தனவா? இத்தனை புலவர்கள் வாழ்ந்தார்களா? இவர் நமது ஊரவரா? எமது நாட்டவரா இப்படி ஒரு நூல் எமது ஊரிலிருந்து வந்ததா? என்று வாயில் கை வைக்கும் வண்ணம் வாசிப்பார்கள். இலங்கை மக்கள் இதனால் பெரிதும் உவகை கொள்ள வேண்டும்.

(தொடரும்)

கலாபூசணம்
சு.துரைசிங்கம்

## வாரமொரு குறள்



*நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்.*

பொருள்

**ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும் மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும் அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதாயம் வாழும்.**

## வேஷம் போட்ட கழுதை

ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதைக்கு தேவையான தீவனத்தை வைக்க முடியவில்லை. வயிறார புல் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் இல்லை. இந்தக் காரணத்தால் கழுதை நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. சலவைத் தொழிலாளி கழுதையின் நிலைகண்டு மிகவும் கவலைப்பட்டான். ஒருநாள் சலவைத் தொழிலாளி காட்டு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு புலி செத்துக் கிடிப்பதைக் கண்டான். அதைக் கண்டதும் சலவைத் தொழிலாளிக்கு ஒரு யோசனை தேன்றியது.

இந்தப் புலியின் தோலை உரித்து அதைக் கழுதை மீது போத்தி நெல் வயல்களில் விட்டு மேயச் செய்தால் உண்மையாகவே புலி மேய்வதாக எண்ணிப் பயந்து கொண்டு



வயலுக்குச் சொந்தக்காரர்கள் பேசாமலிருந்து விடுவார்கள். கழுதை வயிறார மேயும் என்று சலவைத் தொழிலாளி நினைத்து கொண்டான். புலித் தோலை உரித்து எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

மறுநாள் கழுதை மீது புலித் தோலைப் போர்த்தி விளைந்திருந்த வயல்கள் பக்கமாக போகச் செய்தான். புலிதான் பயிரை மேய்கிறது என்று எண்ணிக் கொண்டு குடியானவர்கள் அதை விரட்டப் பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டார்கள். கழுதை விளை நிலத்தில் அன்றாடம் வயிறார மேய்ந்து நன்றாக கொழுத்து விட்டது. ஒரு நாள் கழுதை புலித் தோலைப் போர்த்திக் கொண்டு நெல் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு பெண் கழுதை உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கியது. அதைக் கேட்ட புலித்தோல் போர்த்திய ஆண் கழுதை பெண் கழுதையின் குரலைக் கேட் டதும் உற்சாகமடைந்து தானும் உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கி விட்டது. குடியானவர்களுக்கு உண்மை விளங்கி விட்டது. எல்லோரும் ஒன்று சேர்ந்து தடிகளை எடுத்துக் கொண்டு வந்து கழுதையை நன்றாக அடித்துக் கொன்று விட்டார்கள்.

## தெரியுமா?

- இந்தியாவின் தலைநகர் யாது?
  புதுடில்லி
- கெட்டுப் போகாத உணவு எது?
  தேன்
- காகம் இல்லாத நாடு எது?
  நியூஸிலாந்து
- சாரணப் பயிற்சியளிக்கும் நாடு எது?
  இஸ்ரேல்
- வளிக் கோளத்திலுள்ள நைதரசன் வாயுவின் அளவு?
  78.3 %
- நிலா வெளிச்சத்தில் இரவில் நடமாடும் விலங்குகள்?
  பன்றி, யானை
- நிலா வெளிச்சத்தில் சுதந்திரமாக உலாவ விரும்புவது?
  நாகபாம்பு

*ஜெ. வர்மிகன்*
தரம் 05
யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை

## வண்ண மயிலே

மயிலே மயிலே அழகிய மயிலே
ஆடும் மயிலே தோகை மயிலே
உன் கழுத்தின் வண்ணம் தான் என்ன!
நீலம் பச்சை கலவைதான் என்ன!

மயில் கழுத்துக் கலர்
காணக் காணச் சுண்டி இழுக்கும்
கழுத்தை ஆட்டி நடைஅழகு
காண்பவரை அசர வைக்கும்!

குனிந்து உன் உணவைக் கொத்த
உன் கொண்டைகள் அசைந்தாடும்
மேகம் திரண்டு வர
உன் ஆனந்தம் தான் என்ன?

*யோ. சதுர்ஷா*
தரம் 08
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தன் கல்லூரி

## எத்தனை பொம்மைகள் இருக்கும்?



ஒரு பெரிய மாளிகையில் 100 மாடிப்படிகள் இருந்தன. ஒவ்வொரு படியிலும் படியின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பொம்மைகள் வைக்கப் பட்டிருந்தன. உதாரணமாக, முதல் படியில் 1 பொம்மை, இரண்டாவது படியில் 2 பொம்மைகள், மூன்றாவது படியில் 3 பொம்மைகள்... 50 வது படிக்கட்டில் 50 பொம்மைகள் 100 வது படியில் 100 பொம்மைகள் வைக்கப் பட்டிருந்தன. முதல் படியிலிருந்து 100 வது படி வரை வைக்கப்பட்டிருந்த மொத்த பொம்மைகளின் எண்ணிக்கை எத்தனை என்று உங்களால் விரைவாகக் கண்டுபிடிக்க முடியுமா? கண்டு பிடிங்க பார்க்கலாம்...

இவ்வளவு காலதாமதம் தேவையில்லை... எளிதில் விடையைக் கண்டு பிடிக்கலாம். எப்படி என்கிறீர்களா?

படிக்கட்டுகளைக் கீழ்க்காணும் முறைப்படி இரண்டு இரண்டு படிகளாக இணையாக்கிச் சேர்த்துக் கூட்டவும்.

## மூளைக்கு வேலை

உதாரணமாக,
1+99 =100
2+98 =100
3+97 =100...
இப்படியே...
49 + 41=100 வரை கூட்டினால் மொத்தம் 4900 வரும்.

## குட்டீஸ் பக்கம்



## ஆ*ட்கா*ட்டி



இந்தப் பறவை நீர் நிலைகளை அண்டி வாழும். வயல் வெளிகளில் இது உணவு தேடித் திரிவதைக் காணலாம். மனிதரைக் கண்டதும் ஹீடிற்இற் ஹீடிற் இற் என உரக்க ஒலி எழுப்புவதால் ஏனைய விலங்குகளுக்கு அபாய சமிக்ஞை வழங்குகின்றது. இதனால் ஆட்காட்டி எனும் காரணப் பெயர் பெற்றுள்ளது.

கண் புருவத்திலிருந்து மூக்கு வரை சிவப்பு தசை வளர்ந்திருக்கும். சொண்டு சிவப்பாக இருப்பினும் நுனி மட்டும் கறுப்பாக இருக்கும். 3 தொடக்கம் 5 வரையான பறவைகள் குழுவாக காணப்படும். பூச்சிகள், எறும்புகள், சிறு ஓணான், பல்லி மற்றும் நத்தை என்பவற்றை உணவாகக் கொள்ளும்.

கூடு கட்டுவதில் அதிக நேரம் செலவழிக்காது சோம்பேறி. வெளிகளில் காணப்படும் சிறு கிடங்குகளில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

**தொல்பொருள்**
முற்காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆதாரங்கள்.

**வெள்ளிவிழா**
இருபத்தைந்தாவது ஆண்டினிறுதியில் கொண்டாடப்படும்.

**பொன்விழா**
ஐம்பதாவது ஆண்டு முடிவில் எடுக்கும் விழா.

**வைரவிழா**
அறுபதாவது ஆண்டினிறுதியில் கொண்டாடப்படும் விழா.

**பன்னச்சாலை**
இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை.

**ஏகபோகம்**
தனக்கே உரிமையான முழுப் பொருளையும் அனுபவித்தல்.

(10 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# மன்னாரில்...

கொழும்புக்கு வந்ததாக. இவருக்கு கொழும்பில் இருக்கும் காணிகளைப் பற்றி இங்கு கூறவில்லை. முக்கியமான காரணத்திற்காகவே இந்த காணிகளைப் பற்றிப் பேசினேன். இந்தக் காணிகளில்தான் இந்த அப்பாவி மக்கள் குடியேற்றப்பட இருந்தனர். இந்தக் காணிகளில்தான் நகர சமூக முறையொன்று இருந்தது. இந்தக் காணிகளில்தான் வைத்தியசாலை, பாடசாலை, வீதிகள் உள்ளிட்ட கட்டமைப்புக்கள் இருந்தன. யானைகள் வசிக்கும், பாம்புகள் நிறைந்த அந்த பாரிய வனாந்தரத்தில் இந்த மக்களை குடியேற்றி மிகவும் தந்திரமான முறையில் இந்தக் காணிகளை இவர் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

அடுத்து அவர் விடுத்த சவால் பற்றி எனக்கு கூற வேண்டியிருக்கின்றது. இவரது மனைவி.. ஒரு விடயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விடயம் தான்...

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – திரும்பவும் இவ்விடத்தில் தாய் தந்தை மனைவியைப் பற்றி பேசுவது தவறானதுதானே...

**ஹிரு தொலைக்காட்சி** – நீங்கள் எந்த சவால் பற்றி இங்கு பேச முனைகிறீர்கள்?

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – இவரது பெயரில் காணி இருந்தால் நிரூபிக்கச் சொன்னார். இருந்தால் இராஜினாமாச் செய்வதாகச் சொன்ன அந்த விடயம். அது ஒரு சவால்தானே...? வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்தின் 2012.10.08ஆம் திகதியிடப்பட்ட அனுமதியின்றி அபிவிருத்தி செய்யப்படும் 100 ஏக்கர் காணி விடயமாக (என்ற தலைப்பிலான கடிதத்தை தேரர் வாசிக்கின்றார்) (மூன்று பெயர்களைக் குறிப்பிட்டு) ஆகியோரினால் சுமார் 100 ஏக்கர் காணி போலி உறுதிகள் தயாரிக்கப்பட்டு தம்வசம் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த போலி உறுதிகளை நான் காட்டுகிறேன். இதுதான் அந்த போலி உறுதிகள். (சில பிரதிகளைக் காட்டுகிறார்) இவருக்கு நன்றாக காணிகளுக்கு போலி உறுதிகள் செய்து பழக்கம். ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் அனுமதியின்றி தம்வசம் வைத்திருக்கும் அரசுக்குரிய காணிகளை விடுவித்துக் கொள்வது தொடர்பாக லலித் வீரதுங்க, ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம், கொழும்பு 10 என்பவருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்படுகின்றது (என்று அந்தக் கடிதத்தை தேரர் வாசித்துக் காட்டுகின்றார்).

**(முற்றும்)**

(08 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# பிரபாகரன் கைது...

மதுரையில் இருந்த காலத்தில் தனது தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி வந்தார்.

பொலிஸார் அவரைக் கண்டும், காணாமலும் இருந்த காலத்தில் அவர் மதுரை நகரத்திற்கு வெளியே தற்காலிகப் பயிற்சி முகாம்களை உருவாக்கி துப்பாக்கி சுடும் பயிற்சிகளை வழங்கினார்.

தனது பயிற்சியையும் மிகவும் அக்கறையுடன் மேற்கொண்டார். அந்தக் காலத்தில் பாதுகாப்பு நிறைந்த மூன்று வீடுகளைத் தமது போராளிகளுக்காக நடாத்தி வந்தார்.

அதே நேரத்தில் உமா மகேஸ்வரன் சென்னையில் பெருஞ்சித்தனாருடன் தங்கியிருந்தார்.

பெருஞ்சித்தனார் ஓர் நல்ல தமிழ் செயற்பாட்டாளர், மற்றும் நல்ல எழுத்தாளரும் ஆவார்.

அந்தக் காலத்தில் உமாமகேஸ்வரனின் நடவடிக்கையினை பிரபாகரனின் ஆட்கள் கண்காணிக்கத் தொடங்கினார்கள்.

உமா மகேஸ்வரனின் பாதுகாப்பில் பெருஞ்சித்தனார் அக்கறை காட்டினார். ஆரம்பத்தில் நாற்பத்து ஐந்து நாட்கள் தனது பார்வையில் இருந்து அகலவே உமாமகேஸ்வரனை விடவில்லை.

அந்தக் காலத்தில் உமாமகேஸ்வரனது உயிருக்கு ஆபத்து என்பது மிகவும் துல்லியமாகத் தெரியவந்தது.

அந்தக் காலத்தில் தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ,பெருஞ்சித்தனாரைச் சந்திக்க வந்தார்.

அப்பொழுது உமாமகேஸ்வரன் – பிரபா இருவருக்கும் இடையில் இருந்த முறுகல் நிலையை உணர்ந்த அமிர்தலிங்கம், இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் இறங்கினார்.

பேச்சு வார்த்தை நடாத்தவும், உமாவைச் சந்திக்கவும் சென்னைக்கு வருமாறு பிரபாகரனுக்குத் தகவல் அனுப்பினார்.

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# பண்டாரவன்னியன்...

இவ்வேளையில் பண்டாரவன்னியனிற்கும் மலையக அரசிற்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்டதாக வலியுறுத்தும் வகையில் கண்டி மன்னனது முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்றை பண்டார வன்னியனிடமிருந்து கைப்பற்றியதாக ஆங்கில அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டள்ளது. முல்லைத்தீவுப் போரில் பண்டார வன்னியனிடம் ஆயுததாங்கிகள் 15, ஈட்டிகள் 12, வாள்கள், ஆயுதம் வைக்கப்பட்ட பீப்பா, இரண்டு கூடைகள் நிரம்பிய ஆயுதங்களை தாம் கைப்பற்றியதாக ஆங்கிலேயரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1803 இல் தோற்கடிக்கப்பட்ட போதும் பண்டாரவன்னியன் தன் எதிர்ப்பைக் கைவிடவில்லை. 1810 மே மாதம் கண்டி பிரஜைகள் சிலரது உதவியுடன் கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் தன் எதிர்ப்பைக் காட்டினான். இவன் படையில் 15 வீரர்கள் மட்டுமே இருந்த போதிலும் ஆங்கிலேயர் இவனது எதிர்ப்பை ஒரு சவாலாகவே கருதினர். 1809இல் முல்லைத்தீவிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ள வட்டுவாகல் எனும் இடத்தில் பண்டாரவன்னியன் வசித்ததாக கதிர்காம முதலியார் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலப்பகுதியில் பண்டார வன்னியனின் படையெடுப்புக்கு அஞ்சிய ஆங்கிலேயர் வெடி வைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் தமது பாதுகாப்பை பலப்படுத்தினர். இலங்கை ரெஜிமென்டைச் சேர்ந்த 1ஆம், 2ஆம் படைப்பிரிவுகளுடன் பீரங்கிகளும் அப்பகுதியில் நிலைகொள்ளப்பட்டன. பீரங்கிகளை இயக்கக் கூடிய றோயல் ஆட்லறியைச் சேர்ந்த ஆங்கில அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். சுதேசிகளும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

1810 செப்ரெம்பர் பண்டாரவன்னியன் கண்டி திசாவையின் உதவியுடன் மீண்டும் வன்னியை தாக்கவிருப்பதாக கதிர்காம முதலியார் வன்னிப்பகுதி முகவராக செயற்பட்ட ரேணருக்கு செய்தி அனுப்பினார். வன்னியை பலப்படுத்தும் முகமாக திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து கூடுதலான ஆங்கிலேய படையினர் வன்னிக்கு அனுப்பப்பட்டனர்.

1810ஆம் ஆண்டு அக்டோபர் 09 ஆம் திகதி கதிர்காம முதலியார் தனது 02 ஆவது அறிக்கையையும் ஆங்கிலேயருக்கு அனுப்பினார். கண்டி திசாவை, பதவியா, நாமக்குள வன்னியர்களும் பொதுமக்களும் கலாவி மாவட்டத்தில் பண்டாரவன்னியனுடன் ஒன்று சேர்ந்துள்ளனர். எனவே எதிர்வரும் நாட்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பண்டாரவன்னியனிடம் திசாவைமார் கேட்ட பொழுது ஒருமுறை முல்லைத்தீவுக் கோட்டையை கைப்பற்றினார்கள். ஆனால் ஆங்கிலேயருக்கு சார்பான முதலியார் அங்கிருந்தமையால் தான் அங்கு நிறுத்திய திசாவை பின்வாங்க வேண்டி ஏற்பட்டது.

எனவே அவர்களை நம்பக்கம் இழுத்துவிட்டால் மக்களின் உதவியுடன் முல்லைத்தீவு கோட்டையை கைப்பற்ற முடியும் என பண்டாரவன்னியன் கூறியதாக அறியக்கிடக்கிறது. ஆனால் எதிர்பார்த்தபடி கண்டி திசாவைகளுக்கு கூறியது போல் பண்டாரவன்னியன் பெரும் தாக்குதலில் ஈடுபடவில்லை. ஆனால் 1811 இல் பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்கு எதிரான வன்னித் தாக்குதலை மேற்கொண்டான்.

உடையாவூரில் இடம்பெற்ற கடும் போரில் பண்டாரவன்னியன் படுகாயமடைந்தான். இவனை இவனுடைய படைவீரரர்கள் பனங்காமத்திற்கு எடுத்துச் சென்றனர். ஆனால் அடுத்த நாளே இவன் மரணமடைந்தான். கதிர்காம நாயக முதலியாரே பண்டாரவன்னியனை காட்டிக்கொடுத்ததாக வரலாற்று அறிஞர்கள் கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் காக்கை வன்னியனே பண்டாரவன்னியனை காட்டிக் கொடுத்தான் என கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றன. இது குறித்த ஆதார பூர்வமான தகவல்கள் எதுவும் இல்லை

அது மட்டுமன்றி காக்கைவன்னியன், யாழ்ப்பாண அரசன் சங்கிலிய மன்னனைக் காட்டிக் கொடுத்தான் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால் காக்கைவன்னியன் ஒரு கற்பனை பாத்திரம் என்று கூறுவோரும் உள்ளனர்.

எது எப்படியிருந்த போதிலும் வீரம் செறிந்த போராட்டங்கள் காட்டிக் கொடுப்பினாலேயே சிதறடிக்கப்பட்டமை நமது கடந்த கால அரசியல் போராட்ட வரலாற்றில் கசப்பான உண்மை என்பதை மறப்பதற்கில்லை.

இவ்வேளையில் பண்டாரவன்னியனின் வீரம் செறிந்த போராட்டத்திற்கு உந்து சக்தியாக விளங்கி அவனது மரணத்தை அடுத்து தன் இன்னுயிரை மாய்த்த குருவிச்சி நாச்சியார் பற்றியும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். ( பண்டாரவன்னியனின் காதலி)

இவ் வேளை பண்டாரவன்னியன் ஒட்டி சுட்டானுக்கு அண்மையில் உள்ள காதலி யார் சம்மாளங்குளம் எனும் இடத்தில் வாழ்ந்த குருவிச்சிநாச்சியாரை காதலித்தான் எனவும் போருக்கு புறப்பட முன் நெடுநாள் பழுதடையாமல் இருக்கும் பொரிவிளாங்காய் எனும் தின்பண்டத்தை குருவிச்சி நாச்சி கொடுத்தனுப்பினார் என்றும் போரில் வெற்றி வாகை சூடித் திரும்பிய பின்னர் திருமணம் செய்வதாக பண்டாரவன்னியன் உறுதி எடுத்திருந்தான் எனவும் போரில் பண்டாரவன்னி யன் வீரமரணம் எய்தியதை அறிந்த குரு விச்சிநாச்சியார் நச்சுத்தன்மை வாய்ந்த கார்த் திகைக் கிழங்கை அரைத்து உண்டு பச் சைத் தென்னோலையில் பன்னாங்கில் படுத்துக் கிடந்து உயிர் நீத்தாள் என்று கர்ண பரம்பரைக் கதை ஒன்று உள்ளது. பேராற்றின் ஒரு குருவிச்சி ஆறு சம்மாளங் குளத்தை ஊடறுத்துச் செல்கின்றது. குரு விச்சிநாச்சியார் பெயராலேயே இவ்வாறு அழைக்கப்படுகின்றது. காதலியார் என்ற பெயர் கொண்ட ஊர் காணப்படுவதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. ( பண்டாரவன்னியன் விழாமலர் 1982 இல் இவ்விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது)

கப்டன் டொன்டிறிபேக் பண்டாரவன்னியனை தோற்கடித்ததாக குறிக்கும் கல்வெட்டு கற்சிலைமடுவில் காணப்படுவதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. 1904– 1905 காலப்பகுதியில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபராக விளங்கிய ஆர்.ஜி.வெஸ்ரிங் அவர்கள் இக் கல்வெட்டை பொறித்ததாக அறிய முடிகின்றது.

ஒட்டிசுட்டான் நெடுங்கேணி வீதியில் ஒட்டிசுட்டானில் இருந்து 5 மைல் தொலைவில் உள்ள பண்டாரக்குளமே பண்டாரவன்னியனின் இராசதானியாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. இப்பகுதியில் பெரியதொரு கிறிஸ்தவ ஆலயம் காணப்பட்டதாகவும் இது ஆங்கிலேய பிரமுகர் பற்றி பேக்கின் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடிவாக வரலாற்று நாயகன் வன்னியின் மைந்தன் பண்டாரவன்னியன் வரலாறு தமிழன் நெஞ்சங்களில் இன்றும் நீங்கா இடம் பெற்றுள்ளமையை வலியுறுத்தும் வகையில நாட்டுக்கூத்து, மேடை நாடகங்கள் இன்றும் ஆங்காங்கே நடாத்தப்பட்டு வருவதும் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி பண்டாரவன்னியன் வரலாற்றை அடியொற்றி “பாயும் புலி பண்டாரவன்னியன்” என்னும் நீண்டதொரு நாவலை வெளியிட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

# பெண்களைத் துன்புறுத்தும் புற்றுநோய்கள்

மனித சமுதாயத்தைப் பெரிதும் பாதித்துப் பல லட்சக் கணக்கான மக்கள் இறப்பதற்குக் காரணமான கொடிய நோய்கள் இரண்டு. அவை யாவன, எயிட்ஸ் மற்றும் புற்றுநோயாகும். மனித சமுதாயத்துக்குச் சவாலாக இருக்கும் புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிகள் உலகின பல பகுதிகளிலும் தொடர்ந்து நிகழ்கின்றன.

இந்த ஆராய்ச்சிகளின் பயனாகப் புற்றுநோய் சிகிச்சையில் ஒரு வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் குறித்து மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு அதிநவீன பரிசோதனை முறைகள் மற்றும் சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள புதியமுறைகள் முன்னேற்றங்களால் இது சாத்தியமானது.

எனினும், பெரும்பாலான மக்களிடையே புற்றுநோய் ஒரு குணப்படுத்த முடியாதநோய் என்ற கருத்து நிலவுகிறது. இந்த நோயைப் பற்றி முழுவிவரமும் அறிந்து கொண்டால் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படும். புற்றுநோய் என்பது உடலில் உள்ள கலங்களின் கட்டுப்பாடற்ற அபரிமிதமான அல்லது அதீத வளர்ச்சியாகும்.

புற்றுநோய் கட்டிகளாகவும் இருக்கலாம் அல்லது ஆறாத புண்களாகவும் இருக்கலாம். புற்றுநோயில் பல வகைகள் உண்டு. தலை முதல் கால் வரை எந்தப் பாகத்தையும் தாக்கலாம். இருப்பினும் தலை மற்றும் கழுத்துப் பகுதியிலும் உணவுக் கால்வாயிலும், குருதியிலும், சுவாசப்பையிலும் வரும் புற்றுநோய் ஆண், பெண் இருபாலாரையும் கர்ப்பப்பை, சூலகம். மார்பகங்களில் ஏற்படும் புற்றுநோய் பெண்களையும் அதிகமாகத் தாக்குகின்றது.

**திருமதி. ந. சதானந்தி,**
**தாதியப் போதனாசிரியர்,**
**யாழ். தாதியர் கல்லூரி.**

**இதன் பொதுவான அபாய அறி குறிகளாவன:**

நாள்பட்ட ஆறாத புண்

மார்பகம் அல்லது வேறு உறுப்புக்களில் வலியுள்ள அல்லது வலியற்ற கட்டி,

உடலின் எப்பாகத்திலாவது நிறம் அல்லது உருவமாற்றம்

நாள்பட்ட இருமல் அல்லது குரல் மாற்றம்

உணவு உண்ணுதலில் தடை

உடலில் எந்தப் பகுதியிலாவது நீர் அல்லது இரத்தக் கசிவு

சிறுநீர், மலம் கழித்தல் போன்ற வழக்கங்களில் மாற்றம் போன்றவை அமையலாம் அல்லது ஏற்படலாம்.

இது எந்த வயதினரையும் தாக்கக்கூடியது. புற்றுநோய் ஒரு தொற்றுநோயல்ல. பெரும்பாலும் நாம் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களுமே நோய் ஏற்படக் காரணமாகின்றன. உதாரணமாக புகையிலை, புகைப்பிடித்தல், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு உண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

சிலவகைப்புற்று நோய் பரம்பரையாகவும் வருவதுண்டு. பெற்றோரில் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ இருந்தால் குழந்தைகளுக்கு இந்த நோய் வரும் வாய்ப்புக்கள் அதிகம். புற்றுநோய்




தொடக்க நிலையில் ஒருவரைப் பார்த்த உடனேயே அவர் புற்றுநோயாளி என்று கூறமுடியாது. முற்றிய நிலையில் ஏற்படும் சில குறிகளை வைத்து மட்டுமே அடையாளம் காணமுடியும். எனவே அவ்வப்போது பரிசோதனை செய்து கொள்வது ஒன்றுதான் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் வழியாகும். புற்றுநோய் ஏற்படக் குறிப்பிட்ட எந்தவொரு வகை உணவும் காரணம் என்று இதுவரை அறியப்படவில்லை. எனினும் நார்ச்சத்து அதிகமுள்ள பச்சைக் காய்கறிகள், பழங்களை அதிகளவில் சேர்த்துக் கொண்டால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் குறையும்.

நோயின் தொடக்க நிலையில் வலி அல்லது நோ இருக்காது. என்பு நரம்புகளில் பரவும்போது மட்டுமே வலி ஏற்படும். குருதிப் போக்கு இருந்தால் மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை பெறுவது அவசியம்.

சரியான முறையில் உரிய சிகிச்சை செய்தால் புற்று நோயாளியும் மற்றவர்கள் போல இயல்பாக வாழ முடியும். ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளித்தால் 80–90 வீதமான நோய்களை முற்றாகக் குணப்படுத்த முடியும்.

பெண்களுக்கு (Pap smea) சோதனை மூலம் கருப்பை வாய்ப் புற்றுநோய் கண்டறியப்பட்டால் அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை மூலம் முற்றாகக்குணப் படுத்த முடியும். புற்றுநோய்க்கு ஒழுங்காகச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்த ஒருவருக்கு ஐந்து ஆண்டுகள் வரை புற்று நோய் பாதிப்பு ஏற்படாமல் இருந்தால் அவருக்கு மீண்டும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. எனினும் சிலவகைப் புற்றுநோய் 10–20 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் வரவாய்ப்புண்டு. எனவே, முற்றிலும் குணமடைந்தாலும் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறைபரிசோதனை செய்தல் அவசியமாகும்.

**கருப்பை வாய்ப்புற்று நோய்**

போதியளவு விழிப்புணர்வு இல்லாதது. இளம் வயதில் திருமணம் செய்து பலமுறை கர்ப்பம் தரிப்பது கருத்தடை மாத்திரை அதிகளவு உபயோகித்தல், பல ஆண்களுடன் உறவு கொள்ளல், பிறப்புறுப்புக்களை சுத்தமாக வைக்காத காரணங்களால் இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

இதன்அறிகுறிகளாக, மாதவிடாயின்போது அதிக குருதி வெளியேறல், மாதவிடாய்க் காலப்பகுதியில் குருதி வெளியேறல், உடலுறவின் முன்பு, உடலுறவின் போது குருதி கசிதல் என்பன அமையலாம்.




இதனை ஆரம்பத் திலறிய எளிய பரிசோதனையாகிய (Papsmea) செய்யலாம். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு தடவை இந்தப் பரிசோதனை செய்தல் நன்று.

சிகிச்சையாக கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படும். நோய் நிலைக்கேற்ப அளவு காலம் என்பன மாறுபடும். மார்பகப் புற்றுநோய் என்பது வெறும் புற்றுநோய் மட்டுமல்ல. அது பெண்மை சம்பந்தப்பட்டதாகவும் பாலியல் சம்பந்தப்பட்டதாகவும் உடல் அழகுடன் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால் அது பெரும் துன்பத்தோடு மன உளைச்சலையும் கொடுக்கக்கூடிய நோயாகும். இது மார்பகத்தில் ஒரு சிறுகட்டியாக ஆரம்பித்து சிறிது சிறிதாக வளர்ந்து மார்பகத்தோல், முலைக்காம்புகளிடையே பரவுகின்றது.

நேரடியாக உட்புறமாக வளர்ந்து, மார்பகத்தின் பின்புறம் உள்ள தசைகளில் பரவுகிறது. அதுதவிர நிணநீர்வழியாக அக்குளிடையே பரவிப் பல நிணநீர் முடிச்சுக்களுள் பரவுகின்றது. அத்துடன் குருதியூடாக உடலில் பல பாகங்களுக்கும் பரவலாம்.

**பல ஆய்வு கள் மூலம் இது ஏற்பட மிக வாய்ப்புடையவர்களாக கருதப்படுவோர்.**

கருத்தடை மாத்திரை அதிகளவு உட்கொள்ளும் பெண்கள்

குழந்தை இல்லாத பெண்கள்

தாய்ப்பாலூட்டாதோர்

சிறுவயதில் பூப்படைந்தோர்

மிகத்தாமதமாக மாதவிடாய் நிற்பவர்கள்

குடும்பத்தில் தாய், சகோதரி புற்று நோயால் பாதிக்கப்பட்டோர்.

மது அருந்தும் பெண்கள்

கொழுப்புணவு அதிகம் உண்போர்

அசைவ உணவு உண்போர்

**இதன் அறிகுறிகளாக அமைவன:**

மார்பகக் கட்டி

முலைக்காம்பு வெடிப்பு

மார்பகத்தில் வீக்கம், வலி, நீர், இரத்தம் வடிதல் அல்லது கசிதல்

மார்பு பெருத்து இரு மார்பகங்களும் வெவ்வேறு நிலையில் இருத்தல்

முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வருடம் ஒருமுறையாவது மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனையும் மாதம் ஒரு தடவை சுயமார்புப் பரிசோதனையும் செய்தல் அவசியமாகும்.

இதன் சிகிச்சையாகக் கதிரியக்க சிகிச்சை அறுவை மருத்துவ சிகிச்சை செய்யப்படும். பொதுவாகப் புற்றுநோய்க்குமூன்று வகைச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.




கதிரியக்க சிகிச்சை

அறுவைச் சிகிச்சை,

மருத்துவ சிகிச்சை

புற்றுநோயாளிகளில் 80 வீதமான நோயாளிகளுக்குக் கதிரியக்க சிகிச்சை தேவைப்படுகின்றது. இது முதன்மைச் சிகிச்சைகளுடன் சேர்த்து நோயின் தன்மை அது பரவியிருக்கும் நிலைக்கு ஏற்ப அளிக்கப்படும்.

பத்துக்கும் மேற்பட்ட புற்றுநோய்கள் நம் நாட்டில் காணப்பட்டாலும் பெண்களை அதிகம் துன்புறுத்துவது கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியனவாகும்.

இருபாலாரையும் அதிகம் தாக்கக்கூடியது வாய்ப்புற்று நோயாகும். இந்த மூன்று வகைப் புற்று நோய்களும் மிகக் கொடிய உயிர்கொல்லிகள் என்றாலும் ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் குணப்படுத்தக் கூடியவையே

எனவே, இந்தப் புற்றுநோய் பற்றிய அபரிமிதமான விழிப்புணர்வே எம்மக்களை இந்தக் கொடிய நோயிலிருந்துவிடுவிக்க இலகு வான வழியாகும்.

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

பின்பு குவேனியைத் துரத்தி விடுகின்றான். குவேனி வீடு வாசல் இல்லாமல் அலைகின்றாள். அவளை இலங்கையில் ஆதிக் குடியினர் கொன்று விடுகின்றனர். விஜயன் பாண்டி நாட்டு மன்னனுக்கு பல வெகுமதிகளைக் கொடுத்து அங்கிருந்து பெண்களை வரவழைத்து மணந்து கொள்கிறான். இவ்வாறு 'மகாவம்சம்' என்ற பெயரில் புத்தபிக்குவால் எழுதப்பட்ட சிங்களவரின் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முற்பட்ட இலங்கை இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராவணன் அரசாண்ட "இலங்காபுரி" யாகவும் சீன வணிகர்களால் குறிப்பிடப்பட்ட செல்வம் கொழிக்கும் "தாமிரபரணி" யாகவும் விளங்குகின்றது. இதற்குப்பின் கி.மு 245ஆம் ஆண்டளவில் புத்தசமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

மகாவம்சம் என்ற சிங்களவரின் சரித்திரத்தில் கி.மு.237இல் தமிழர்கள் ஆட்சியைக் கைப்பற்றியது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நாளில் சிங்களவரின் போர்வீரர்கள் தமிழர்கள் தானாம். சேனன், குத்திலன் என்ற இரண்டு தமிழ்ப் போர்வீரர்கள் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைய்ற்றுகின்றனர். இருபது ஆண்டுகள் ஆட்சி புரிகின்றனர். பின்னர் இவர்களும் கொல்லப்படுகின்றனர்.

இதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாட்டில் இருந்து சோழ இளவரசனாகிய எல்லாளன் இலங்கைக் கரையில் தனது படைகளை இறக்கி தலை நகரை முற்றுகையிட்டு ஆட்சியைக் கைப்பற்றுகிறான். எல்லாளன் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிகின்றான். இவனின் ஆட்சியின் சிறப்புப் பற்றி மகாவம்சத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. தீவின் பலபாகங்களுக்கும் சிற்றரசர்களை நியமித்து கோட்டைகளை நிறுவி எல்லாளன் ஆட்சி புரிந்து வந்திருக்கிறான். இவனை எதிர்த்து துட்ட கைமுனு என்பவன் காடுகளில் பதுங்கி இருந்து படைகளைத் திரட்டிக் கொண்டு புறப்படுகின்றான். சிற்றரசர்களின் கோட்டைகளை ஒன்றன் பின் ஒன்றாக கைப்பற்றுகிறான். இவனுடைய படைகள் பெருகுகின்றன.

ஒரு சிற்றரசனை வெல்ல முடியாமல் போகவே தன் தாயை அர்ப்பணித்துவிட்டு அவனைக் கொல்கிறான். இவ்வாறு பல வருடங்கள் போர் நடக்கிறது. கடைசியாக துட்டகைமுனு அநுராதபுரத்தை அடைகின்றான்.

இங்கு நடந்தவற்றை மகாவம்சம் அழகாக கூறுகின்றது. எல்லாளன் பெரிய கோட்டை அமைத்திருந்தான். இந்தக் கோட்டைக்கு பெரிய இரும்புக் கதவுகள் போடப்பட்டிருந்தன. இந்த இரும்புக் கதவுகளை யானைகளை விட்டுத் தாக்குகிறான். இதில் துட்டகைமுனுவின் யாரன கன்துலவும் ஒன்று தமிழர்கள் கோட்டை மேலிருந்து உருக்கிய இரும்பை ஊற்றுகின்றனர். யானைகள் ஓடிப்போய் குளத்தில் விழுகின்றன. ஆயினும் தாக்குதல் தொடர்கிறது. சில வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு தாக்குதலை துட்டகை முனு ஆரம்பிக்கிறான். இதில் துட்ட கைமுனுவின் ஆட்கள் வெற்றிபெறுவது உறுதியாகின்றது. துட்டகைமுனு தானே எல்லாளனுடன் போரிடவேண்டுமென்று கோருகின்றான். எல்லாளனும் அந்தச் சவாலை ஏற்றுக் கொள்கிறான். துட்டகைமுனு தனது தந்த யானையால் எல்லாளனின் யானையை முட்டி மோதுகின்றான். யானையுடன் எல்லாளன் கீழே விழுகின்றான். இது கி.மு 204இல் நடக்கின்றது. துட்டகை முனு எல்லாளனுக்கு சகல மரியாதைகளும் கொடுத்து அடக்கம் செய்கின்றான். அவனது சமாதிக்கு எல்லோரும் தலை வணங்க வேண்டுமென்று கட்டளையிடுகின்றான். இந்தப் பழக்கம் சிங்களவரிடையே இன்னும் நிலவி வருகின்றது. ஆயினும் சிங்களத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு துட்டகை முனுவின் கதையைக் கூறுவார்கள். இதைத்தான் "துட்டகைமுனு இன்று எல்லாச் சிங்களவர் மனதிலும் வாழ்கின்றான்" என்று அரசுக்கட்சியினர் பாராளுமன்றத்தில் முழக்கமிட்டனர். அதாவது தமிழர்களை விரட்ட வேண்டுமென்ற அவா எல்லாச் சிங்களவர் மனதிலும் உண்டு என்பதுதான்.

இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் ஏறக்குறைய அறுபது வீதம் உள்ளனர். இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருமுன் சிங்கள அரசர்கள் பௌத்த மதத்தை போற்றி வந்தனர். இன்றைய ஆட்சியினரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின் புத்தபிக்குமாரின் மகாசங்கத் தலைமைப் பீடாதிபதியை தரிசிப்பார்கள். அவர் எந்தக் கட்சி புத்தசமயத்திற்கு அதிக சலுகை கொடுக்க முன்நிற்கிறது என்பதைப் பொறுத்து மக்களை ஆதரவு அளிக்கும்படி கோருவார். தேர்தலின் தலை விதியை அந்தக் கோரிக்கை நிர்ணயிக்கும். தமிழ் அரசனாகிய எல்லாளனை வென்று புத்த மதத்திற்கு மீண்டும் அதன் இடத்தை அளித்ததால் துட்டகை முனு மகாவம்சத்தில் சிங்கள இனத்தின் பாது காவலனென்றும் மாவீரனென்றும் உயர்த்தப்பட்டிருக்கிறான். இந்நூல் காலத்துக்கு காலம் ஆரம்பத்திலிருந்து திருத்தியும் கூட்டியும் குறைத்தும் எழுதப்பட்டு வந்திருக்கிறது.இது6ஆம் நூற்றாண்டில் வலபொலராகுல எனும் புத்த பிக்குவால் முதலில் எழுதப்பட்டதாக கூறப்படுகிறது.




ஆயினும் துட்டகைமுனுவின் முடிவும் பரிதாபகரமாகவே இருக்கின்றது.அவன் நாட்டைக் கைப்பற்றிய பின் புத்தபிக்குகள் அவனை சூழ்ந்து கொள்கிறார்கள். அவன் இறக்கும் தறுவாயில் அவனை கட்டிலுடன் கொண்டுபோய் இன்னும் கட்டி முடிக்கப்படாத நிலையிலிருந்த மகாபுத் தருவான் வலி எனும் தாதுகோபுரத்தைக் கட்டினார்கள். துட்டகைமுனு தன்னை சூழ்ந்து நின்ற புத்தபிக்குகளைப்பார்த்து" இருபத்து ஆண்டுகள் நான் குருபீடத்தைப்போற்றி பரிபாலித்து வந்துள்ளேன். இறந்துபோன என் உடலும் புத்தமதத்தின் பாதுகாவலருக்கு அடிமையாகவே இருந்து விடட்டும். ஆகவே உங்களுக்கு அடிமையான அவனுடைய உடலை எடுத்து நீங்கள் இந்த உப்பசீதை மண்டபத்தின் வளவில் புதைத்து விடுங்கள்" என்று கூறுகின்றான்.

துட்டகைமுனு இறந்தபிறகு அவனது சகோதரன் சதாதிச பதவியேற்கிறான். இவனுக்கும் அதேகதிதான். எட்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த பத்திதிச என்ற அரசன் செய்துகொண்ட தானம் மிகவும் விசித்திரமானதாக அமைந்திருக்கிறது. இவன் தன்னையும் தனது மனைவி மகாராணியையும் இரு மகள்மாரையும் தனது யானையையும் புத்தபிக்குமாருக்கு தானமாக வழங்கினானாம்.

மகாசேனன் என்பவன் அநுராதபுரத்திலுள்ள யட்டராம அல்லது கிழக்குத் தாது கோபுரத்தை கட்டியெழுப்பி அதனுடன் கட்டப்பட்ட விகாரைக்கு இந்த தாதுகோபுரத்தையும் அவன் கட்டிமுடித்த புதுமின்னேரியாக்குளத்தையும் அதனுடன் சேர்ந்த சுமார் எண்ணாயிரம் நீர்ப்பாசன வாய்க்கால்களையும் தானமாக அளிக்கின்றான்.

இவ்வாறு ஏராளமான காணிக்கைகளையும் பூந்தோட்டங்களையும் புத்தபிக்குகள் தானமாகப் பெறுகின்றார்கள். இவற்றிற்கு வரிகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுவது மாத்திரமல்ல இந்தக் காணிகளுக்கு சேர்ந்த கிராமவாசிகளிடமிருந்து அடிமை வேலை வாங்குவதற்கும் உரிமை கொடுக்கப்படுகின்றது.

சிங்கள அரசர்கள் புத்தபிக்குகளின் அபிலாசைகளுக்கு அடிமையாகி யார் அதிகம் வாரி வழங்கி தானம் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தே தங்கள் ஆட்சியின் பொறுப்பை எடைபோட்டுக் கொண்டார்கள் என்பது காணக்கூடியதாக உள்ளது.

ஆயினும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டப்படுவது போல இலங்கையின் வரலாறு இருந்ததற்கான சான்றுகள் மிகக் குறைவாகவே உள்ளன. 12ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் சிங்களமொழி என்ற மொழி இருக்கவேயில்லை. இதற்கு பிற்பட்ட காலத்தில்தான் தமிழ், பாளி, சமஸ்கிருதம், ஈழு எனப்படும் ஆதிக்குடிகளின் மொழி. இவை நான்கும் சேர்ந்து சிங்கள மொழி உருவாக்கம் பெற்றது. இதன் அடிப்படையில் பார்ப்போமானால் 2500 ஆண்டுகால சிங்களவரின் வரலாறு என்பது 18,19,20ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வாழ்ந்த வரலாற்றுப் புரட்டர்களின் கற்பனையில் உருவாகிய கட்டுக்கதை என்பது புலனாகின்றது.

அநுராதபுரத்தின் பெயரை கி.பி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோம புவியியலாளர் தொலமி ஆனுர்(பசுக்கள் நிறைந்த ஊர்) எனக் குறிப்பிடுகின்றார். அங்குள்ள மன்னன் இந்துவாக இருந்தான் எனக் குறிப்பிடுகிறார். கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் வாழ்ந்த சீனயாத்திரிகன் வகியான் அங்கு வாழ்ந்த பல இன மக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அங்குள்ள மன்னன் இந்துவாக இருந்தான் எனக் குறிப்பிடுகின்றார். சிங்கள இனத்தைப்பற்றியோ எவ்வித குறிப்பும் கிடையாது. அநுராதபுரத்தில் தமிழர்களே வாழ்பவர்களாகவும் ஆள்பவர்களாகவும் இருந்தார்களென றொபட் நொக்சு எனும் ஆங்கில யாத்திரிகன் 18ஆம் நூற்றாண்டில் அங்கு சென்றபோது கண்டதாக எழுதியுள்ளார்.

10ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழர் ஆட்சியின் பின்னும் முன்னும் அநுராபுரத்தில் தமிழாட்சியே இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் தமிழ் வட்டெழுத்துக்கள் எனப்படும் இன்றைய சிங்கள எழுத்துக்களால் எழுதப்பட்டு வந்தது. இது தென்னிந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட எழுத்து வடிவமே. இதே எழுத்துக்களால் பாணி, சமஸ்கிருதம், ஈழு இம்மொழிகளையும் எழுதினார்கள். 19ஆம் நூற்றாண்டின் கண்டி இராச்சிய காலம் வரை தமிழை இவ் வட்டெழுத்துக்களால் எழுதும் பழக்கம் இலங்கையில் இருந்து வந்துள்ளது.

தமிழ் பௌத்தநூல்கள் இவ்வட்டெழுத்துக்களால் எழுதப்பட்டு விகாரைகளில் இருந்த சுவடிகள் சிங்களநூல்கள் எனக் கருதப்பட்டு பின்னர் இவற்றை தமிழறிஞர்களும் ஒதுக்கிவிட்படியால் தமிழ் பௌத்த நூல்களை தமிழ்மக்கள் இழந்தனர். இதே போல் வட்டெழுத்துக்களால் எழுதப்பட்ட கல்வெட்டுக்களையும் சிங்களமென தமிழ் அறிஞர்கள் ஒதுக்கிவிட்டனர்.

மகாவம்சம் முதலில் 20ஆம் நூற்றாண்டில்தான் சிங்களத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது. இது பாளி மொழியில் எழுதப்பட்டிருந்தது. இது ஆரம்பத்தில் அநுராதபுரத்தை ஆண்ட பாண்டியர்களின் வம்ச வரலாறாக தமிழில் எழுதப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. பாளி மூல நூலிலிருந்தே 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

இலங்கை வரலாறு சிங்களவர்களின் வரலாறாக திரிக்கப்படுவதற்கு ஆங்கிலேயரும் ஒரு காரணமாக இருந்தனர். ஆங்கிலேயர் 19ஆம், 20ஆம் நூற்றாண்டில் உலக நாகரிகத்திற்கு பபேரியர்களே வித்திட்டவர் என உலக வரலாற்றை புரட்டியும் திரித்தும் எழுதி வந்தார்கள். இவ்வெண்ணம் பபேரிய இனங்கள் மத்தியில் இன்றும் நிலவி வருகிறது. இதில் சிங்களவர் தங்களையும் பபேரிய இனமாக ஆக்கிக்கொண்டு ஆங்கிலேயருடன் இணைந்து கொண்டு இலங்கையின் வரலாற்றையும் திரித்துப் புரட்டி இலங்கையின் தொன்மையான நாகரிகம் சிங்கள நாகரிகம் என மாற்றிவிட்டார்கள்.

அநுராதபுரத்தின் தொன்மையான வரலாறு பாண்டியர்களின் வரலாக உள்ளது. பின்னர் சோழர்கள் அதை 10ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினார்கள். பின்னர் மீண்டும் பாண்டியர்களின் கைகளுக்கு மாறியது. 12ஆம் நூற்றாண்டில் இருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தின் மேலாதிக்கத்திற்குட்பட்டது. இறுதிவரை முழு இலங்கை மீதான ஆட்சியுரிமை தமிழர்களிடமே இருந்து வந்துள்ளது. தமிழர் கொண்டிருந்த யாழ்ப்பாண இராட்சியத்தின் இறையாண்மையையும், கண்டி இராட்சியத்தின் இறையாண்மையையும் நேரடியாக போர்த்துக்கேயரிடமும் ஆங்கிலேயரிடமும் 17ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் கைமாறின.

இலங்கையில் நாகரீகத்திற்கு அடித்தளமாக தமிழரின் வரலாற்றை சிங்களவரின் வரலாறாக திரிப்பதில் மகாவம்சம் வெற்றிகண்டது. இந்த வரலாற்றுப் புரட்டு வேலைக்கு காரணமானவர்கள் சுமார் 250 வருடங்களுக்கு முன்னர் சியாம் என அழைக்கப்பட்ட இன்றைய தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட புத்த பிக்குகளே. இவர்களை அங்கிருந்து கொண்டு வரவேண்டிய தேவையேற்பட்டதின் காரணம் இலங்கையில் பௌத்த சமயம் முற்றாக அழிந்து போனமையே. இக்காலத்தில் சிங்களவர்கள் இந்துக்களாகவும் கத்தோலிக்கராகவும் மாறிவிட்டிருக்கின்றனர்.

(தொடரும் .....)

# உடல் பருமனைக் குறைக்க



உலகில் ஊட்டச்சத்துக் குறைவால் அவதிப்படுபவர்கள் ஒருபுறம் என்றால், உழைப்புக்கு மீறிய உணவின் காரணமாக அதிக உடல் எடையால் அவதிப்படுபவர்கள் மறுபுறம்.

சரி, உடல் பருமனானவர்கள், மெலிந்து அழகு பெறுவது எப்படி? அதற்கான வழிகள் சில...

சாதாரணமாக தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக சோம்பு கலந்த தண்ணீரைப் பருகி வந்தால் உடம்பில் உள்ள ஊளைச்சதை குறைந்து உடல் வடிவம் அழகு பெறும்.

சாப்பிடும் உணவில் பூண்டு, வெங்காயம் அதிகமாகச் சேர்த்து வந்தால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் குறைத்து உடலுக்குப் புத்துணர்ச்சி தரும்.

வாரத்துக்கு இரண்டு முறை சுரைக்காயை உணவில் சேர்த்து வந்தால் வயிற்றுச் சதை குறையும்.

மேலும் சதை போடுவதைத் தடுக்க வேண்டும் என்றால், தேநீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து காலையில் குடித்துவர வேண்டும்.

இதுதவிர, வாழைத்தண்டுச் சாறு, அறுகம்புல் சாறு இவற்றில் ஏதாவது ஒன்றைத் தொடர்ந்து பருகி வந்தாலும் ஊளைச்சதையைக் குறைக்கலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, காலையில் அரைமணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொண்டால் கொழுப்பு கரையும், உடல் எடை குறையும். புத்துணர்வாகவும் இருக்கும்.

சாப்பாட்டில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக் கொள்வது உடல் எடையைக் குறைக்க உதவும். கொள்ளு ரசம், கொள்ளு சுண்டல் போன்றவை செய்து சாப்பிடலாம். அதைவிட இரவில் ஒரு கைப்பிடி கொள்ளு எடுத்து தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்தவுடன் முதலில் அதைச் சாப்பிட்டால் நிச்சயம் எடையைக் குறைக்கலாம்.

# கர்ப்ப காலமும் குங்குமப்பூவும்

கர்ப்பிணி பெண்களுக்கு சிறிது குங்குமப்பூவினை பாலில் சேர்த்து பருகச் செய்தால் குழந்தை நல்ல நிறமாக பிறக்கும் என்றதொரு நம்பிக்கை உண்டு.

எந்த தாய்க்குத்தான் தன் குழந்தை நல்ல நிறத்தோடு பிறக்க வேண்டும் என்ற ஆசை இருக்காது. ஆனால் அப்படி நடக்குமா? இதுவரை விஞ்ஞானபூர்வமாக இது நிரூபிக்கப்படவில்லை.

முன்னோர்களின் வழிகாட்டுதலாகவே இருந்துள்ளது. பொதுவில் குங்குமப்பூ சிறிதளவு எடுத்துக் கொள்ளலாம். அதிக அளவு குங்குமப்பூ கர்ப்ப காலத்தில் கூடாது. சிட்டிகை அளவு கர்ப்ப காலத்தில் குங்குமப்பூ எடுத்துக் கொள்ளலாம். அதிக அளவு என்பது பிரசவ வலியினை அதாவது கர்ப்பப்பை சுருங்கி விரிவதனை உருவாக்கும். அது குறைப் பிரசவத்தில் முடியலாம்.

ஆனால் 2, 3 துண்டுகள் எடுத்துக் கொள்வதில் பிரச்சினை இருக்காது. இருப்பினும் இதனை மருத்துவர் ஆலோசனைப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். 2, 3 என்ற எண்ணிக்கை அளவில் 50 கிராம் சுடுபாலில் நன்கு இதனை ஊறவைத்து 20 நிமிடங்கள் சென்று இத்துடன் ஒரு கிளாஸ் பால் சேர்த்து சாப்பிட வேண்டும். அநேக இனிப்பு, சூப், சாதம் வகைகளிலும் குங்குமப்பூ சேர்க்கப்படுவதுண்டு.

அதனை அளவோடு சேர்ப்பதே நல்லது. பிரசவ வலி ஏற்படும் பொழுது குங்குமப்பூ 10 கிராம் அளவு சோம்பு நீருடன் கலந்து கொடுத்தால் சுகப்பிரசவம் நடக்கும் என்பதனை வீட்டு வைத்தியமாக நடைமுறையில் வைத்துள்ளனர். கருப்பை சுருங்கி விரியும் தன்மை குங்குமப்பூவிற்கு உண்டு என்ற மருத்துவ குணத்தினை வைத்தே இது பழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

# நன்றாக மீன்கள் சாப்பிடுங்கள்



முறையற்ற உணவுப்பழக்கம், உடல் பருமன் ஆகியவற்றால் பெண்களுக்கு இதயநோய் ஏற்படுவது அதிகரித்து வருகிறது. அவர்கள் மீன் உணவுகளை உண்பதன் மூலம் இதயநோயில் இருந்து தப்பிக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**ஓமேகா கொழுப்பு அமிலம்**

மீன்களில் ஓமேகா கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இது ரத்தத்தில் உள்ள கொழுப்புகளை கரைக்க உதவுகிறது. கெட்ட கொழுப்பு ரத்த நாளங்களில் படிவதைத் தடுக்கிறது.

இதன் மூலம் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவது குறைகிறது. இதனாலேயே இதயநோய் பாதிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

**வயதான பெண்களுக்கு**

மீன் உணவு வகைகளை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் வயதான பெண்களுக்கு ஏற்படும் இதயநோய் அபாயம் குறைகிறது என புதிய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

வறுத்த மீனை சாப்பிடுவதை காட்டிலும், இதர முறையில் சமைத்து சாப்பிடும் மீன் உணவே நல்ல பலனைத் தருகிறது. குறைவாக ஓவன் முறையில் சூடுபடுத்தப்பட்ட மீன் உணவு வகைகளை சாப்பிடுபவர்களுக்கு இதய நோய் பாதிப்பு 30 சதவீதம் குறைந்திருக்கிறது.

இத்தகைய உணவு முறையை கடைபிடிக்காதவர்களை ஒப்பிடுகையில் பொரிக்காத மீன்களை சாப்பிட்டு வந்தவர்களை நல்ல உடல்நிலையுடன் இருப்பது தெரியவந்தது.

ஓவனில் பதப்படுத்தப்பட்டு சூடு செய்யப்பட்ட மீன் உணவுகளை சாப்பிடுவது நல்ல பலனைத் தரும். மீன்களை வறுத்து சாப்பிடுவதால் மீன் சத்துகள் கிடைக்காமல் போகும். வறுத்த மீனை வாரம் ஒருமுறை சாப்பிடுவதால் இதய நோய் பாதிப்பு 48 சதவீதம் கூடுதல் ஆகிறது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

# குழந்தைகள் சொல்வதைக் கேளுங்கள்



குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமை பற்றியும் அவர்களின் உரிமை பற்றியும் நிறையத் தெரிந்துகொள்வதன் மூலம் உங்கள் குடும்பத்திலும் அக்கம்பக்கத்திலும் உள்ள குழந்தைகளை உங்களால் பாதுகாக்க முடியும்.

குழந்தைகள் உங்களிடம் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டு மனதில் இருத்துங்கள்.

பாலியல் கொடுமைகள் நடப்பதற்கு நீங்கள் எந்த வகையிலேனும் காரணமாக இருக்கிறீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள்.

குழந்தைகள் எங்கேயும் எப்போதும் பத்திரமாக உணர்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்று அறிவுறுத்துங்கள். உங்களுடன் பணியாற்றுபவர்களோடும், நண்பர்களோடும், உறவினர்களோடும் மற்ற எல்லோரோடும் பேசுங்கள்.

குழந்தைக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றிய மௌனத்தைக் கலையுங்கள். குழந்தைகளுக்கு அறிவுறுத்துவதற்காகவும் கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குக் கை கொடுங்கள். பெரும்பாலும் கொடுமை நடந்த பிறகே அது வெளியே தெரியவருகிறது.

குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி என்று கற்றுக்கொடுக்கும்படியும் அவர்களைப் பாதுகாக்கும்படியான திட்டங்களை மேற்கொள்ளும்படியும் பள்ளிகளிடம் எடுத்துக்கூறுங்கள்.

ஒரு குழந்தை கொடுமைக்கு ஆளாவதாகத் தெரியவந்தால் அதற்கு உதவி அளியுங்கள். உடனே தொழில்முறையிலான உதவியை நாடுங்கள்.

குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராகச் செயற்படும் நிறுவனங்களின் நடவடிக்கைகளில் நீங்களாக முன்வந்து பங்குகொள்ளுங்கள்.

# அன்னையரே கவனியுங்கள்

பெண்களின் வாழ்க்கையில் ரீன் ஏஜ் என்பது வசந்தகாலம் போன்றது. பொதுவாக, 13–19 வயது வரையிலான பருவத்தை ரீன் ஏஜ் என்கிறோம். இந்த, ரீன் ஏஜ் பருவம் பெண்களின் வாழ்வில் முக்கியமான காலகட்டம்.

இந்த காலகட்டத்தில், பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு மாறுதல்களை சந்திக்கின்றனர். அதனால், தாய்மார்களாகிய நீங்கள், குழந்தைப் பருவத்தில் எவ்வளவு அக்கறையோடு கவனித்துக் கொண்டீர்களோ அதேபோல், இந்தப் பருவத்திலும், கவனிக்க வேண்டியது அவசியம். தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு அவர்களது உடல் வளர்ச்சி பற்றி நிச்சயமாக சொல்லித் தரவேண்டும்.

உடல் உறுப்பு வளர்ச்சி மாற்றத்தால், உணர்வுபூர்வமாக பல விதமான உளைச்சலுக்கு ஆளாகின்றனர். அதனால், இந்த பருவத்தில் எல்லோருக்கும் இப்படித்தான் உடல் வளர்ச்சி இருக்கும். பெற்றோர் எடுத்துக் கூறுவது அவசியம். அதோடு, வெளியிடங்களில், தங்களை பாதுகாத்துக் கொள்வது பற்றியும் கூற வேண்டும்.

வேலைக்குச்செல்லும் தாய்மார்கள் தங்களின், ரீன் ஏஜ் பெண்களுடன் தினமும் சிறிது நேரமாவது கட்டாயமாக செலவழிக்க வேண்டும். அவர்களது உடல்நலம், சந்தேகங்கள், படிப்பு பற்றி மனம் விட்டு பேச வேண்டும். இது, அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பதுடன், தாயுடனான நெருக்கத்தையும், பாசத்தையும் மேம்படுத்தும்.

இந்த வயதுக்கே உரிய பல்வேறு பிரச்சனைகளால் ரீன் ஏஜ் குழந்தைகள், பொதுவாக அதிகம் சாப்பிடமாட்டார்கள்.

இதனால், ரத்த சோகை ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றை சரிப்படுத்துவதுடன், மோகுளோபின் அளவை, 10இற்கு மேல் வைத்துக் கொண்டால், படிப்பில் முன்னேற்றம், வேலையில் சுறு சுறுப்பு, அவர்களது உடல் ஆரோக்கியம் மேம்படும்

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# 14 நாடுகளின் உதவியுடன்...

தமது வர்க்க ஆட்சிக்கு பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தொடுக்கப்படும் எந்தவொரு அச்சுறுத்தல் சவால்களுக்கும் முகம்கொடுப்பதற்காக தற்காலிகமாக முரண்பாடுகளை ஒதுக்கிவிட்டு முதலாளி வர்க்கம் ஐக்கியப்படுவது எப்படியென்பது இதில் சிறந்த உதாரணமாகும்.

அதேபோன்று இப்போராட்டத்தின்போது இலங்கையின் பழைய இடதுசாரி சந்தர்ப்பவாத கட்சிகளும் இளைஞர்களின் எழுச்சியை அடக்குவதற்காக முதலாளித்துவ அரசாங்கத்திற்கு உயர்ந்தபட்ச ஆதரவினை வழங்கியது. அதன்போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அதன் அங்கத்தவர்கள் அடங்கிய “ரெட் பிரிகேட்” எனும் தொண்டர் அணியை உருவாக்கி பொலிசை பாதுக்காக்கவும் கிராமங்களில் இருந்த ஜேவிபி தொண்டர்களைப் பொலிசுக்கு காட்டிக்கொடுக்கவும் பயன்படுத்தியது. இலங்கை சமசமாஜக் கட்சியும் “NSR” (அன்னப் படை) எனும் பெயரில் தொண்டர் படையொன்றை அமைத்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு பயன்படுத்தியது. சிவப்பு போர்வையைப் போர்த்திக்கொண்டு இடதுசாரி சுலோகங்களை உச்சரித்துக்கொண்டு இருந்தவர்கள் தீர்க்கமான கட்டத்தில் சந்தர்ப்பவாதத்தைத் தமது இருப்பிடமாக கொண்டு முதலாளித்துவ முறையைத் தேர்ந்தெடுக்கும் என்பது உலக அனுபவங்களிலும் இலங்கை அனுபவங்களிலும் உள்ளடங்கியுள்ளன. இது மீண்டும் எமக்கு 1988 –89 காலங்களிலும் காணமுடி யும்.

ஆளும் வர்க்கமும் சந்தர்ப்ப வாதிகளும் ஒன்றிணைந்து போராட்டத்தை நசுக்கும் போது, போராட்டம் தோல்வியடையும் போது எந்தவொரு போராட்டமும் தோல் வியடையும்போது அதனுள் எழுகின்ற அரசியல் யதார்த்தம் இங்கு காணக்கூடியதாயிருந்தது. அது காட்டிக்கொடுப்பவர்களும் துரோகிகளும் உருவாவதாகும். உயிரைப் பாதுகாக்கும் ஆசை, புரட்சி பற்றிய நம்பிக்கையிழத்தல் போன்ற காரணங்கள் இப்போக்கினுள் தோன்றுகின்றன. 1971இலும் லொக்கு அத்துல உள்ளிட்ட பெருந்தொகையானோர் துரோகிகளாகவும் காட்டிக் கொடுப்பவர்களாகவும் மாறினர்.

அதேபோன்று போராட்டம் வீரர்களையும் உருவாக்கியது. 1971 போராட்டத்தில் போராடி உயிர்நீத்த பலர் நினைத்துப்பார்க்க முடியாதளவு போர்க்குணத்தையும், அஞ்சா நெஞ்சுறுதியுடன், தமது வீரத்தையும் வெளிப்படுத்தினர். அதற்கு அவர்களின் ஆத்மார்தத்திலிருந்த திடமான நம்பிக்கை உதவியாக இருந்தது. மரணத்தின் முன்னால் மண்டியிடாது உண்மையான வீரர்களாக உயிரத் தியாகம் செய்த வர்களில் ஒருசிலரின் பெயர்களை எம்மால் நினைத்துப்பார்க்க முடியும்.

**போராட்டத்தில் வீர மரணம டைந்த தோழர்கள்...**

1971 போராட்டத்தின் பின்னர் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் தோழர் ரோகண விஜேவீரவினால் முன்வைக்கப்பட்ட எழுத்து மூல வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பிற்காலத்தில் அச்சிடப்பட்ட“எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது” எனும் நூலில் தோழர் ரோகண விஜேவீர இவ்வாறு விபரித்துள்ளார். கிரிந்த பண்ணையிலிருந்து என்னுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த தோழர் தொடங்கொட கமலபந்து பத்தேகம பொலிசில் மரம் அறுக்கும் மின்சாரத்தில் இயங்கும் வாளால் கொஞ்சம் கொஞ்சமாக உடலை அறுத்து ஒப்புதல் வாக்குமூலமளிக்கும்படி வற்புறுத்தியபோது அவர் மரணத்தை தேர்ந்தெடுத்தமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல. அதேபோன்று, உனகஸ்வில தோழர் அனுர வெல்லவாய பொலிஸ் கொலைகாரர்கள் முன்னால் நாகரிகமான முறையில் உண்மையைக் கக்குவதை நிராகரித்து சித்திரவதைகளைத் தாங்கிக் கொண்டு மரணத்தை தெரிவுசெய்தது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. நொச்சியாகமை தோழர் ரத்நாயக்க ஒப்புதல் வாக்குமூலத்தை மறுத்து சித்திரவதைகளை அனுபவித்து குற்றுயிராக பொலிஸ் வாகனத்தின் பொனட் மீது துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் மக்கள் விடுதலை முன்னணி வாழ்க என முழக்கமிட்டு உயிர்நீத்ததை அனுராதபுரத்து வாழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். தெல்தெனிய தோழர் சிசிர வீரக்கோன் பொலிஸ் கொலைகாரர்கள் முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதை நிராகரித்து நத்தரம்பொத்த பாலத்தின் மீது துப்பாக்கியால் சுடப்பட்டபோது மரணத்தைத் தேர்ந்தெடுத்தது மலைநாட்டு மக்களுக்குத் தெரியும். வெலிகமையில் தோழர் கமகே ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து அதற்குப் பதிலாக வெலிகமை பொலிசிக்கு பின்புறத்தில் தனது கையால் தோண்டப்பட்ட சவக்குழியில் மரணத்தைத் தேர்தெடுத்த அவரது புகழைப் பாடாதவர்கள் வெலிகமையில் கிடையாது. திக்வெல்லை பொல்காமுல்லையில் தோழர் சுரவீர அவரது எலும்புகள் பொலிஸ் கொலைகாரர்களால் முறிக்கப்பட்டிருந்தபோதும் ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து மரணத்தை தேர்ந்தெடுத்தமை வெலிகமை மக்களுக்குத் தெரியாத விடயமல்ல. தங்காலையில் கொடவான்கொடை தோழர் சனி ஆரியதிலக பலாங்கொடை பொலிசால் தொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை நிராகரித்து ஒரு வார்த்தை கூட பேசாது சகலவிதமான சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்டு எல்லேபொலவின் சுலோகமொன்றை உச்சரித்த வண்ணம் துப்பாக்கி ரவைகளைத் தனது நெஞ்சில் தாங்கிக்கொண்டமை பலங்கொடை வாழ்மக்களுக்கு நன்றாகத் தெரியும். அது போராட்டத்தின் போது வீரத்தை வெளிப்படுத்திய தமது சகாக்கள் பற்றி தோழர் ரோகண விஜேவீர கூறிய வாக்கியங்களாகும். கதிர்காமம் பிரேமவத்தி மனம்பேரியும் இவ்வாறு சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களில் அடங்குவார்.

(தொடரும்)

## மா சே துங்



ஒவ்வொரு முரண்பாடும் அதனது ஒவ்வொரு அம்சங்களும் அவற்றுக்குரிய முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. இதுவே முரண்பாட்டின் குறிப்பிடத்தக்கதும், தொடர்பானதுமான இயல்புகளாகும். குறிக்கப்பட்ட சூழ்நிலைகளில் எதிர் எதிரானவை அடையாளங்களைக் கொண்டிருப்பதோடு அதன் விளைவாக கரு உட்பொருளில் ஒன்று சேர்ந்து இயங்கக்கூடியவை. ஆனால் எதிர் எதிரானவற்றின் போராட்டம் முடிவற்றது. இது எதிர் எதிரானவை. ஒன்று சேர்ந்து இயங்கும் போதும் அவை மாற்றமடையும் போதும் தொடர்ந்து இடம்பெறு கிறது. அவை வேறொன்றாக மாற்றமடையும் போது விசேடமாகத் தெளிவாகத் தெரியும். முரண்பாட்டின் குறிப்பிட்ட தன்மை, தொடர்பான தன்மை என்பவற்றைப் படிக்கும் போது பிரதான முரண்பாடு, பிரதானமற்ற முரண்பாடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளில் கவனம் செலுத்த வேண்டும். முரண்பாட்டின் சர்வ உலகத் தன்மை பற்றிப் படிக்கும் போதும் முரண்பாட்டின் எதிர் எதிரானவற்றின் போராட்டம் பற்றிப் படிக்கும் போதும் போராட்டத்தின் வேறு பாடுகள் மீது கவனம் கொள்ள வேண்டும்



# சிறுநீரக கடத்தல் மையமாக இலங்கை பலிக்கடாவாகும் மலையக இளைஞர்கள்

இலங்கை சிறுநீரக கடத்தல் மையமாக செயற்பட்டு வருவதாக வெளிவரும் செய்திகள் இன்று பரபரப்பாக பேசப்படும் ஒன்றாகவுள்ளது.

இந்தியாவில் சிலர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலமாக இலங்கை மருத்துவர்கள் இதில் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள ஆறு இலங்கை மருத்துவர்கள் குறித்தும், சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நடைபெறும் நான்கு தனியார் மருத்துவமனைகள் குறித்தும் இந்திய பொலிஸாரால் இலங்கைக்கு தெரியப்பட்டுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தற்போது இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இது பற்றி விசாரணை நடத்த சுகாதார அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்திய பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ள இலங்கை வைத்தியர்கள் ஆறு பேர் குறித்து சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்த தனியார் வைத்தியசாலைகளுக்கு சென்று இக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவார காலத்திற்குள் உடனடியாக சுகாதார அமைச்சிற்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால அந்த குழுவிற்கு பணித்துள்ளார். அத்துடன், இலங்கையில் தனியார் மற்றும் அரச வைத்தியசாலைகளில் வெளிநாட்டு பிரஜைகளுக்கு சிறுநீரக சத்திரசிகிச்சை மேற்கொள்வது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, விதிமுறையை மீறி சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை மேற்கொள்கின்ற இலங்கை வைத்தியர்கள் ஆறு பேருக்கு எதிராக இந்தியாவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து இந்தியத் தரப்பிலிருந்து பல தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை மருத்துவர்களை பயன்படுத்துகின்ற கும்பலின் தலைவர் அடங்கலாக மூவர் அஹமதாபாத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கைதானவர்கள் வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே மேற்படி




தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் இந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவிலிருந்து, பணத்தைக் காட்டி பலரை ஏமாற்றி, அவர்களை இலங்கைக்கு அனுப்பி, அவர்களிடமிருந்து சிறுநீரகத்தை பெற்றுக்கொள்வதாகவும், இந்தியாவைச் சேர்ந்த சுரேஷ் பிரஜாபனி என்ற பெயருடைய 35 வயது நபரே சிறுநீரக வழங்குனர்களையும் அதனை பெறுபவர்களையும் இலங்கைக்கு அனுப்புவதாகவும், அவர் இவ்வாறு 60 சிறுநீரக வழங்குனர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக இந்திய பொலிஸ் தரப்பு தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்துடன், சிறுநீரகங்களை வழங்கும் நபர் ஒருவருக்கு 5 இலட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு சிறு நீரகம் இந்திய ரூபா பெறுமதியின் பிரகாரம் 30 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளதாக இந்திய பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு சிறுநீரகங்கள் மற்றும் உடல் உறுப்புகளை கடத்தும் முக்கிய மையங்களில் ஒன்றாக இலங்கை உள்ளது என 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் உறுப்பு தானங்களில் பெரும்பாலானவை திருட்டுத் தானங்களே என்றும், அவை பணத்திற்காகவே செய்யப்படுகின்றன என்றும் அந்தப் பத்திரிகை சாடியுள்ளது. இலங்கை போன்று சீனா, எகிப்து, இந்தியா, பாகிஸ்தான், துருக்கி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் உடல் உறுப்புகளைப் பெறும் – கடத்தும் மையங்களாக உள்ளன என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சிலர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு சிறுநீரகம் பெறப்படுவது ஒருபுறமிருக்க, இலங்கையில் வாழும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் பலர் ஏமாற்றப்பட்டு, அவர்களின் சிறுநீரகங்கள் மோசடியாக பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றமை கவலைக்குரியதும், அதிர்ச்சியளிப்பதுமான விடயமாகும்.

அவர்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக சில தரகர்கள் மலையகத்தின் தோட்டப் பகுதிகளில் வாழும் இளைஞர்களை குறிவைத்து வருகின்றனர். சிறுநீரகத்தை வழங்குவதன் மூலம் பெரிய தொகை பணம் கிடைக்கும் எனவும், வெளிநாடுகளிலுள்ள வர்களுக்கு அதனை வழங்குவதன் மூலம் அவர்களின் உதவியால் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடிய வாய்ப்புகளைப் பெறலாம் என்றும் அவர்களிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி அந்த இளைஞர்கள் பலிக்கடாக்களாக்கப் படுகின்றனர்.

மலையக இளைஞர்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு, அவர்களிடமிருந்து சிறுநீரகங்களைப் பெறுவது தொடர்பில் விபரங்கள் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஆனால், இலங்கையில் இடம்பெறும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளை, சட்டவிரோத சிறுநீரக மாற்று நடவடிக்கைகளாக கூறுவதில் உண்மையில்லை எனத் தெரிவித்து, மேற்படி குற்றச்சாட்டுக்களை இலங்கை மருத்துவர்கள் மறுத்து வருகின்றனர்.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற சட்டவிரோத சிறுநீரக மாற்று நடவடிக்கைகள் குறித்த செய்திகள் இலங்கையின் சுகாதாரத்துறை கண்டுள்ள முன்னேற்றத்தை சேதப்படுத்தும் நோக்குடன் இந்திய பொலிஸார் உருவாக்கிய ஒன்று என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறுகின்றது.

எது எவ்வாறாயினும், இலங்கை சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் குறித்த காலத்திற்குள் நிறைவு பெற்று இவ்விடயம் தொடர்பில் முறையான விடை கிடைக்கப்பெற வேண்டும். அத்துடன் மலையக இளைஞர்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி சிறுநீரகத்திற்காக அவர்கள் வேட்டையாடப்படுகின்ற நிலைமையை மலையகத் தலைமைகள் உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விஸ்வா

# பொது சுகாதார பரிசோதகரின் மோ. சைக்கிள்கள் தீக்கிரை



இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு 11.00 மணியளவில் இடம் பெற்றிருக்கலாமென பொது சுகாதாரபரிசோதகர் தெரிவித்தார். கல்லடி பிரதேசத் திற்குப் பொறுப்பான பொது சுகாதார பிரிசோதகரான எஸ்.ஜெய்சங்கர் என்பவரின் வீட் டிலேயே இச்சம்பவம் இடம பெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற வேளை பொது சுகாதார பிரோதகர் வீட்டில் இருக்கவில்லை என தெரிய வருகிறது.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குடா மேல்மாடி வீதியிலுள்ள பொது சுகாதார பரிசோதகர் ஒருவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருமோட்டார் சைக்கிள்கள் இனந் தெரியாதநபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர். இதனால் குறித்த மோட்டார் சைக்கிள்கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான் குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகரி ஏ.பீ.வெதகெதர தலைமையிலான பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டனர்.

# 25 வருடங்களின் பின்னர் பேருந்து சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

சுமார் 25 வருடங்களின் பின்னர் யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற் குட்பட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான நெல்லூரிலிருந்து - மட்டக்களப்பிற்கு பஸ் சேவை அண்மையில் ஆரம்பமானது.

பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்ஸ்ரீநேசன் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு சாலைமினால் இச்சேவையை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்புசாலை முகாமையாளர் துரை மனோகரன் தலைமையில் நெல்லூர் கிராமத்திலிருந்து இச்சேவை ஆரம்பித்து வைக்கப் பட்டது. இலங்கை போக்குவரத்துச்சபையின் கிழக்கு பிராந்திய செயலாற்றுப்பணிப்பாளர் எஸ். கனகசுந்தரம் பிரதியமைச்சர் அமீர் அலியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.லோகநாதன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

காலை 6.15 மணிக்கு நெல்லூரிலிருந்து ஆரம்பமாகும் இச்சேவை நரிப்புல் தோட்டம், கரடியனாறு, மகிழவெட்டுவான் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச்செல்லும். அதன் பின்னர் அவ்வழியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பொது மக்களை ஏற்றி வரும் பேருந்து பகல் 1.00 மணிக்கு செங்கலடியிலிருந்து மீண்டும் நெல்லூர் சென்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும். பிற்பகல் 4.00 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிவரும் குறித்த பேருந்து மட்டக்களப்பிலிருந்து நெல்லூர் சென்று இரவில் அங்கு தரித்திருந்து காலையில் மீண்டும் பாடசாலை சேவையில் ஈடுபடும்.

நீண்டகாலத்திற்குப்பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை குறித்து மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# மாதர் அபிவிருத்தித் திணைக்களத்தின் கைப்பணிக் கண்காட்சியும், விற்பனையும்

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் மாதர் அபிவிருத்தி பயிற்சி நெறிக்கான கைப்பணிப் பொருட்கண்காட்சியும், விற்பனையும் அண்மையில் இடம்பெற்றது .

தெரிவு செய்து அவர்களுக்கான ஒருவருட டிப்ளோமா பயிற்சி நெறியினை வழங்கி அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கின்ற வகையில் செயற்பட்டு வருகின்றது .

காட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களின் கண் காட்சியும், விற்பனையும் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவி ருத்தி அலுவலகத்தில் இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களம் ஆண்டு தோறும் படித்துவிட்டு வேலையற்று இருக்கின்ற யுவதிகளை

அந்த வகையில் 2015ஆம் ஆண்டு பயிற்சி நெறிகளை நிறைவு செய்துகொண்டு வெளியேறும் யுவதிகளின் திறமைகளை வெளிக்

இந்நிகழ்வினை மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதிமாலதி மகேஸ்வரன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி, தவராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.மோகன் பிரேம்குமார், மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ். அருண்மொழி, மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராமசேவையாளர்கள் நலன்புரி சங்கத் தலைவர் எஸ்.தில்லைநாதன், கிராம சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பயிற்சிகளை நிறைவு செய்த யுவதிகளும் கலந்துகொண்டனர்.


**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

*தொடர்புகளுக்கு :*

**தில்லைகட்டி லேன், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

**தொலைபேசி : 021 7539300**

**தொலைநகல் : 021 7539300**

**இணையம் : thinacheithi@gmail.com**


# சுதந்திர தினத்தில் மட்டுவில் மறியல் போர்



68ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு நகரில் காணாமற் போனோரின் உறவினர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டங்களை நடாத்தினர்.

மட்டக்களப்பு காணாற்போனோரின் உறவினர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இவ்ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் இடம் பெற்றது. சங்கத்தின் தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

காணாமற் போன உறவினர்களை கண் டுபிடித்து தருமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும் ஆர்பாட்டம் இடம்பெற்ற இடத்தில் காணப்பட்டனர்.

# மட்டு சிறையிலிருந்து 8 கைதிகள் விடுதலை



இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின்கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 8 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறுதண்டனைகளை அனுபவித்து வந்த 5 ஆண் சிறைக் கைதிகளும் 3 பெண் கைதிகளுமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் பீ.எம்.அக்பர் தெரிவித்தார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை தொடர்பான நிகழ்வில் சமய நிகழ்வுகளும் இம்பெற்றன.

# சம்பந்தன் கண்களில் ஆனந்தக் கண்ணீர்

## "ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா தாயே நமோ நமோ தாயே"

### தேசிய கீதம் – தமிழில்

ஸ்ரீ லங்கா தாயே – நம் ஸ்ரீலங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே – நம் ஸ்ரீலங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே – நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதோர் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே – நம் லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

தமிழில் தேசியகீதம் காலி முகத் திடலில் ஓங்கி ஒலித்தது !

பிரமித்துப்போய், சகலரும் எழுந்து நின்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ வின் பாரியார் ஹேமா பிரேமதாஸ வின் அருகில், நின்று கொண்டிருந்த தமிழ் மக்களின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான சம்பந்தன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய, தமிழில் பாடிய தேசிய கீதத் தைக் கேட்டு மகிழ்ந்தார். இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ் வாகும்.



முதன் முதலில் இலங்கை சுதந் திரம் பெற்று, சுதந்திரதினம் 1949 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட போது, தமிழில் தேசியகீதம் இசைக்கப் பட்டது. அன்றைய தினம், கொழும்பு டொரிங்டனிலுள்ள சுதந்திர சதுக் கத்தில் நடைபெற்ற முதல் சுதந்திர தின விழாவின் போது, பிற்பகல் நான்கு மணிக்கு தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அதன் பின்னர், தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படவே இல்லை. சென்ற சில வருடங்களுக்கு முன்பு தொடக்கம், தமிழில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்ற கோரிக்கை மேலோங்கியது. ஆனால் மகிந்த தலைமையி லிருந்த அரசாங்கம் அந்தக் கோரிக்கையை மழுங்கடிக்கச் செய்தது.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லிணக்க ஆட்சியில், தமிழில் தேசிய கீதம் மீண்டும் இசைக்கப்படுவதற்கு மந்திரி சபை அங்கீகாரம் வழங்கிற்று.

அதையடுத்து, முதன் முதலில் தமிழில் தேசிய கீதம் இம்முறை நடைபெற்ற 68 ஆவது சுதந்திர தினத்தன்று காலிமுகத்திடத்தில் ஒலித்தது. வானொலி, தொலைக்காட்சி பூராக நாடு முழுவதும் ஒலித்தது.

68 ஆவது சுதந்திர தினத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசியக் கொடி ஏற்றியதன் பின், சிங்கள மொழியில் தேசிய கீதமும் அதையடுத்து, "ஜயமங்கள" பாடலும் பாடப்பட்டன.

அப்போது எதிர்பார்க்கப்பட்டவாறு, தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படாதது ஏமாற் றத்தை அளித்தது. குறிப்பாகத் தமிழ் மக்கள் ஏமாற்றமும், வருத்தமும் அடைந்தனர்.

நிகழ்ச்சி நிரலுக்கு அமைய, அனைத்து நிகழ்வு களும் நிறைவடைந்த பின்னர் அனைவரும் எழுந்து நிற்குமாறு அறிவிக்கப்பட்டது. தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இது ஓர் இன்ப அதிர்ச்சியாகும்.

சிறிய ஒரு செயல். ஆனால், பாரிய ஒரு ஒற்றுமை உணர்வையும், சகவாழ்வையும் உணர வித்திட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டணியினர், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமையை பெரிதும் வரவேற்றுள்ளனர்.



இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை உணர்த்த இது ஒரு மிகப் பெரிய முயற்சி எனத், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச் சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கரமசிங்க, பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் சுதந்திர தின விழாவில் பங்குபற்றிய அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சி மூலம், இந்த நாட்டின் பங்காளியாகத் தமிழனும் இருக்கின்றான் என்பதை உலகிற்கு உணர்த்திற்று.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பெப். 07, 2016 அன்று வெளியிடப்பட்டது.